மஞ்சரி

கர - மாசி

சென்னை டெஸ்ட்:
ஆட்டக்காரர்கள் யார் யார்?

ஆப்பிரிக்காவில் இந்து நாகரிகம்

புதிய சீனாவில் சம்பளம்

மனத்தத்துவ நிபுணர்
(சிறுகதை)

ஆண் உள்ளம்
(வெளிநாட்டுக் கதை)

-6-
அணா

சத்திய சொரூபம்

மாயையே சத்தியத்தின் முதல் தோற்றம்.

—ரவீந்திரநாத டாகுர்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, சங்கர், மகான், சுசி.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதாரர்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். **மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.**

ஆண்டு 5] [இதழ் 3

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

சில நாளில் சென்னை நகரில் இங்கிலாந்து - இந்திய கோஷ்டிகளின் கடைசி டெஸ்ட் கிரிக்கட் ஆட்டம் நடக்கப்போகிறது. இதுவரை மூன்று ஆட்டங்கள் எக்கட்சிக்கும் வெற்றியின்றி 'ட்ரா'விலும் நாலாவது ஆட்டம் இங்கிலாந்துக்கு வெற்றியாகவும் முடிந்திருக்கின்றன. இந்த நிலையில் சென்னை ஆட்டம் சற்றுப் பரபரப்பாய்த்தான் இருக்கும். இதனால் வேடிக்கை பார்ப்பவர்களும் ரேடியோவில் ஆட்டவர்ணனையைக் கேட்பவர்களும் மனத்தைக் கொஞ்சம் நிதானமாய் வைத்துக்கொள்வது நல்லது. இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் டெஸ்ட் ஆட்டம் ஒன்று ஒரு சமயம் பிரிட்டனில் நடந்தபோது, நெருக்கடியான கட்டம் வந்ததாம். அப்போது வேடிக்கை பார்த்தவரில் ஒருவர், மாரடைத்து இறந்துபோனாராம்; இன்னொருவர் தம்மையறியாமலே தம் கைக் குடைக்காம்பைக் கடித்துத் தின்றுவிட்டாராம். இந்தியாவில் வேடிக்கை பார்ப்பவர்கள் இவ்வளவு பதைப்புற்றுப் போவதில்லை என்பது உண்மையே. இருந்தாலும், அவர்களுக்கும் நெஞ்சு கொஞ்சம் படபடக்கலாம். அதற்குக்கூட இடங்கொடுக்காமல் மனத்தைப் பக்குவமாய் வைத்துக்கொள்வதே அழகு.

* * *

'நம் குறையை நாமே ஆராய்ந்து பார்த்துக் கண்டித்துக் கொள்ள வேண்டும்' என்ற முறையை ஸோவியத் ருஷ்யாவும், சரி, கம்யூனிஸ்ட் சீனாவும் சரி, கடைப்பிடிக்கின்றன. சமீபத்தில் அதிகாரிகளும், கைத்தொழில்-வர்த்தகப் பிரதிநிதிகளும் எழுத்தாளர்களும் மற்றவருமாக 2,000 பேர் அடங்கிய கூட்டம் ஒன்றில் பேசும்போது, சீனக் கம்யூனிஸ்ட் அயல் நாட்டு விவகார மந்திரி சூ என் லாய், 'லஞ்ச ஊழலைக் கண்டித்துக் களைந்தெறிய வேண்டும்' என்று எச்சரித்தாராம். ருஷ்யாவிலும் பத்திரிகைகள் சில சமயம் இந்த மாதிரியே 'லஞ்ச ஊழ'லைக் கண்டிக்கின்றனவாம். ஆகவே, 'லஞ்ச ஊழல் முதலாளித்துவ நாடுகளில் மட்டும் அல்ல; கம்யூனிஸ்ட் நாடுகளிலுந்தான் இருக்கிறது' என்று நாம் அகமகிழ்ந்துவிடக்கூடாது. கம்யூனிஸத்திலும் இந்த ஊழலுக்கு இடம் உண்டு என்று முடிவு செய்வதும் தவறு. பரிபூரண கம்யூனிஸ முறை சீனாவிலோ, ருஷ்யாவிலோ இன்று ஏற்பட்டுவிடவில்லை; இரண்

டிலும் ஸோஷலிஸ ஆட்சிதான் நடக்கிறது. கம்யூனிஸம் இன்னமும் ஒரு லட்சியமாகவே இருக்கிறது. அது எப்படிப் போனாலும் போகட்டும். எந்த ஆட்சி முறையானாலும், லஞ்ச ஊழலை ஒழிப்பது தான் மக்கள் முன்னேற வழி. ஊழல் எல்லா முறையிலுந்தான் இருக்கிறது என்று சமாதானம் சொல்லுவது மூடத்தனம்.

* * *

நாலு வருஷங்களுக்கு முன்பு ஐ. நா. சபையில் காஷ்மீர் விவகாரம் வந்தபோது, ஸோவியத் பிரதிநிதி, "இந்தியாவைப் பிரிட்டன் 200 வருஷங்களாக ஆராய்ந்திருக்கிறது. எங்களுக்கு நாலைந்து வருஷ அவகாசமாவது வேண்டாமா? அதுவரை ஆராய்ந்துதான் அபிப்பிராயம் சொல்லமுடியும்" என்று தனிப்பட்ட சம்பாஷணைகளில் சொன்னாராம். இதுவரைக்கும் பாகிஸ்தான் பக்கமோ இந்தியாவின் பக்கமோ காஷ்மீர் விஷயத்தில் ஸோவியத் சாயவில்லை. இப்போது இந்தியாவின் பக்கம் சற்றுச் சாய்ந்தாற்போல் ஸோவியத் பிரதிநிதி பேசியிருக்கிறார். இதைக் கண்டு நாம் மகிழ்ந்துவிடவில்லை; நம் தலைவிதி நம் கையில் இருக்கிறது. ஆனால், பாகிஸ்தான் தலைவர்கள் மிரண்டுவிட்டார்கள். பிரிட்டனும் அமெரிக்காவும் கிலி பிடித்துவிட்டன. இந்தியாவை ஸோவியத் தன் கட்சிக்கு இழுக்கப் பார்க்கிறது என்றெல்லாம் அவை அஞ்சுகின்றன. நியாயம் எது என்பதைப்பற்றிக் கவலையில்லையா? வல்லரசுகளின் சதுரங்க மேடையா ஐ. நா. சபை?

* * *

"சூரிய வெப்பத்தைக்கொண்டு சமைப்பதற்குரிய வழி ஒன்றை நம் நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படிச் சமைத்த உணவு ஒன்றைச் சில நாளைக்கு முன் நானே சாப்பிட்டுப் பார்த்துவிட்டேன். வெறும் கோஷங்களை முழக்கிக் கூச்சலிடுவோரைவிட, இப்படிப்பட்ட வாலிப விஞ்ஞானிகளே, தேசத்தின் கஷ்டங்களுக்கு அதிகமாய்ப் பரிகாரம் தேடுபவர்" என்று தேர்தல் கூட்டம் ஒன்றில் ஜவாஹர்லால் சொன்னாராம். 'சரி, இனி அடுப்புக்கு விறகில்லை என்ற கவலை தீர்ந்தது' என்று யாரும் அகமகிழ்ந்துவிடலாகாது. 'சூரிய அடுப்பு' எல்லார் வீட்டுக்கும் வந்துவிடாது. அதன் விலை 100 ரூபாயாகுமோ, 1000 ரூபாயாகுமோ, யார் கண்டார்? மின்சார அடுப்பு எல்லார் வீட்டுக்கும் வந்துவிட்டதா? செல்வம் கொழிக்க வேண்டும்; சமூகத்தில் மடுவும் மலையுமான ஏற்றத் தாழ்வுகள் தீரவேண்டும். அப்போதுதான் இத்தகைய வசதிகள் பெருகிப் பரவிச் சமூகத்துக்கே பெரும் பயன் தரும். ஆகவே, 'கோஷமிடும்' சமூக ஊழியர்களின் சேவையும் தேவைதான். அவர்களை ஒரேயடியாய் மட்டந்தட்டுவது சரியல்ல.

* * *

"பதினாயிரம் இந்தியர்- முக்கியமாகத் தென் இந்தியர் - தங்கள் குடும்பத்தோடு எங்கள் நாட்டில் வந்து குடியேற அநுமதி கொடுங்கள்" என்று, வட போர்னியோ சர்க்கார், இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறதாம். விவசாயிகளைத்தான் கோருகிறதாம் அது. உள்நாட்டினருக்குச் சரிசமமான பிரஜா உரிமைகளைக் குடியேறும் இந்தியருக்கும் அளிப்பதாகச் சொல்லுகிறது. தனியாக இல்லா

மல் குடும்பத்தோடு வரச் சொல்லு வதால், மற்ற வெளிநாட்டு இந்தியரைப்போல் இவர்கள் கஷ்டப்பட நேராது என்று நம்பலாமாம். அது எப்படி என்றுதான் புரியவில்லை. சிங்களத்தில், தமிழர் - சிங்களவர் உறவு சுமுகமாயிருக்கிறதா? பல தலைமுறையாய் நிலைத்த யாழ்ப் பாணத் தமிழர்கூடச் சிங்களவரின் முழு நட்பையும் பெற்றதாய்த் தெரியவில்லை. இந்தியாவையே எடுத்துக்கொள்வோமே; சகல விதத்தும் இந்தியரேயான முஸ்லிம் களின் பிணக்கு, பாகிஸ்தான் ஸ்தாபிதத்தில் போய் முடியவில்லையா? மனிதர்களின் உள்ளத்திலே வேற்றுமை உணர்ச்சிகளைக் கிளப்பும் இழிந்தவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கெல்லாம் இந்தத் தொல்லை இருக்கத்தான் இருக்கும். அப்படிப்பட்டவர் வட போர்னியோவில் இல்லையா என்பதை இந்திய சர்க்கார் தீரத் தெளிந்துகொண்டு தான் இந்திய மக்கள் அங்கே போய்க் குடியேற அநுமதியளிக்க வேண்டும். இங்கேயே அந்தத் தொல்லையை அநுபவிப்பவர்களாயிருந்தால்கூட, போகுமிடத்தில் கஷ்டப்படுவதைவிட இருக்குமிடத்தில் கஷ்டப்படுவதே மேல்.

டெலிபோன் தமாஷ்

விகட நடிகர் ஒருவர் ஒரு நாள் கண் பிதுங்க முகத்திலே காயத்துடன் தம் நண்பர்களிடம் வந்தார்.

"என்ன விஷயம்?" என்று நண்பர்கள் கேட்டார்கள்.

"தினந்தோறும் அதிகாலையிலே நான் ஒரு தமாஷ் செய்வது வழக்கம். போது விடியுமுன் யாரையாவது டெலிபோனில் கூப்பிட்டு, 'நான் யார், கண்டுபிடி பார்க்கலாம்' என்று சொல்லி, பட் என்று போனை வைத்துவிடுவேன்" என்றார் விகட கவி.

"அப்புறம்!"

"ஒருவன் கண்டு பிடித்துவிட்டான்."

—பிலிப் மூர்

வெட்டிவிட வேண்டிய அங்கம்

வாலிப நாடகாசிரியர் ஒருவர், ஒரு நாடகக் கம்பெனி மானேஜரான டேவிட் பெலாஸ்கோ என்பவரிடம் சென்றார். தாம் எழுதிய மூன்றங்க நாடகம் ஒன்றைக் கொடுத்தார். சில நாளைக்குப் பிறகு, வெகு நம்பிக்கையோடு மானேஜரின் அபிப்பிராயத்தைக் கேட்க வந்தார்.

"தம்பி, உன் நாடகத்தை இரண்டு நண்பரிடம் படித்துக் காட்டினேன். எனக்கும் சரி, அவர்களுக்கும் சரி, ஓர் அங்கம் பிடிக்கவேயில்லை. அதை வெட்டி விடுவதே சரி என்று அபிப்பிராயப்பட்டோம்" என்றார் மானேஜர்.

"இதுதானே? வெட்டிவிட்டால் போகிறது. எந்த அங்கம் அது?" என்று நாடகாசிரியர் ஆவலோடு கேட்டார்.

"எனக்குப் பிடிக்காதது முதல் அங்கம். ஒரு நண்பருக்குப் பிடிக்காதது இரண்டாவது அங்கம். மற்ற நண்பருக்குப் பிடிக்காதது மூன்றாவது அங்கம். அவ்வளவுதான் வெட்ட வேண்டியது" என்றார் மானேஜர்.

—மில்வாக்கீ ஜர்னல்

லட்சுமணனின் கோபம் ★



வாலி இறந்ததும் சுக்கிரீவன் அதை எண்ணி வருத்த முற்றிருந்தான். ராமன் சுக்கிரீவனைத் தேற்றி வாலிக்கு ஈமக் கிரியைகள் செய்யும்படி சொன்னான். அது முடிந்ததும் சுக்கிரீவன் மற்றக் குரங்குகளுடன் ராமனிடம் வந்து வணக்கமாக நின்றான். ஹநுமான், "தங்களுடைய தயையினால் எங்கள் மன்னருக்கு மூதாதையருடைய ராஜ்யம் கிடைத்து விட்டது. தங்கள் உத்தரவைப் பெற்றுக்கொண்டு நகரத்துக்குள் போய்ப் பட்டாபிஷேகம் செய்து கொள்ள வேண்டுமென்று இதோ வந்திருக்கிறார். அழகிய கிஷ்கிந்தா புரிக்குள் தாங்கள் வரவேண்டும்" என்றான்.

அதற்கு ராமன், "பதினாலு வருஷங்கள் எந்தக் கிராமத்திலும் சரி, நகரத்திலும் சரி, நுழைவதில்லை என்று என் தகப்பனாருக்கு வாக்களித்திருக்கிறேன். ஆகவே, நான் கிஷ்கிந்தைக்குள் வருவதற்கில்லை. சுக்கிரீவன் போய் வரட்டும். அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வையுங்கள்" என்றான். பிறகு சுக்கிரீவனை நோக்கி, "அங்கதனுக்கு இளவரசுப் பட்டம் கட்டு. இப்போது மழைக்காலம். இது போருக்கு ஏற்றதல்ல. ஆகவே, நான் லட்சுமணனுடன் இந்தக் குகையில் வசித்து வருகிறேன்" என்றான்.

சுக்கிரீவன் அப்படியே கிஷ்கிந்தைக்குச் சென்றான். அங்கே தங்கக் குடத்தில் பரிசுத்த ஜலத்தை எடுத்து அவனுக்குப் பட்டாபிஷேகம் நடத்தினார்கள்.

அருவிகளும் ஓடைகளும் கொடிகளும் மரங்களும் புள்ளினங்களும்

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.

நிறைந்த 'ப்ரஸ்ரவணம்' என்ற மலையில் ராமன் லட்சுமணனோடு வாழ்ந்துவந்தான். மலைக்காட்சி எவ்வளவு அழகாக இருந்தும் என்ன? தன் உயிரினும் பன்மடங்கு அன்புள்ள சீதையை இழந்த ராமனுக்கு மகிழ்ச்சியே உண்டாகவில்லை. பலவிதமாகப் புலம்பி வருந்தினான். அப்போதெல்லாம் லட்சுமணன் அவனைத் தேற்றி வந்தான்.

"இலையுதிர் பருவம் வந்ததும் ராவணனை அந்த இலங்கையில் போய் நிச்சயமாக வென்று அழித்து வருவீர்கள். உறங்கிக் கிடக்கும் உங்களுடைய வீரத்தை அப்போது நான் கிளப்பிவிடுவேன். கவலைப் படாதீர்கள்" என்பான்.

மழைக்காலம் போய் இலையுதிர் காலம் வந்தது. ஒருநாள் ஹநுமான் சுக்கிரீவனிடம் வந்து, "அரசே, உங்களுக்கு ராஜ்யம் கிடைத்துவிட்டது. க்ஷேமமாகவும் இருக்கிறீர்கள். இனி நண்பர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். சீதையைத் தேடி ராமனிடம் ஒப்படைக்க வேண்டும். உதவி செய்யாதவர்களுக்கும் உதவி புரிபவர் நீங்கள். துணைபுரிந்த ராமனுக்கா உதவாமல் இருப்பீர்கள்? இனி யார் யார் என்ன என்ன செய்ய வேண்டும் என்று உத்தரவிடுங்கள்" என்றான்.

இதைக் கேட்டதும் சுக்கிரீவன், "எட்டு நாளைக்குள் எல்லா வானரங்களும் இங்கே வந்து சேரவேண்டும்" என்று உத்தரவிட்டுவிட்டு அந்தப்புரம் சென்றான்.

இலையுதிர் பருவம் வந்தும் சுக்கிரீவன் காமக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு

ராமன் வருத்தமுற்றான்; "லட்சு மணா, இதோ ஆற்று நீர் குறைந்து விட்டது. பகைவரை வெல்ல அரசர்கள் புறப்படும் காலம் வந்து விட்டது. ஆயினும் சுக்கிரீவன் ஒருவித முயற்சியும் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறானே! அன்று சீதையை மீட்டு வருவதாகச் சொன்னான்; இப்போது அதைப்பற்றி அவன் நினைப்பது கூட இல்லை. நீ கிஷ்கிந்தைக்குப் போய்ச் சிற்றின்பத்தில் ஈடுபட்டிருக்கும் அந்த மூடனிடம், 'உதவி செய்தவர்களுக்குப் பதில் உதவி செய்வதாக வாக்களித்துவிட்டு அதன்படி நடக்காதவன் தாழ்ந்தவரிலும் தாழ்ந்தவன். இடி முழக்கம் போன்ற என் வில்லோசையைப் போர்க்களத்தில் கேட்க வேண்டியிருக்கும், ஜாக்கிரதை. வாலி போன வழியே போகாதே. போரில் அவனைக் கொன்றேன். சத்தியம் தவறின உன்னை உன் உறவினர்களோடு கொல்வேன்' என்று நான் சொன்னதாகச் சொல்" என்றான்.

லட்சுமணன், "புத்தியில்லாமல் இப்படி உலக சுகத்தில் ஈடுபட்டிருப்பவனிடம் ராஜ்யத்தைக் கொடுப்பது சரியல்ல. எனக்குக் கோபம் கோபமாக வருகிறது. இதோ போய் அவனைக் கொன்று விடுகிறேன். மற்றக் குரங்குகளுடன் அங்கதன் போய்ச் சீதையைத் தேடிவரட்டும்" என்றான்.

ராமன், "லட்சுமணா, உன்னைப் போன்றவர்கள் இப்படிச் செய்யலாமா? அவன் முதலில் நம்மிடம் நடந்துகொண்ட விதத்தை நினைத்து அன்போடு, கொடுமை இல்லாமல் நான் சொன்னதைச் சொல்" என்றான்.

லட்சுமணன் சுக்கிரீவனிடம் சென்றான். அவன் போகும் வேகத்தில் வழியில் இருந்த மரங்கள் சாய்ந்தன. கற்கள் பொடியாயின. அவனை அடிக்கச் சில குரங்குகள் கல்லைத் தூக்கின. இதனால் அவன் கோபம் அதிகரித்தது. இதைக் கண்டதும் குரங்குகள் ஓட்டம் பிடித்தன. சில குரங்குகள் இதைச் சுக்கிரீவனிடம் போய்த் தெரிவித்தன. தாரையோடு தனிமையாக இன்பத்தில் ஆழ்ந்திருந்த சுக்கிரீவன் காதில் இது விழுந்தால்தானே? லட்சுமணன் நகரத்துக்கு வெளியே இப்படிக் கோபத்துடன் நிற்பதை அறிந்த அங்கதன் அவனிடம் பயந்துகொண்டே வந்து நின்றான். லட்சுமணன் சுக்கிரீவனிடம் போய், "ராமனுடைய தம்பி மிகவும் கோபத்தோடு வந்திருப்பதாகச் சொல்" என்றான்.

அங்கதன் கவலையோடு அந்தப்புரத்துக்குத் திரும்பி, ருமை, தாரை இவர்களோடு இன்பத்தில் மூழ்கியிருக்கும் சுக்கிரீவனின் கால்களைப் பிடித்துக்கொண்டு நடந்ததைச் சொன்னான். அப்படியும் சுக்கிரீவன் மயங்கிக் கிடப்பதைக் கண்டு மந்திரிமார் அவனைத் தட்டி எழுப்பி, "சீக்கிரம் உற்றார் உறவினருடன் போய் லட்சுமணனை வணங்குங்கள். ராமன் சொல்லியனுப்பிய காரியத்தை நிறைவேற்றுங்கள்" என்றார்கள்.

சுக்கிரீவன், "நான் தவறாக எதுவும் சொல்லவுமில்லை; செய்யவுமில்லையே! எனக்கு ராம லட்சுமணர்களிடம் பயம் ஒன்றுமில்லை. ஆனால் ராமன் செய்த உதவிக்கு நான் என்ன பதில் செய்ய முடியும்? அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றான்.

அப்போது ஹநுமான், "அரசே, உங்களுக்காகத்தானே ராமன் வாலியைச் சிறிதும் பயமின்றிக் கொன்றான்? அவன் உண்மையாகக் கோபித்துக்கொண்டிருக்க மாட்டான். அன்பினால் கோபம்போல் நடித்து லட்சுமணனை அனுப்பியிருக்கிறான். இன்பத்தில் மூழ்கியிருப்பதால் நீங்கள் இலையுதிர் காலம் வந்ததைக் கவனிக்கவில்லை. மனைவியை இழந்து துன்புறும் ராமன் கொடுஞ் சொல் சொன்னால் நீங்கள் பொறுத்துக்கொண்டுதான் போக வேண்டும். லட்சுமணனுக்கு நிகர் எங்கும் யாருமே இல்லை. ஆகவே, நீங்கள் உறவினர்களுடன் போய் அவரை வணங்குங்கள்" என்றான்.

பிறகு லட்சுமணனை உள்ளே வரும்படி வானரர்கள் அழைத்தார்கள். அரண்மனை வாயில் காப்போர் கைகூப்பி அவனை வணங்கினார்கள். மற்றக் குரங்குகள் எட்டி நின்றன. பெண்களின் சதங்கை ஒலியைக் கேட்டதும் லட்சுமணனுக்குக் கோபம் மாறி வெட்கம் தலை தூக்கியது. உள்ளே நுழைய விருப்பம் இல்லாமல் வில்லை எடுத்து நாணை இழுத்தான்.

அந்த ஒலி கேட்டுச் சுக்கிரீவன் பயந்து போய்த் தன்னை அறியாமல் தன் ஆசனத்திலிருந்து எழுந்தான்; தாரையை நோக்கி, "ராமனுடைய தம்பிக்கு என்ன கோபமோ தெரியவில்லை. அவன் நல்ல சுபாவம் உள்ளவன்; காரணமில்லாமல் கோபித்துக்கொள்ள மாட்டான். ஆகவே, நீ போய் ஏதாவது நல்ல வார்த்தையாகப் பேசி அவனை முதலில் சமாதானப்படுத்து; அப்புறம் நான் வருகிறேன். பெரியவர்கள் பெண்களிடம் கோபம் கொள்ளமாட்டார்கள்" என்றான்.

தாரை மதுபானம் செய்ததால் கண்கள் சுழல, கால் இடற லட்சுமணனிடம் வந்து நின்றாள். அவளைப் பார்த்ததும் அவன் முகம் குனிந்தபடி கோபத்தை விட்டுப் பேசாமல் இருந்தான். அவள், "தங்கள் கோபத்துக்குக் காரணம் என்னவோ? தங்கள் வார்த்தையை யார் கேட்கவில்லை? தயை செய்து சொல்லுங்கள்?" என்றாள்.

அன்புடன் தாரை இப்படிச் சொன்னதும் லட்சுமணனும் சகஜமாகவே, "உன் புருஷன் இன்பத்தில் மூழ்கி அறம், பொருளை மறந்தானே! அதை நீ கவனிக்கவில்லையே! ராஜ்யத்தைப் பற்றியோ எங்களைப்பற்றியோ எந்த விதமான சிரத்தையும் அவனுக்குக் காணோமே! சீதையைத் தேடுவதாகக் கொடுத்த வாக்கை மறந்துவிட்டானே!" என்றான்.

தாரை, "ராஜகுமாரரே, உங்களைச் சேர்ந்தவர்களிடமே கோபம் காட்டுவது நியாயமா? என் புருஷரின் பிழையைப் பொறுத்தருள வேண்டும். அவர் வாக்குறுதி கொடுத்தது எனக்குத் தெரியாதா? ஆனால் காமனுக்கு அதிக பலமல்லவா? அவன் வசப்பட்டு அவர் சும்மா இருந்துவிட்டார். உங்களுடைய கோபத்தைப் பார்த்தால் காமம் என்பதே என்ன என்று உங்களுக்குத் தெரியாதென்று தோன்றுகிறது. பெரிய முனிவர்கள் கூடக் காமவசப்படும்போது சபல குணமுள்ள குரங்குகளைப் பற்றிக் கேட்க வேண்டுமா? ஆகவே, அவரை மன்னித்துவிடுங்கள்" என்று இதமான வார்த்தைகளைச் சொல்லி லட்சுமணனை உள்ளே வரும்படி அழைத்தாள்.

தங்கத்தால் ஆன ஆசனத்தில் அமர்ந்திருந்த சுக்கிரீவன் லட்சுமணன் வருவதைக் கண்டு மனங் கலங்கித் துள்ளி எழுந்தான். லட்சுமணன், "புலன்களை அடக்கி, உண்மையே பேசி, நன்றியறிவோடு இருப்பவனே சரியான அரசன். துன்புற்ற உனக்கு ராமன் உதவி செய்தான். நீ அவனுக்குக் கொடுத்த வாக்கைச் சரிவர நிறைவேற்ருவிட்டால் ராமன் தன் கூரிய பாணத்தால் வாலி போன வழியே உன்னையும் அனுப்பி விடுவான்" என்ருன்.

அப்போது தாரை, "நீங்கள் நினைப்பதுபோல் என் புருஷர் நன்றிகெட்டவரல்ல. ராமரைச் சீதையோடு நிச்சயம் சேர்த்துவைப்பார். இலங்கையில் பதினுயிரக் கணக்கில் ராட்சசர்கள் இருக்கிருர்கள். அவர்களைப் பிறர் உதவியில்லாமல் கொல்ல முடியாது. அதற்காகத் தான் குரங்குகளையெல்லாம் ஒன்றுதிரண்டு வரும்படி அவர் கட்டளையிட்டிருக்கிருர். தாங்கள் கோபங் கொள்ள வேண்டாம்" என்ருள்.

சுக்கிரீவனும் மது மயக்கம் தெளிந்து லட்சுமணனைச் சமாதானப்படுத்தினுன். அப்போது லட்சுமணனும் அன்போடு, "ராமனுடைய துயரத்தைக் கண்டு தாங்காமல் நான் ஏதேதோ சொல்லிவிட்டேன். என்னை மன்னித்துவிடு" என்ருன். சுக்கிரீவன் மகிழ்ச்சியடைந்து, ஹநுமானிடம் விரைவில் குரங்குகளெல்லாம் வந்து சேரும்படி உத்தரவிட்டான்.

பணம் சம்பாதிக்க வழி

தனக்கு வாங்கித் தரும்படி தன் பெற்ருேரைக் கேட்கப் போகும் கிறிஸ்துமஸ் பரிசு ஜாபிதாவைத் தன் நண்பன் வில்லிக்கு, ஜார்ஜ் படித்துக் காட்டினுன்: "ஒரு தம்பட்டம்; ஒரு தகர ஊதல்; ஒரு சகடை வண்டி; தொப்பி சுடும் ஒரு துப்பாக்கி."

"இந்தக் குப்பையெல்லாம் எதற்கடா?"

"பணம் சம்பாதிக்க" என்ருன் ஜார்ஜ்.

"இதையெல்லாம் வைத்துக்கொண்டா?"

"ஆமாம்; நிச்சயமாய்ச் சம்பாதிப்பேன். தம்பட்டம் கொட்டி, சகடை வண்டியை மாடியிலிருந்து உருட்டிவிடாதிருக்க, அப்பா பணம் கொடுப்பார்; தங்கச்சிப் பாப்பாவைப் பார்த்துக்கொள்ளும் தாதி, தகர ஊதலை ஊதாதிருக்கப் பணம் கொடுப்பாள்; தம் தொப்பியைச் சுட்டுத் தள்ளாதிருக்க, தாத்தா பணம் கொடுப்பார்."

உடனே, வில்லீ தான் தயாரித்திருந்த ஜாபிதாவைக் கிழித்தெறிந்துவிட்டு, "அடே, உன் பென்ஸிலைக் கொஞ்சம் கொடு!" என்று அவசரம் அவசரமாகக் கேட்டான்.

—ஹொவார்டு ஹொர்சிக், 'காரொனெட்'

சென்னை டெஸ்ட்:
ஆட்டக்காரர் யார் யார்?

★

இங்கிலாந்து (எம். ஸி. ஸி.) கோஷ்டிக்கும் இந்திய கோஷ்டிக்கும் இந்த பிப்ரவரி 6, 7, 9, 10, 11 தேதிகளில் சென்னையில் ஐந்தாவது டெஸ்ட் கிரிக்கட் ஆட்டம் நடக்கப் போகிறது.

எம். ஸி. ஸி. கோஷ்டியில் வந்துள்ளவர் விவரம்:

1. நிகேல் ஹோவார்டு: வயது 26. எம். ஸி. ஸி. கோஷ்டியின் காப்டன். 'ஸ்டை'லாகப் பந்தடிப்பார். ரன் எடுக்க அஞ்சமாட்டார். பீல்டிங்கிலும் முதல் தரமானவர்.

2. டி. பி. கார்: வைஸ் காப்டன். வயது 24. இடது கையால் மெது வாய் போல் செய்வார். ஸ்லிப் என்னுமிடத்தில் அருமையாக பீல்டிங் செய்வார்.

1. நிகேல் ஹோவார்டு

3. ஏ. வாட்கின்ஸ்: வயது 29. பந்தடிப்பது, போலிங், பீல்டிங் மூன்றிலும் தேர்ந்தவர்.

4. ஜே. பி. ஸ்டாதாம்: வயது 21. போல் செய்வதில் வல்லவர்.

2. டி. பி. கார்

3. ஏ. வாட்கின்ஸ்

4. ஜே. பி. ஸ்டாதாம்

5. ஜே. ராபர்ட்ஸன் 6. ஏ. இ. ஜி. ரோட்ஸ் 7. ஸி. ஜே. பூல்

5. ஜே. ராபர்ட்ஸன்: வயது 33. ஆட்டம் தொடங்கும்போது பந்தடிக்க ஏற்றவர். 1949-இல் வொர்ஸ்டர்ஷயரில் 331 ரன் எடுத்தார்.

6. ஏ. இ. ஜி. ரோட்ஸ்: வயது 35. 'டஸ்டி' என்ற செல்லப் பெயர் பெற்றவர். போல் செய்வதில் மிக வல்லவர். தொடர்ச்சியாக மும்மூன்று விக்கட்டுகளை ஐந்து முறை வீழ்த்தியவர்.

7. ஸி. ஜே. பூல்: வயது 30. இடது கையால் பந்தடிப்பார். நிறைய ரன் எடுப்பார். பீல்டிங்கிலும் சிறந்தவர்.

8. ஆர். ஆர். டி. ஸ்பூனர்: வயது 31. இங்கிலாந்திலேயே மிகச் சிறந்த விக்கட் - கீப்பர். பந்தடித்து நிறைய ரன்னும் எடுப்பார்.

9. டி. ஷாக்கிள்டன்: வயது 26. பந்தடிப்பது, போலிங், பீல்டிங் எல்லாவற்றிலும் தேர்ந்தவர். 1950-இல் லங்காஷயருக்கு எதிராக ஆடி 5 விக்கட்டுகளை ரன் கொடுக்காமலே வீழ்த்தினர்; அதே வருஷம் கிளஸ்டர்ஷயருக்கு எதிராக ஆடி, இரண்டே ரன் கொடுத்து 5 விக்கட்டுகளை வீழ்த்தினர்.

10. எப். ரிட்ஜ்வே: வயது 27. மகா தந்திரமாய் போல் செய்வார்.

8. ஆர். ஆர். டி. ஸ்பூனர் 9. டி. ஷாக்கிள்டன் 10. எப். ரிட்ஜ்வே

11. டி. கேன்யான் 12. எப். ஏ. லோஸன் 13. எம். ஹில்ட்டன்

போன வருஷம் டெர்பிஷயரில் 4 விக்கட்டுகளை நாலே பந்தில் வீழ்த்தியவர்.

11. டி. கேன்யான்: வயது 27. வார்விக்ஷயரில் ஆட்டத்தொடக்கத்தில் ஸ்பூனருக்கு பார்ட்னராக இருந்தவர். மிக நன்றாய்ப் பந்தடிப்பார்.

12. எப். ஏ. லோஸன்: வயது 25. ஆட்டத் தொடக்கத்தில் பந்தடிக்க ஏற்றவர். பீல்டிங்கிலும் ஓரளவு திறமையுள்ளவர்.

13. எம். ஹில்ட்டன்: வயது 23. தந்திரமாய் இடது கையால் போல் செய்வார். மான்செஸ்டரில் ஒரு மாட்ச் நடந்தபோது ஸர் டொனால்டு பிராட்மன் விக்கட்டை இரண்டு இன்னிங்ஸிலும் வீழ்த்தியவர்.

14. ஆர். டாட்டர்ஸால்: வயது 29. 1950-இல் லங்காஷயர் சார்பாக ஆடிய ஆட்டங்களில் 193 விக்கட்டுகளை வீழ்த்தியவர். கோஷ்டிக்குள்ளே உயரமான ஆசாமி.

15. டி. டபிள்யூ. கிரேவ்னி: வயது 24. 'இரண்டாவது வாலி ஹாமண்ட்' என்று இவரைப் புகழ்கிறார்கள். கிரிக்கட்டில் மட்டும் அல்ல; டேபிள் டென்னிஸ், ஹாக்கி,

14. ஆர். டாட்டர்ஸால் 15. டி. டபிள்யூ. கிரேவ்னி 16. டி. வி. ப்ரேன்னன்



17. குலாம் அஹமது

18. வி. மன்காட்

19. எச். ஆர். அதிகாரி

20. வி. ஜே. ஹஜாரே

ரக்பி இவைகளிலும் வல்லவர். ஒரு காலத்தில் கோல்பும் ஆடி வந்தார்.

16. டி. வி. ப்ரோன்னன்: வயது 31. சிறந்த விக்கட் கீப்பர்.

சென்னையில் ஆடப்போகிற இந்திய கோஷ்டியினர் விவரம்:

17. குலாம் அஹமது: வயது 29. பந்தடிப்பது, போலிங் இரண்டிலும் வல்லவர். ஹைதராபாதுக் காரர்.

18. வி. மன்காட்: வயது 35. பந்தடிப்பது, போலிங் இரண்டிலும் சிறந்தவர். வலது கையால் பந்தடிப்பார். இடது கையால் போல் செய்வார்.

21. எல். அமர்நாத்

22. பி. ஜி. ஜோஷி



19. எச். ஆர். அதிகாரி: வயது 33. எப்போதும் நன்ருய்ப் பந்தடிப்பார். பீல்டிங்கும் அருமையாய்ச் செய்வார்.

20. விஜே ஹஜாரே: வயது 37. இந்திய கோஷ்டியின் காப்டன். பந்தடிப்பது, போலிங், பீல்டிங் மூன்றிலும் வல்லவர். நிறைய ரன் எடுப்பார். குணசாலி.

21. எல். அமர்நாத்: வயது 41. வெகு பலமாய்ப் பந்தடிப்பார். பந்து போடுவதிலும் மிக வல்லவர். உலகில் சிறந்த ஆட்டக்காரருடனெல்லாம் ஆடியிருக்கிருர்.

22. பி. ஜி. ஜோஷி: வயது 26. விக்கட் கீப்பர். பந்தடிப்பதிலும் தேர்ந்தவர்.

23. பி. ஆர். உம்ரிகார்: வயது 26. பந்தடித்து நன்ருய் ரன் எடுப்பார். தவிர, போலிங், பீல்டிங் இரண்டிலும் தேர்ந்தவர்.

24. டி. ஜி. பட்கர்: வயது 27. பந்தடிப்பது, போலிங், பீல்டிங் மூன்றிலும் வல்லவர். இங்கிலாந்தில் ஒரு காலத்தில் சிறந்து விளங்கிய கொவர் என்ற ஆட்டக்காரரிடம் பயிற்சி பெற்றவர்.

25. ஸி. டி. கோபிநாத்: வயது 22. பந்தடித்து நிறைய ரன் எடுப்பார். போலிங்கிலும் திறமை உள்ளவர்.

23. பி. ஆர். உம்ரிகார்

24. டி. ஜி. பட்கர்

25. ஸி. டி. கோபிநாத்

26. எஸ். ஜி. ஷிண்டே 27. பி. ராய் 28. பி. ஸேன்

26. எஸ். ஜி. ஷிண்டே: வயது 32. 'லெக் பிரெக்', 'குக்ளி' இரண்டு வித போலிங்கிலும் வல்லவர்.

27. பி. ராய்: வயது 24. ஆட்டத்தொடக்கத்தில் பந்தடிக்க ஏற்றவர்.

28. பி. ஸேன்: வயது 27. நன்றாய்ப் பந்தடிப்பார். விக்கட் கீப்பிங்கிலும் சிறந்தவர்.

29. ஆர். வி. திவேச்சா: (படம் இல்லை.) மிக வேகமாக போல் செய்வார். போன வருஷம் இங்கிலாந்தில் ஆடி மிகவும் பாராட்டப் பெற்றவர். பீல்டிங், பந்தடிப்பது இரண்டிலுங்கூடத் தேர்ந்தவர்.

சட்டசபை மெம்பர்

சட்டசபை அங்கத்தினர் ஒருவர் ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு விருந்து சாப்பிட வந்தார். சாப்பிட்டதும் தாம் அவசரமாய்ச் சட்டசபைக்குப் போகவேண்டுமென்று அவர் சொன்னார். எங்கள் அப்பா அவரைப் பார்த்து, "சாப்பிட்ட களைப்புத் தீர ஒரு தூக்கம் போட்டுவிட்டுப் போங்களேன்" என்றார். அதற்கு அவர், "அதைப்பத்தி நீங்க ஒண்ணும் கவலைப்படவேண்டியதில்லை, ஸார். அதையெல்லாம் நான் அங்கே போய்ப் பார்த்துக்கறேன்னு!" என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறி விர்ரென்று சென்றுவிட்டார்.

—வி. ஜயராமன், திருவல்லிக்கேணி.

ஆட்டக்காரர் கையெழுத்துக்கள்

இது உங்களுக்குத் தெரியுமா?

பிராங்க் வொர்ரெல் ஆடிய முதல் டெஸ்ட் மாட்ச், டிரினிடாட் என்ற பிரிட்டிஷ் காலனியில் நடந்தது. ஆட்டம் தொடங்கிய போது, அவர் உடுப்பறையிலே தூங்கிக்கொண்டிருந்தார். ஒரு விக்கட் விழுந்ததும், கொடார்டு வந்து அவரை எழுப்பினர். அரைத் தூக்க நிலையிலே ஆடி விழுந்துகொண்டு பாட் எந்தி வந்த அவர் 97 ரன் எடுத்துவிட்டார். மறுபடியும் இதே சங்கதி ஜியார்ஜ்டவுன் என்னும் இடத்தில் நடந்தது. அங்கே அவர் ஸெஞ்சரி அடித்துவிட்டார்.

*   *   *

காலஞ்சென்ற அமர் ஸிங், ராஜ்கோட்டில் ஓர் ஆட்டத்தில் இருபது நிமிஷத்தில் 110 ரன் எடுத்தார். அதில் 12 ஸிக்ஸர்; நான்கு ரன் பவுண்டரி 6. நாட் அவுட்.

*   *   *

ஸெஞ்சரி எடுத்த கீர்த்திமான்களின் பெயர் அடங்கிய விஸ்டன் ஜாபிதா ஒன்று உண்டு. அதில் இடம்பெற, முதல்தர கிரிக்கட் ஆட்டங்களில் 35 ஸெஞ்சரி எடுத்தவராயிருக்கவேண்டும். இதன்படி இடம்பெற்ற மூன்று இந்தியர்: 1. கே. எஸ். ரஞ்சித் சிங்ஜி, 2. கே. எஸ். துலிப் சிங்ஜி, 3. விஜே மெர்ச்செண்ட்.

*   *   *

'குக்ளி' என்ற மிகத் தந்திரமான பந்து போடும் முறையைக் கண்டுபிடித்தவர் பெர்னார்டு பொஸாங்கே என்பவர்.

*   *   *

நடுத்தர வேகத்துடன் பந்து போடுவதில் உலகத்திலேயே மிகப் பிரசித்திபெற்றவர் மாரிஸ் டேட். அவர் ஒரே ஒரு தடவை கூட 'நோ-பால்' போட்டு, எதிர்க்கட்சிக்கு எக்ஸ்ட்ரா ரன் கொடுத்ததில்லை.

*   *   *

ஆஸ்திரேலியக் கோஷ்டிக்கும் மேற்கிந்தியக் கோஷ்டிக்கும் சமீபத்தில் நடந்ததே டெஸ்ட் ஆட்டம்; இதில் டிக்கட் வசூலில் நஷ்டம் ஏற்பட்டால் ஈடு கொடுக்கவேண்டும் என்று, ஆஸ்திரேலிய கிரிக்கட் போர்டு அவ் கண்ட்ரோல் என்ற நிர்வாகிகள் 80,000 ரூபாய்க்குச் சமமான தொகைக்கு இன்ஷியூர் செய்தார்கள். இப்போது டெஸ்ட் ஆட்டத்துக்கு நிதி சேர்ப்பதில் இது புதுமையான முறை அல்லவா?

உலகத்திலேயே பெரும் பாது
காப்புப் பெற்றவர் ஸ்டாலினே!

கிரெம்லின் கைதி

★

பாட்டாளி மக்களின் ராஜ்யம் என்றால்கூட அங்கும் எல்லாரும் சமமாய் வாழ்ந்துவிட முடியாது. தலைவனுக்குத் தனிப் பாதுகாப்பும் விசேஷ வசதிகளும் இருந்துதான் தீரும். என்றாலும், ருஷிய சர்வாதிகாரி ஸ்டாலினுக்கு அமைத்திருக்கும் பந்தோபஸ்துகள் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. சோவியத் ருஷியாவுக்கும் கம்யூனிஸ்ட் யுகோஸ்லாவியாவுக்கும் இப்போதுதான் விரோதம்; முன்னே நேசம். அந்தக் காலத்தில் மிர்கோ ஜெலாடிச் என்ற யுகோஸ்லாவியர் கிரெம்லின் அரண்மனைக்குள் தாராளமாய்ப் புழங்கி, அதன் பல ரகசியங்களை அறிந்துகொண்டார். அவைகளை ஜெலாடிச் இப்போது அம்பலம் செய்திருக்கிறார். கானடாவைச் சேர்ந்த மான்ட்ரீல் நகரில் வெளியாகும் 'ஸ்டாண்டர்டு' என்ற பத்திரிகையில், அவர் பின்வருமாறு எழுதுகிறார்:

ஐந்து பெரிய கறுப்பு மோட்டார் வண்டிகள் மாஸ்கோ நகரின் அழகிய ஆர்பர் சதுக்கத்தின் வழியாக ரப்லோவா வனத்திலிருந்து கிரெம்லினுக்கு வந்துகொண்டிருந்தன.

அவை கைகாட்டிக்கு அருகில் நெருங்கும்போது அங்கே ஆலிவ் நிறப் பச்சைக் கோடும் சிவப்புப் பட்டைகளும் அணிந்த உத்தியோகஸ்தர்கள் பச்சை விளக்கைத் திருப்புகிறார்கள்.

அந்த வண்டிகளில் நம்பர்ப் பலகைகளோ வேறு அடையாளமோ இல்லை. ஒவ்வொன்றும் ஐந்து டன் எடையுள்ளவை; கோரமான பூதம் போன்றவை; கவச மணிந்தவை. அந்த வண்டிகளில் ஒன்றுக்குள்ளே, குண்டு பாயாத கரிய வர்ணக் கண்ணாடி ஜன்னவிட்ட இடத்தில் ஜோஸப் ஸ்டாலின் அமர்ந்திருக்கிறார். 50 மைல் பிரயாணம் செய்துதான் கிரெம்லினிலுள்ள அவருடைய காரியாலயத்துக்கு வருகிறார்.

பாதுகாப்பு என்ற பெயரால் கிரெம்லின் ஒரே பயங்கரக் கோட்டையாக விளங்குகிறது. அங்குள்ள ரகசிய அறிவிப்புக்கள், எச்சரிக்கைகள், ஜாலக் கண்கள் (Magic eyes), தாமே மூடித் திறக்கும் கதவுகள், தூரத்திலிருந்தபடியே இயக்கும் கருவிகள் இவற்றை நான் பதினேழு நாட்கள் கவனித்தேன்.

ஸ்மெர்கின் என்பவர்தான் ஸ்டாலினுடைய பாதுகாப்புக்குப் பொறுப்பானவர். ராட்சச டெலிபோன் 'ஸ்விச் போர்டு' போன்ற ஒரு கருவி இருந்த அறைக்குப் பக்கத்தில் இருந்தது, அவருடைய காரியாலயம். நான் ஒரு நாள் மாலை அவரோடு பேசிக்கொண்டிருந்தேன். ஸ்மெர்கின் எதிரில் சிறு சிறு

'பல்பு'கள் எரிந்துகொண்டிருந்தன. "ஸ்டாலின் காட்டு வாசலை அடைந்துவிட்டார்" என்று ஸ்மெர்கின் அந்தக் கருவியைக் கவனித்துக் கொண்டே கூறினர். "இப்பொழுது டன்னலைத் தாண்டிவிட்டார். ஜாலக்கண்கள் இருக்கும முதல் இடத்தைத் தாண்டிவிட்டார்... இப்பொழுது 'வீரர் தலைவன்' சதுக்கத்தை அடைந்துவிட்டார்..."

அடுத்தடுத்துப் பற்பல பச்சை 'பல்பு'கள் எரியத் தொடங்கின. ஸ்டாலினுடைய மோட்டார் வண்டி அவருடைய காரியாலயத்தின் வாசலை அடைந்துவிட்டது.

அரை நிமிஷம் சழித்து ஒரு நீண்ட சிவப்பு விளக்கு எரிந்தது. அதன் பிறகுதான் ஜெனரல் நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டார். "ஸ்டாலின் இப்போது தம் இடத்துக்கு வந்து சேர்ந்துவிட்டார்" என்ருர்.

இரவும் பகலும் கிரெம்லின் உஷாராகவே இருக்கிறது. வெளியிலிருந்து வரும் எதிரிகளுக்குப் பயந்து அல்ல; ருஷியாவிலேயே உள்ள எதிரிகளுக்குப் பயந்துதான்.

சென்ற இருபது வருஷங்களாக இந்தப் பநதோபஸ்து ஏற்பாடுகளைப் பூரணமாக்குவதில் கிரெம்லின் உத்தியோகஸ்தர்கள் உழைத்திருக்கிருர்கள். ஜெனரல் ஸ்மெர்கின், "1934-இலிருந்து இந்த வெளிப் பாதகாப்புக்குள் யாரும் நுழைந்ததில்லை" என்று என்னிடம் பெருமைப்பட்டுக்கொண்டார். குறுகலான காட்டு வாசலை ஒரு மோட்டாரோ அல்லது ஒரு மனிதனே நெருங்கிஞல் உடனே ஒரு ஜாலக்கண் எச்சரிக்கை மணியை ஒலிக்கிறது. அங்குள்ள ஆயுதம் தரித்த ஜவான்கள், உள்ளே வருபவரின் அநுமதிச் சீட்டுக்களையும் மோட்டாரையும் வந்து பரிசோதித்துச் சோதனை போடுவார்கள். 'கிரெம்லின் பர்மிட்' என்ற அநுமதிச் சீட்டில் ஒரு ரகசியக் குறி இட்டிருப்பார்கள். அந்தச் சீட்டு வைத்திருப்பவர்களையே கோட்டைக்குள் போக அநுமதிப்பார்கள். அந்தக் கோட்டைச் சுவரில் ஓர் உயர்தர அதிகாரி மறைவாகக் காவல் புரிகிருர். கோட்டையின் உட்புறம் தூரத்தில் உள்ள இரும்பு வேலிகளை அவர் இங்கிருந்தபடியே திறந்துகொள்ளும்படி செய்வார். காட்டு வாயிலுக்கும் ஸ்டாலினின் மாளிகைக்கும் நடுவே இது போன்ற ஐந்து ரகசியக் காவல் நிலையங்கள் இருக்கின்றன இவற்றை நிர்வகிப்பவர்கள் கர்னல் பதவிக்குக் குறையாத உயர்தர உத்தியோகஸ்தர்கள்.

'ஸ்டாலின் கண்கள்' என்ற மெய்காவல் படையில் நூறு பேர்கள் இருக்கிருர்கள். இவர்கள் உள்நாட்டு விவகார மந்திரி இலாகாவைச் சேர்ந்தவர்கள். சிறுவர்களாக இருக்கும்போதே மெய்காப்பாளர் பள்ளிக்கூடத்தில் இவர்கள் கடுமையான பயிற்சியில் தேர்ந்தவர்கள். 'ஸ்டாலினை நோக்கிவரும் துப்பாக்கி ரவைகளைச் சந்தோஷத்தோடு நம் சதையில் ஏற்றுத் தடுக்கவேண்டும்.' - இது ஒன்றே இவர்களின் லட்சியம். கிரெம்லினுக்கு வெளியே உள்ள ஜனங்களோடு இவர்கள் பேசக்கூடாது. அரசாங்கத்தின் அமைதிக்கோ அதிகாரிகளின் உயிருக்கோ உலை வைக்கக்கூடிய யாரையும் இவர்கள் உடனே சுட்டுத் தள்ளலாம்.

1942-இல் ஸ்டாலினைக் கொல்ல ஒரு முயற்சி நடந்தது. அதற்குப் பிறகு இதுவரை ஒன்றும் நடக்கவில்லை. ஆர்மீனியாவைச் சேர்ந்த உபாத்தியாயர் ஒருவர் ஸ்டாலினை

ரெயில் மாறும் போது கொல்ல முயன்றார். ரிவால்வரை நீட்டு முன்பே அவரைக் காப்பதற்கு இருந்த கர்னலுடன் ஒருவன் பார்த்துச் சுட்டு விட்டான். ஸ்டாலின் அந்த இடத்திலேயே அந்தக் காப்டனைக் கர்னல் பதவிக்கு உயர்த்தி விட்டார்.



1. ரெட் ஸ்கொயர்; 2 சாக்கார் காரியாலயங்கள்; 3. ஸ்பாஸ்காயா கேட்; 4. இவான் தி கிரேட் மணிக்கூண்டு; 5. அர்க்கேஞ்செல்ஸ்கி கதீட்ரல்; 6. ஊஸ்பென்ஸ்கி கதீட்ரல்; 7. ப்ளாகோவெஸ்ச்சென்ஸ்கி கதீட்ரல். 8. பட்டாள முகாம்; 9. க்ரேட் க்ரெம்லின் பாலஸ்; 10 வோடோவ்ஸ்வாட்னயா நீர்க்கூண்டு; 11. பாரோவிட்ஸ்கி கேட் (காட்டு வாசல்); 12. பழம் பொருள் ஆயுத மியூஸியம்; 13. ஸ்டாலின் காரியாலயம்; 14. யுத்த தளவாடச்சாலை; 15. ப்ரிஸிடியம் அவ் ஸுப்ரீம் ஸோவியத்; 16. நிகோல்ஸ்காயா டவர்; 17. லெனின் கல்லறை.

நேசதேசப் படைத் தலைவர்களைச் சந்திக்க ஸ்டாலின் புறப்பட்ட இரண்டு தடவையிலும் அவரைக் காவல் புரிந்த கர்னல் ‘எக்ஸ்’ என்பவர் இவர்தான்.

1950 - ஆம் வருஷத்தில் மாஸ்கோ ரேடியோவில், “6 லட்சம் தொழிலாளர்கள் கிரெம்லின் கோட்டையை மறுபடியும் சீர்திருத்திக் கட்டி முடித்தார்கள்” என்ற செய்தி வெளியாயிற்று. கோட்டைகளின் மேல்புறத்தைக் கட்டுவதற்காகவே இவர்களை அமர்த்தியிருந்தார்கள். எம். வி. டி. ராணுவத்தைச் சேர்ந்த எஞ்சினீயர்களும் தொழிலாளர்களுமே கோட்டையின் ரகசியப் பாதுகாப்புக் கொத்தளங்களை அமைத்தார்கள் என்ற விவரம் வெளியாகவேயில்லை. எந்த ராணுவத்தினாலும் அழிக்க முடியாததாக இன்று அந்தக் கோட்டை விளங்குகிறது. சண்டை முடிந்ததிலிருந்து அணுக்குண்டுத் தாக்குதலுக்கு என்ன செய்வது என்பதே கிரெம்லின் உத்தியோகஸ்தர்களுக்குப் பெருங்கவலையாகி விட்டது. இந்த வருஷம் வெளியே ஓடிவந்த ஒரு ருஷியப் போலீஸ் அதிகாரி ருஷிய ‘ஆட்டம்கிராடு’ என்ற ‘அணுக்குண்டு’ நகரைப் பற்றி என்னிடம் சொன்னார். தலை சிறந்த ருஷிய விஞ்ஞானிகளும் எஞ்சினீயர்களும் சேர்ந்து கிரெம்லினுக்கு 90 அடி கீழே ஒரு புதிய கோட்டையையே நிர்மாணித்து விட்டார்கள். இதில் ஒரே சமயத்தில் 2000 பேர் இருக்கலாம்.

ஸ்டாலின் தமமுடைய படுக்கையறையில் இருந்தபடியே ஒரு ‘லிப்ட்’ மூலம் அணுப் பாதுகாப்புக் கோட்டைக்குள் இறங்கிவிடலாம்.

ஸ்டாலினுடைய ஆபீஸ் கிரெம்லின் மாளிகையின் மூன்றாவது தளத்தில் இருக்கிறது. இதை

ஜார் காலத்தில் செனேட் சபையாக உபயோகித்து வந்தார்கள்.

ஸ்டாலின் குடியிருக்கும் இடத்தில் உள்ள வாசலுக்கு இரண்டு பெரிய கதவு வழியாகப் போக வேண்டும். வழியெல்லாம் பச்சைத் தோல் மெத்தை வைத்துத் தைத்திருக்கிறது. அதற்குள் பிரம்மாண்டமான இரும்புக் கதவு ஒன்று உண்டு. ஸ்டாலின் தம் மேஜையில் இருந்தபடியே அதைத் திறக்கவோ மூடவோ முடியும்படி அமைத்திருக்கிறார்கள்.

பெரும்பாலான பாதுகாப்பு முறைகளை அமைத்தவர் சுடாகோவ் என்ற புகழ்பெற்ற விஞ்ஞானி. எல்லாவற்றையும்விடச் சிறந்த சாதனம் எக்ஸ்-ரே பாதை. ஸ்டாலினைப் பார்க்க வருகிறவர்கள் உட்காரும் அறை அது.

அவர்கள் ரகசிய ஆயுதம் ஏதாவது எடுத்து வந்திருக்கிறார்களா என்பதை அது எக்ஸ்-ரே பிடித்துக் காட்டிவிடும்.

1947 முதல் கிரெம்லினுக்கு உள்ளேயும் வெளியேயும் 'கீகெர் கவுண்டர்' (Geiger Counter) என்ற கருவியை வைத்திருக்கிறார்கள். ஆயிரம் அடி தூரத்தில் அணுச்சக்தி ஆயுதம் ஒன்றை வைத்தால், அதை இந்தக் கருவி உடனே காட்டிவிடும்.

செனேட் சபையிலுள்ள யந்திர சாதனங்கள், இரும்புக் கதவுகள், கருவிகள் இவைகளைத் தோல் மெத்தையினுலும், அழகிய வெல்வெட் திரைகளாலும் வெளிக்குத் தெரியாதபடி மறைத்திருக்கிறார்கள். யாரும் கொன்றுவிடாமல் தம்மைப் பாதுகாக்கவே இவ்வளவு பெரிய யந்திர சாதனங்கள் அமைத்திருக்கிறார்கள் என்ற நினைவே ஸ்டாலினுக்கு ஏற்படக்கூடாதாம்.

ஸ்டாலினின் காரியதரிசிகள், மெய்காவல் அதிகாரிகள் முதலியவர்களைக் கடந்துதான் அவருடைய ஆபீஸ் அறைக்குள் நுழைய முடியும். அறைக்குள் சுமார் 50 கஜ தூரத்தில்தான் அவர் உட்கார்ந்திருப்பார். இது பாதுகாப்புக்காக மட்டும் அல்ல; வெளியாருக்கு அப்போது தாங்கள் சற்று மட்டம் என்ற உணர்ச்சி ஏற்படவேண்டும் என்பதற்குத்தான் இந்த ஏற்பாடு. ஹிட்லரும் முஸோலினியும் இவ்விதந்தான் உட்கார்ந்திருப்பார்களாம்.

ஸ்டாலினுடைய மேஜைக்கு உட்புறமாக ஒரு சிறிய கதவு இருக்கிறது. இதற்குப் பூட்டோ பிடியோ இல்லை. இது இருப்பதே அநேகம் பேருக்குத் தெரியாது. முன்பே இதைப்பற்றி எனக்குத் தெரிந்திருந்தும் என்னுல் இதை லேசில் கண்டு கொள்ள முடியவில்லை. ஸ்டாலின் குரல் கொடுத்தால் போதும்; இந்தக் கதவு திறந்துகொள்ளும். அவருடைய பிரத்தியேக அறைகளுக்குப் போகும் பாதைகளையும் இது பாதுகாக்கும்.

1944-இல் காப்டன் லோஸோவென்ஸ்கி என்ற மெய்காப்பாளர் ஒருவர் ஒரு நாள் ஸ்டாலின் வெளியே இருந்து வந்து தம் ஆபீஸ அறைக்குள் நுழைவதைக் கண்டார். இருபது நிமிஷங்களுக்கெல்லாம் கிரெம்லின் அரசாங்க மோட்டாரில் மற்றொரு ஸ்டாலின் அதே ஆபீசுக்கு முன் வந்திறங்குவதைப் பார்த்ததும், அவருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

'இந்த இரண்டு பேரில் யார் உண்மை ஸ்டாலின்? யாராவது மோசக்காரர்கள் நம் ஸ்டாலினைக் கொல்ல வந்துவிட்டார்களா?

முதலில் வந்தவர் ஸ்டாலினா? இரண்டாவது வந்தவர் ஸ்டாலினா? இரண்டு பேரில் ஒருவர் கொலைகாரரோ? அப்படியானால் அது யார்?' என்று புரியாமல் காப்டன் திணறிப்போனார்.

அவர் உடனே மார்ஷலிடமே போனார். "மேன்மை தங்கிய தலைவரே, உங்களை உங்கள் நன்மையை முன்னிட்டே கைது செய்கிறேன்" என்றார்.

ஸ்டாலின் திடுக்கிட்டுப் போனார். துப்பாக்கி முனையைக் காட்டிக் கொண்டே காப்டன் தம் விசிலை ஊதினார்.

அதிருஷ்டவசமாக இரண்டாவது ஸ்டாலின் தான் உண்மையான ஸ்டாலின் என்பது தெரிந்தது; ஆனால் அவர் கோபிக்கவே இல்லை.

ஸ்டாலின் நம்பர் 1, வேஷதாரியோ கொலைகாரனோ அல்ல. அவர் ஒரு ராணுவ உத்தியோகஸ்தர். அசல் ஸ்டாலினைப் போலவே தோற்றமுடையவர். அதனால் போர் முனை விஜயங்களின்போது அவரே ஸ்டாலினாக விளங்குவார்.

வெகு தூரங்களிலுள்ள போர்க்களப் படையினரைப் போய்ப் பார்வையிடுவது என்பது மார்ஷல் ஸ்டாலினுக்குச் சிரமமான காரியம். ஆனால் போலி ஸ்டாலின் மார்ஷல் உடையில் அசல் ஸ்டாலினாகக் காட்சி அளித்துத் துருப்புகளை மகிழ்விப்பார்.

இவ்விதம் ஒரு போலி ஸ்டாலின் இருப்பது என்பது பெரிய ரகசியம். மெய்காப்பாளர்கூட யுத்தம் முடியும் போதுதான் அப்படி ஒருவர் இருப்பதைத் தெரிந்துகொண்டார்கள்.

ஸ்டாலினுக்குக் காப்டன் லோஸோவென்ஸ்கி செய்ததில் பரம திருப்தி. அந்தக் காப்டனைக் கர்னல் பதவிக்கு உயர்த்திவிட்டார். ஜெனரல் ஸ்மெர்கினுக்கு அவர் தான் இப்போது வலது கை. அவருக்கு அடுத்த வாரிசுகூட அவர்தான். இதை ஜெனரலே எனக்குச் சொன்னார்.

கதை இதுதான்

வில் ரோகர்ஸ் என்ற நடிகர் நடிப்பதற்காக ஹோமர் கிராய் என்பவரைக் கதை எழுத அமர்த்தியிருந்தார்கள். ஆசிரியரிடம் நடிகர் வந்தார். "நான் நடிப்பதற்காக நீங்கள் ஏதோ ஓர் அருமையான கதை எழுதிவைத்திருக்கிறீர்களாமே; பாக்ஸ் படமுதலாளிகள் சொன்னார்கள். எங்கே, அந்தக் கதையைக் காட்டுங்கள்" என்று கேட்டார். ஒரு சிறு துண்டுக் காகிதத்தை நடிகர்முன்பு ஆசிரியர் வீசினார். நடிகர் அதைப் படித்துவிட்டுச் சிரிப்புடன், "சரி; இதில் நான் நடிக்கத் தயார்" என்றார். அந்தப் படமே ரோகர்ஸ் நடித்த முதல் படம். பிறகு அவர் நடித்த அத்தனை படங்களின் கதையையும் கிராயே எழுதினார். அன்று அந்தத் துண்டுக் காகிதத்தில் கிராய் எழுதியிருந்தது இதுதான்; "பஞ்சத்திலே பணத்தை இழந்தான் பைச்பீடர்ஸ். அந்த நிலைமைக்கேற்றபடி தன் வாழ்க்கையைத் திருத்திக்கொண்டான்."

—பென்னர்லைன் லேட்டி

நீர்க் குதிரை

★

ஸினிமாக் காதலில்தான் நாட்டியம் நடக்கும் என்று நினைக்காதீர்கள்; இந்தச் சின்னஞ் சிறு விசித்திரப் பிராணியின் காதலிலும் அது நடக்கிறது! வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றிலும் கிரெஷாம் ஸைக்ளோபீடியாவிலுமுள்ள விவரங்களை ஆதாரமாகக்கொண்டது இந்தக் கட்டுரை.

நம் கற்பனைக்கெட்டாத எத்தனையோ விசித்திரப் பிராணிகள் இயற்கையிலே இருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் தூக்கியடிக்கும் பெரிய விசித்திரம் நீர்க் குதிரை (Sea horse) என்ற பிராணி. இதற்கு 'ஹிப்போகாம்பஸ்' (Hippocompus) என்றும் ஒரு பெயா உண்டு. இது மீன் இனத்தைச் சேர்ந்தது.

இதற்குக் குதிரைத் தலை; புறா மார்பு; குரங்கு வால். உடல் நிறமோ பச்சோந்திபோல் மாறக் கூடியது. இதன் இரண்டு கண்களும் தனித்தனியே வெவ்வேறு திசைகளில் திரும்பிப் பார்க்கக் கூடியவாறு அமைந்திருக்கின்றன. ஒரு கண் மேலே திருப்பி நீர மட்டத்தைப் பார்க்கும்; அதே சமயத்தில் மறுகண் கீழே திரும்பி நீருக்கடியில் பார்க்கும். ஆணின் வயிற்றிலே ஆஸ்திரேலியக் கங்காருவுக்கு இருப்பதுபோல் ஒரு பை இருக்கிறது. அந்தப் பையில் முட்டைகளை வைத்து ஆண்தான் அடை காக்கிறது. குஞ்சுகள் அந்தப் பையிலேயே உருவாகின்றன.

இதற்கு 'ஹிப்போகாம்பஸ்' என்ற பெயரை வைத்தவர்கள் கிரேக்கர். 'ஹிப்போகாம்பஸ்' என்றால் 'குதிரை மரவட்டை' என்பது பொருள். இந்தப் பிராணியில் நாற்பது வகை உண்டு. ஓரங்குல நீளம் முதல் ஓரடி நீளம் வரை இருக்கின்றன. உலகத்தில் வெப்பம் உள்ள கடல் இருக்குமிடமெல்லாம் அநேகமாய் இந்தப் பிராணிகள் தென்படுகின்றன.

மாறுவேஷம் போட்டுக்கொள்வதில் நீர்க்குதிரை பெரிய நிபுணன். கரும் பழுப்பு, அல்லது வெண்கலக் கறுப்பு வர்ணந்தான் பெரும்பாலான நீர்க் குதிரைகளின் இயற்கை நிறம். மத்தியதரைக் கடலில் வசிக்கும் நீர்க் குதிரைகள், உடம்பில் ஒரு விதக் 'குட்டைச் சட்டை' போட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தச் சட்டையில் ரோஜா, மஞ்சள், நீலம், வெள்ளை இவைகளில் ஏதாவதொரு வர்ணத்தை அள்ளித் தெளித்தது போல் திட்டுக்கள் விழுந்திருக்கும். ரத்தினங்களை வைத்திழைத்தது போல் நீர்க்குதிரைகளின் உடம்பு ஜொலிக்கும். அபாயம் நெருங்குவதாகத் தோன்றினால், இந்த ஜொலிப்பெல்லாம் போய்விடும்; பக்கத்திலுள்ள பாறையோடு பாறையாகப் பழுப்பு நிறத்துக்கு மாறி ஒட்டிக்கொண்டு விடும்.

ஆஸ்திரேலிய நீர்க் குதிரையின் உடம்பிலே கடற்பாசி

போன்ற சிறகுகள் அமைந்திருக்கின்றன. ரிப்பன் கடையிலே தொங்கும் நாடாக்கள் தான் பறந்து வந்து இப்படிக் கடலிலே விழுந்து கிடக்கின்றனவோ என்று எண்ணும்படி இருக்கும். ஆரஞ்சுப் பழுப்புக் 'கொம்புகள்' அதன் தலையிலே நீண்டிருக்கும். மூக்கு, உடம்பு, வால் இவைகளிலிருந்தெல்லாம் கடற்பாசி போன்ற சிறகுகள் (Fins) தொங்கும். வெகு கூர்மையான கண்ணுடையவர் கூட இதைப் பார்த்துக் கடற்பாசியே என்று மதித்து ஏமாந்து போவார்கள்.

நீர்க்குதிரையின் உடம்பை ஒடு ஓடாக ஒட்டிய எலும்புக்கவசம் ஒன்று மூடியிருக்கும். இப்படிக் கெட்டியான கவசம் பூண்டிருப்பதால், நின்ற நிலையிலேதான் நீஞ்சும். அது மிகவும் கம்பீரமாயிருக்கும். முன்னும் பின்னும் மேலும் கீழும் இதே நிலையில்தான் நீசசல். வாயு (காஸ்) அடைத்த பை ஒன்று அதன் உடம்பில் இருக்கிறது. இந்தப் பையின் உதவியால்தான் அது மிதக்கிறது. இந்தப் பையிலே தட்டித் தவறி ஏதாவது ஓட்டை விழுந்துவிட்டால், வாயுவெல்லாம் வெளியேறிவிடும். நீர்க்குதிரை நிலை குலைந்து தண்ணீரில் அமிழ்ந்து அடிமட்டத்துக்குப் போய்விடும். மீண்டும் அந்தப் பை சீர்பட்டு, வாயு உற்பத்தியாகிப் பை நிரம்புகிற வரைக்கும் அது அங்கேயே கிடக்கவேண்டியதுதான்.

மிக நுண்மையான கிருமிகளையும் ஒரு விதப் பாசியையும் தின்று கொண்டு நீர்க்குதிரை ஜீவிக்கிறது. உயிரோடு இராததையும் அது தொடவே தொடாது. நீர்க்குதிரையின் உடம்பு ஒரே முள்ளும் எலும்பும் கெட்டித் தோலுமாயிருக்கும்.



நீர்க் குதிரை

ஆகவே, அதை மனிதனோ, பெரிய மீன்களோ பிடித்துத் தின்னுவதில்லை.

நீர்க் குதிரையின் காதல் நாடகம் வெகு தமாஷாக இருக்கும். ஆண், பெண் இரண்டும் சேர்வதற்கு முன் 24 முதல் 48 மணி நேரம் வரையில் காதல் நாட்டியமாடும். தம்பட்டமடிப்பது போல், சிரகுகளை அடித்துக்கொண்டே இந்த நாட்டியம் நிகழும். இப்படியே வெகு தளுக்காக ஒன்றை ஒன்று சுற்றி வட்டமிடும். ஆணைப் பெண்தான் துரத்தும். பிறகு உடல் நடுங்க ஒன்றை ஒன்று கட்டித் தழுவும். தான் சிருஷ்டித்துள்ள பல முட்டைகளை ஆணின் அடைகாக்கும் பைக்குள் பெண் அப்போது போட்டுவிடும். மீண்டும் மீண்டும் ஆணைப் பெண் தழுவி, 200 முதல் 600 முட்டைகளை அதனிடம் அளிக்கும். இப்படி முட்டைகள் மாறும்போதே அவை

கருவுறும். இந்தக் காரியம் முடிந்ததும், பெண் எவ்விதக் கவலையுமில்லாமல் சுயேச்சையாய் ஓடிப் போய்விடும்.

நாற்பத்தைந்து நாள்வரைக்கும் அந்த முட்டைகளைத் தன் பைக்குள் வைத்து ஆணே அடைகாக்கும். குஞ்சுகள் உருவாக உருவாக, அடைகாக்கும் பை பருத்துக்கொண்டே போகும். குஞ்சுகளுக்குச் சில நாள் வரை இரை தேடிக்கொடுத்துத் தன் பையில் வைத்தபடியே ஆண் காப்பாற்றும். சுமார் நாற்பத்தைந்து நாளானதும், முதல் குஞ்சு தள்ளிக் குதித்துக்கொண்டு வெளிப்படுகிறது. பிறகு ஒன்று, பிறகு ஒன்று, பிறகு ஒன்று இப்படிச் சில வெளிப்படுகின்றன. ஆண் இதன் பின் இந்த உபத்திரவம் சகிக்காமலோ என்னவோ, ஒரு முக்கு முக்கி ஒரு பந்தை வெளியே தள்ளுகிறது. சிறு சிறு குமிழிகள் ஒட்டிக்கொண்டது போல் ஒரு கட்டியாக அது விழும். உடனே ஐம்பது முதல் அறுபது குஞ்சுகள் அதிலிருந்து கிளம்பி நாலு திசையிலும் பாயும். இப்படிப் பந்து பந்தாகப் பல முறை குஞ்சுகளை ஆண் வெளிப்படுத்தும். ஒவ்வொரு குஞ்சும் கொஞ்சங்கூட மாறுபாடில்லாமல் உருவத்தில் பெற்றோரைப் போலவே அமைந்திருக்கும்.

நீர்க்குதிரையிடம் புராதன காலத்திலிருந்தே மனிதனுக்கு ஒரு வசியம் இருந்து வருகிறது. அதற்கு ஏதோ மந்திரசக்தி உண்டு என்று ஏதன்ஸ் வாசிகள் நம்பினார்கள். நீர்க்குதிரையின் உடம்பைச் சாராயத்தில் ஊற வைத்துவிட்டால், அது விஷம் போல் கொல்லும் என்று அவர்கள் மதித்தார்கள். ஆனால், நீர்க் குதிரையைச் சுட்டெரித்த சாம்பலுடன் தேனையும் திராட்சை ரசத்தையும் கலந்து உட்கொள்வது வேறு பல விஷங்களுக்கு முறிவு என்று நம்பினார்கள். கொப்புளம், மண்டை எழுக்கை, வெறிநாய்க் கடி இவைகளையெல்லாம் இந்த மருந்து குணப்படுத்துமென்று ப்ளினி என்ற பிராணி சாஸ்திரி சொல்லியிருக்கிறார்.

இன்றுங்கூட அமெரிக்காவில் நியூ யார்க், ஸான்பிரான்ஸிஸ்கோ இரண்டு நகரங்களிலும் உள்ள சீன மருந்துக் கடைகளில் நீர்க்குதிரைச் சூர்ணந்தான் அதிவேகமாக விற்பனையாகிறதாம்.

எவ்வளவு செய்ய முடியும்?

தான் இவ்வளவு காரியந்தான் செய்ய முடியும் என்று நினைப்பதைவிட, அதிகக் காரியம் செய்ய முடியாத மனிதனே எவனும் உலகில் இல்லை.

—ஹென்ரி போர்டு

எது மாலுமி சாமர்த்தியம்?

எத்தனை புயல்களை நீ சமாளித்துக் கடந்தாய் என்பதைப் பற்றி உலகத்துக்குக் கவலையில்லை. கப்பலைப் பத்திரமாய்க் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தாயா என்பதுபற்றியே அதற்குக் கவலை.

—வில்லியம் மிக்கி

குறைந்த பேச்சே குழந்தைக்குப் புரியும். வார்த்தைகளைக் கொட்டலாகாது.

குழந்தையிடம் அதிகப் பேச்சு

ரோடா டபிள்யூ. பார்க்மீஸ்டர்

நான் ஒரு நர்ஸரி பள்ளிக்கூட ஆசிரியை. ஒரு சமயம் எனக்குத் தொண்டை புண்ணாகி மிகப் பலமாய்க் கட்டிக்கொண்டது. என்னால் பேச முடியவில்லை. கிசு கிசு என்ற சத்தத்துக்குமேல் குரல் எழும்பவே இல்லை. எனக்குப் பதிலாக வேறு யாராவது ஆசிரியை யைப் பார்த்து அனுப்புவதற்கும் முடியாமல் போயிற்று. என் தொண்டைக் கட்டு, குழந்தை களை ஒன்றும் தொத்திக்கொள்ளா தென்று டாக்டர் தைரியம் சொல் லவே, வழக்கம்போல் பள்ளிக்கூடத் துக்குப் போய் வந்தேன். ஆனால், 'பேச முடியாமல் எப்படிக் கற்றுக் கொடுப்பது? கையாலும் முகத் தாலும் ஜாடை செய்து காட்டினால் போதுமா?' என்று நான் சந்தேகப் பட்டேன். ஆனால் வழக்கம்போல் பாடம் என்னவோ சரிவர நடந்து வந்தது. என் வியப்புக்கு அளவில்லை. அப்போதுதான், எனக்கு ஒரு விஷ யம் புலப்பட்டது: வீட்டிலும் சரி, பள்ளிக்கூடத்திலும் சரி, நான் குழந்தைகளிடம் எவ்வளவு அதிக மாகப் பேசிவந்திருக்கிறேன்!

பேச்சுத்தானே என்று சொல்ல முடியாது. பெரியவர்களாகிய நாம் வெகு சுலபமாகப் பேசுகிறோம். ஆனால் குழந்தைகளுக்கு அது எவ்வளவு கஷ்டம்! அவர்கள் எவ் வளவு கற்றுக்கொள்ள வேண்டியிருக் கிறது? நாம் பேசும் எல்லா வார்த்தைகளும் அவர்களுக்குப் புரிந்துவிடுமா? நாம் ஆயிரக்கணக் கான சொற்களைத் தினசரி அவர் கள் காது கேட்கப் பொரிந்து தள்ளுகிறோம். சில சொற்கள் தான் அவர்களுக்குப் புரியும். சில வற்றின் அர்த்தமே அவர்களுக்குத் தெரியாது. எவ்வளவோ வார்த்தை களைப் பேசும்போது நாம் செய்யும் ஜாடைகள், நம் குரல் இவற்றி லிருந்து, அவர்கள் ஒருவாறு புரிந்து கொள்ளுகிறார்கள். சில சொற்களை அடிக்கடி கேட்பதிலிருந்துதான் அவைகளின் பொருள் அவர்களுக்கு விளங்குகிறது. நாளடைவில் அவர் களும் நம்மைப்போலப் பேசக் கற் றுக்கொள்கிறார்கள். ஆனால் ஒன்றும் தெரியாத இளம்வயதினரான அவர் களுக்குப் புரிந்தாலும் சரி, புரியா விட்டாலும் சரி, நாம் நமக்குத் தெரிந்த வார்த்தைகளையெல்லாம் அவர்கள் முன்பு பொழிந்து தள்ளு கிறோமே! ஏன்?

"உள்ளே வா, ஜானி. அப்போது தான் அம்மா சமைக்க முடியும். ஜானிக்குப் பசிவந்துவிட்டதோ இல் லையோ; ஜானி சாப்பிடவேண் டாமா!" என்றெல்லாம் இரண்டு வயது நிரம்பாத ஜானியிடம் தாய் பெரிதாய்ப் பேசுவானேன்? அவ

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்; நவம்பர் '51), 4600, டைவெர்ஸீ அவென்யூ, சிகாகோ 39, ஐக்கிய அமெரிக்கா.

னுக்கு என்ன புரியும்? பேசாமல் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனால் போதாதா? இல்லையென்றால், "உள்ளே வா! கொஞ்ச நேரத்தில் சாப்பிடலாம்" என்று அவனுக்குப் புரியும்படி இரண்டே வார்த்தை கூறினால் போதுமே!

புன்னகை புரிவது, தட்டிக் கொடுப்பது, தலையசைப்பது போன்ற செயல்களே குழந்தைகளுக்கு நன்றாய் விளங்கும். அப்படியே தான் திருப்தி, அதிருப்தி, சந்தோஷம் முதலிய நம் முகபாவங்களும். பேசாமல் ஊமை ஜாடைகள் காட்டினால் குழந்தைகள் எவ்வளவு வேகமாகப் புரிந்துகொள்ளுகிறார்கள் என்பதைப் பார்க்கும் போது வேடிக்கையாயிருக்கும்.

பேச்சு முக்கியம்தான். நாம் கூறுவதையெல்லாம் குழந்தைகள் சீக்கிரம் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புவது நியாயமே. இருந்தாலும் அதற்காக நாம் எப்போது பார்த்தாலும் பேசித் தீர்க்கக் கூடாது. கொஞ்சமாகப் பேசினால் தான் குழந்தைகளுக்கு நாம் பேசுவதில் சிரத்தை உண்டாகும்.

நாம் ஏதாவது பிற மொழியைக் கற்றுக்கொள்ளும்போது, பிறர் அந்த மொழியில் நிதானமாய் இரண்டொரு வார்த்தைகளைக் கூறினால் நமக்கு எளிதாயிருக்கிறது. அப்படியில்லாமல் அவர்கள் சட் சட் என்று வேகமாக வார்த்தைகளைக் கொட்டிப் பேசினால், நமக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது! குழந்தைகளும் இதே மாதிரிதான் நிதானமாகப் பேசினால் சுலபமாகப் புரிந்துகொள்வார்கள்.

சிறு குழந்தைகளால் ஒரே சமயத்தில் இரண்டு விஷயங்களைக் கவனிக்க முடியாது. குழந்தைகள் விளையாடும்போது நாம் பேசிக் கொண்டே இருந்தால், அதுவே குழந்தைகளுக்கு வழக்கமாகிவிடும். நாம் பேசாவிட்டால் அவர்களுக்கு விளையாட்டில் சரியாக மனம் செல்லாது. சில குழந்தைகள் நாம் பேசுவதைக் கவனிக்காமலே இருந்து விடுவார்கள். நாம் கூறும் அநேகம் வார்த்தைகள் அவர்களுக்கு விளங்காமல் இருப்பதால், ஒன்றையுமே காதில் போட்டுக்கொள்ளாமல் இருந்துவிடுவார்கள். ஆனால் நாமோ, குழந்தைகள் நாம் கூறுவதைக் கேட்டுச் சரியாகப் பதில் சொல்லவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். நாம் கூறுவதைக் கேட்டு அதன்படி நடக்காவிட்டால் குழந்தைகள் துஷ்டத்தனமாயிருப்பதாக நினைத்துக்கொள்ளுகிறோம். நாம் கூறியது குழந்தைகளின் காதில் விழாமல் இருக்கிருக்கலாம்; அல்லது நாம் மூச்சு விடாமல் பேசிய வேகத்தில் அவர்களுக்குப் புரிந்த இரண்டொரு வார்த்தைகளும் அடிபட்டுப் போய் முடிவில் அவர்களுக்கு ஒன்றுமே புரியாமல் இருந்திருக்கலாம். ஒரு வேளை, 'அம்மாதான் இன்னும் சத்தம் போட்டுக் கத்தவில்லையே!' என்று எண்ணி அவர்கள் சும்மா இருந்தாலும் இருந்திருப்பார்கள்.

இந்த மாதிரி சமயத்தில் நிலைமையைப் புரிந்துகொண்டு நாம் பேசுவதை நிறுத்தி அரை மணி நேரம் சும்மா இருந்தால் நல்லது. சிறிது கவனித்தால் ஒரு தடவைக்கு எவ்வளவு வார்த்தைகளை நாம் கொட்டி விடுகிறோம் என்பது நமக்குத் தெரியவரும்.

குழந்தைகள் ஏதாவது சாமானை எடுத்து உடைத்துவிடப் போகிறார்களே என்ற கவலையில், "அதை

எடுக்காதே; இதை எடுக்காதே" என்று சொல்லிக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. இதைவிட, முன் ஜாக்கிரதையாக அந்தச் சாமானைக் குழந்தைகளின் கைக்கு எட்டாத இடத்தில் வைத்துவிடுவது நல்லது.

நாம் கூறுவதை நிதானமாய் இரண்டொரு வார்த்தைகளில் தெளிவாகக் கூறினால் குழந்தைகளுக்குப் புரியும். நாம் கூறுவதைக் கவனிக்கும் பழக்கமே குழந்தைகளுக்கு விட்டுப் போய்விடலாம். அப்போது குழந்தைகள் நம் வார்த்தைகளைக் கவனிக்கும்படி செய்த பிறகே நாம பேசவேண்டும். இல்லாவிட்டால் சொன்னதையே மேலும் மேலும் சொல்லவேண்டி வரும். பெயரைச் சொல்லிக் கூப்பிட்டவுடன் குழந்தை கவனிக்கவில்லையென்றால் ஒரு நிமிஷம் பொறுத்துக் கிட்டச் சென்று குழந்தையைத் தொட்டு நம்மைக் கவனிக்கும்படி செய்யலாம். தன் விளையாட்டுக்கு இடைஞ்சலாய் நாம் நடக்கவில்லையென்றால், நாம் கூப்பிட்டவுடனேயே குழந்தை, நாம் சொல்வதைக் கவனிப்பான். அப்போது நாம் சொல்வதை நிதானமாய், சகஜமாய், தெளிவாய்ச் சொல்ல வேண்டும். குழந்தைகளின் மனத்தில் படவேண்டும் என்று அடித்துக் கூறி வியாக்கியானம் செய்வது என்பது கூடாது. நாம் கூறியது என்ன என்று குழந்தைகளுக்கு மனத்தில் பட்டு அதன்படி நடப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் வேண்டாமா?

குழந்தைகளின் வயது, சுபாவம் இவைகளுக்கேற்றபடி நாம் அவர்களிடம் பேசவேண்டும். நாலைந்து வயது ஆவதற்கு முன்பே சில குழந்தைகளுக்கு நிறைய வார்த்தைகள் வந்துவிடுகின்றன. அதற்கேற்றபடி அவர்களுக்கு யோசித்துப் பார்க்கவும் சக்தி ஏற்பட்டுவிடுகிறது. "நாற்காலிமேல் சாவியை வைத்துக் கதவைச் சாத்திவிட்டுப் பெட்டியை இங்கே கொண்டுவா" என்று மூன்று காரியங்களை ஒரே சமயத்தில் சொன்னால் சாதாரணமாய் ஐந்து வயதுக் குழந்தைகள் செய்துவிடலாம். ஆனால் சில குழந்தைகளுக்கு அது கஷ்டமாயிருக்கும். ஒரு பெண்மணி தன் ஐந்து வயதுச் சிறுவனை, "மாடிக்குப் போய் என் வெளுப்புக் கை உறையை எடுத்துக்கொண்டு வருகிறாயா? என் பீரோவின் மேல்டிராயரில் இருக்கிறது. பீரோ மேலே பாட்டி படம் இருக்கிறது அல்லவா? அதற்கு அடிப்பக்கம் உள்ள டிராயர் தெரியுமா?" என்றெல்லாம் கூறினாள். சிறுவன் யோசனையோடு நிற்கவே, "பாட்டி படம் தெரியுமோ இல்லையோ?" என்று கேட்டாள். பையன் தலையசைத்தான். "அந்தப் படத்தின் கீழே தான் இருக்கிறது. அப்படியே பீரோவிலிருந்து என் நீலப் பட்டுச் சவுக்கத்தையும் எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறாயா?" என்று கூறி அவனைப் போகச் செய்துவிட்டு, என் பக்கம் திரும்பி, "நானே போய் எடுத்துக்கொண்டு வந்துவிடலாம். இருந்தாலும் குழந்தைக்கும் தெரியட்டுமே என்றுதான் சொன்னேன். எப்படிச் சொன்னாலும் அதற்குச் சரியாகப் புரியமாட்டேன் என்கிறது! என்ன செய்யலாம்?" என்றாள். இவ்வளவு பேசிய பிறகு சிறுவன் போய்ப் பாட்டியின் படத்தைத்தான் கொண்டு வந்தான் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

ஆகவே, குழந்தை பேசுவதைக் கவனித்து அவனுக்குப் புரியக்கூடிய

சொற்களை உபயோகித்துப் பேச வேண்டும். ஏதாவது ஒரு சாமானைப்பற்றிச் சொல்லும்போது அந்தச் சாமானையே காட்டிச் சொன்னால், குழந்தை சுலபமாய் அறிந்துகொள்ளுவான். அவ்விதமே ஒரு காரியத்தைச் செய்வதற்கும், அதைச் செய்து காட்டிவிட்டால் அவனுக்கு எளிதாகிவிடும்.

குழந்தை எவ்வளவு குறைவாய்ப் பேசுகிறதோ அவ்வளவு குறைவாகவே நாமும் பேசுவது நல்லது. இப்படிச் சொல்லுவதனால் குழந்தையுடன் தாய் ஒரு பேச்சும் பேசாமல் மௌன விரதம் பூண்டிருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. அப்படி யாரும் சொல்ல மாட்டார்கள். தாய் தன் குழந்தையுடன் பேசாமல் இருப்பது சாத்தியமா? ஆனால், பேச்சுத் துணைக்கு வேறு எவரும் இல்லாததால் குழந்தையிடம் சளசளவென்று பேசக்கூடாது. சில குழந்தைகள் விளையாடும்போது தாங்களே பேசிக்கொள்ளுவார்கள். அப்போதெல்லாம் நாம் ஒன்றும் தடுக்காமல் விடவேண்டும். குழந்தைகள் ஏதாவது கேள்வி கேட்டால் அவர்கள் சாதாரணமாய் நம்முடன் பேச விரும்புவதாயிருக்கலாம்; அல்லது உண்மையில் ஏதாவது விஷயம் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலால் பேசலாம். 'ஏன்? எதற்கு?' என்று குழந்தைகள் மேலும் மேலும் சில சமயம் கேட்டுக்கொண்டே இருப்பார்கள்.

"போ. சட்டையைப் போட்டுக்கொண்டு வா, எஸ்டெல்" என்றால், "எதற்கு?" என்று கேட்பாள் எஸ்டெல்.

"எதற்கு என்றால் இப்போது வெளியே போகவேண்டும்."

"ஏன் போகவேண்டும்?"

"சும்மாத்தான். ராத்திரிச் சமையலுக்குச் சாமான்கள் வாங்க வேண்டும்."

"ஏன்?"

எஸ்டெல் இப்படி ஒவ்வொன்றுக்கும் கேட்டுக்கொண்டே இருப்பாள். அவளுக்குத் தன் விளையாட்டில் கவனமோ, அல்லது சும்மா பேச்சுக் கொடுப்பதற்காகத்தான் இப்படிப் பேசினாளோ; விஷயம் தெரிந்து கொள்ளவேண்டும் என்று இருந்தால் இப்படி 'ஏன், எதற்கு?' என்று கேட்டுக்கொண்டே இருக்க மாட்டாள்.

"வானத்தில் சந்திரன் இருக்கிறதே! ஏன்? அம்மாவைக் கேட்டால் தெரியவில்லை" என்று ஒரு மூன்று வயதுக் குழந்தை என்னைக் கேட்டாள். அம்மாவுக்குக்கூடத் தெரியவில்லையே என்று அவளுக்குக் கவலை வந்துவிட்டது.

தனக்குத் தெரியும் என்று காட்டுவதற்காகச் சில சமயம் குழந்தை நம்மைக் கேள்வி கேட்கும். ஆனால் நாம் பதில் கூறுவதைக் கவனிக்காமல், 'ஏன்? எதற்கு?' என்று கேட்டுக்கொண்டே இருந்தால் அது சும்மா நம்முடன் பேச்சுக் கொடுப்பதற்காகத்தான் என்று நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஆகவே ஏளவள என்று பேசிக் குழந்தைகளைத் திகைப்படையச் செய்வதைவிட அவர்களுக்கு விளங்கக்கூடிய சொற்களையே உபயோகப்படுத்திப் பேசினால், அவர்கள் நன்றாய்ப் பேசக் கற்றுக்கொள்வார்கள்; மிக அழகான வார்த்தைகளை உபயோகிக்கும் திறமையைக்கூடப் பெற்றுவிடுவார்கள்.

முன்னாளில் இந்தியக் கலைகளும் பண்பாடும் எங்கெல்லாந்தான் பரவியிருக்கின்றன!

ஆப்பிரிக்காவில் இந்து நாகரிகம்

டாக்டர் தமோநாச சந்திர தாஸ்குப்த

மத்தியதரைக் கடலோரமுள்ள நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் முன்காலத்தில் தொடர்பு இருந்து வந்தது. இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. அசோகர், ஹர்ஷவர்த்தனர், சமுத்திரகுப்தர், அலெக்சாண்டர், டேரியஸ் இந்த மன்னர்கள் காலத்து வரலாறுகளிலும், பாஹியன், இத்-ஸிங், யுவான்-ஸாங், பெரிப்ளூஸ் போன்ற வெளிநாட்டு யாத்திரிகர்களின் குறிப்புகளிலும், பர்யா, சியாம், சீனா, மலரயா, ஜாவா இவைகளின் அரசாங்கத் தஸ்தாவேஜிகளிலும் இதைப்பற்றிய விவரங்களைக் காணலாம். ஆதியில் எகிப்தியர், அராபியர், மூர் முதலியவர்களோடும் இந்தியர் தொடர்பு கொண்டிருந்ததற்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன. ஆனால் மத்திய ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, தென் ஆப்பிரிக்கா இந்தப் பிரதேசங்கள் சம்பந்தமாக இந்த மாதிரி தகவல் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. இருந்தாலும் இரண்டொரு சான்றுகள் கிடைக்காமற் போகவில்லை; அதோடு சில விஷயங்களை ஊகிக்கவும் இடம் இருக்கிறது.

ஆப்பிரிக்காவில் எதியோப்பியாவுக்குக் கிழக்கே மடகாஸ்கர் என்று வழங்கும் 'சொகோதரா' (சுக தாரை-துருவ நட்சத்திரம்) தீவைப்பற்றி எல்பின்ஸ்டன் முதலிய ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டிருக்கிறார்கள்: "இந்தியாவுக்கும் இதற்கும் வியாபாரம் நடந்தது; சிலர் இங்கே குடியேறியதாகவும் தெரிகிறது" என்று எழுதியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் இந்தியர்கள் இதை 'மலயம்' என்றும், ஜான்ஸிபார் தீவைக் 'காலயவனம்' என்றும் அழைத்து வந்தார்கள். தண்டி எழுதிய 'தசகுமார சரித்திரம்' என்ற நூலில், நாடு கடத்தப்பட்ட இளவரசன் ஒருவன் இந்தத் தீவில் வாழ்ந்த ஒரு பெண்ணை மணந்த விவரம் வருகிறது. அரபிக் கதைகளில் வரும் ஒரு தீவின் வருணனையைக் கவனித்தால் அது இந்தத் தீவாகத்தான் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆப்பிரிக்காவிலுள்ள சில இடங்களின் பெயர்களைக் கேட்கும்போது, இந்தியாவுக்கும் இதற்கும் எப்போதோ ஒரு காலத்தில் தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இவைகளில் எந்த எந்தச் சொற்கள் பல வகை இனத்தாருக்குப் பொதுவானவை, எவை ஒரு சாராருக்கே உரியவை என்று ஆராயவேண்டும். பின்வரும் சில சொற்களைக் கவனித்தால் ஒரு பாதி இந்தியாவில் வழங்குவது போலவும் மறுபாதி ஆப்பிரிக்காவில் வழங்குவதுபோலவும் தொனிக்கும். பல இனத்தைச் சேர்ந்த மக்கள் இந்தியாவில் இருப்பதால் இங்கிருந்து அநேகர் பிற நாடுகளுக்

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: நவம்பர் '51), கல்கத்தா.

குக் குடிபோய் இருக்கலாம் என்று சொல்ல இடமிருக்கிறது.

ஆப்பிரிக்க மக்களில் பெரும்பாலோர் நெக்ரிடோ என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தொகையும் ஒரு காலத்தில் மங்கோலியர், காகேஷியர், ஆஸ்ட்ரிக் முதலிய இனத்தாரைப் போலவே மிகுதியாகத்தான் இருந்தது; மற்ற இனத்தாரைப் போலவே இவர்களுக்கும் பழமையான நாகரிகம் உண்டு. பல யுகங்களுக்கு முன் இவர்கள் ஆசியா, ஓஷியானியா, அண்டார்க்டிக் பிரதேசங்களின் பல பகுதிகளில் பரவியிருந்திருக்க வேண்டும். ஏனென்றால், இந்தியா, அந்தமான் தீவு, பஸிபிக் தீவு முதலிய இடங்களில் இன்னும் நெக்ரிடோ வகையைச் சேர்ந்த பல மக்கள் இருப்பதைக் காணலாம். இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சிக் காலத்தில் (நெக்ரிடோ இனத்தைச் சேராத ஆப்பிரிக்க ஜாதியினரான) அபிஸீனியர்கள் பலபேர் உத்தியோகம் பார்த்து வந்தார்கள். வங்காளத்தில் இவர்கள் சுல்தான்களாகக் கூட ஆண்டார்கள். வின்ஸெண்ட், மஜூம்தார், எல்பின்ஸ்டன் முதலிய ஆராய்ச்சியாளர் ஆப்பிரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருந்ததாகப் பல வருஷங்களுக்கு முன்பே எழுதியிருக்கிறார்கள். இந்த நெக்ரிடோ மக்கள் எப்படிப் பல இடங்களில் பரவினார்கள், அவர்கள் ஆதியில் எங்கே தோன்றினார்கள் என்ற விஷயம் இன்னும் புரியவில்லை. சில ஆராய்ச்சியாளர் வடகிழக்கு ஆப்பிரிக்காவில் தோன்றினதாகவும் சிலர் தென்மேற்கு ஆசியாவில் தோன்றினதாகவும் சொல்லுகிறார்கள்.

ஆப்பிரிக்கச் சொல்	இந்தியச் சொல்
சிம்ப (சிங்கம்)	சிம்மம் (சம்ஸ்கிருதம்)
அருவீம (ஓர் ஆறு)	பீமன் (,,)
காசாயி (,,)	காசாயி (வங்காளத்தில் ஓர் ஆறு)
அங்கோல (ஒரு பிரதேசம்)	அங்கம் (அங்க நாடு)
வங்கோல (,,)	வங்கம் (வங்க நாடு)
காங்கோ (,,)	கலிங்கம் (கலிங்க நாடு)
சகாரா (பாலைவனம்)	சுவ-ஹாரா (தன்மை இழந்தது)
சோமாலி (நாடு)	சுமாலி (ராவணனின் பாட்டன்)
நைல் (நீலநிறமுள்ள பிரபல ஆறு)	நீலம் (சம்ஸ்கிருதம்)
பட்வா (குள்ள ஜாதியார்)	வடு (சிறுவன்)
அசாந்தி (ஒரு பிரதேசம்)	அசாந்தி (அமைதியற்றது)
பந்து (ஒரு ஜாதியார்)	பந்து (நண்பன், உறவினன்)
ராவணஜாரி (ஒரு மலை)	ராவணன்
குவங்தோ (ஓர் ஆறு)	கபந்தன்
காளிந்தினி (ஒரு துறை)	காளிந்தி (யமுனை)
பேணு (ஒரு கிளையாறு)	வேணு (புல்லாங்குழல்)
முனி (ஓர் ஆறு)	முனி (ரிஷி)
கொங்கண் (ஓர் ஊர்)	கொங்கணம்
ஜூஜூ (துஷ்ட தேவதை)	ஜூஜூ (வங்காளத்துப் பேய்)
பொங்கோ (ஒரு ஜாதியார்)	வங்க (நாட்டினர்)
பனவாசி (ரிஷி, மந்திரவாதி)	வனவாசி (காட்டில் வசிப்பவன்)

இந்தியாவில் பல இனத்தார் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் மங்கோலோ- பாமிர் இனத்தார் தாந்திரிக மார்க்கத்தைக் கடைப் பிடித்து வந்தார்கள்; நெக்ரிடோக் கள் கவிதையிலும் கற்பனையிலும் திளைத்தார்கள்; திராவிட - ஆஸ்திரிக் இனத்தார் கப்பலோட்டு வதிலும், வேதகால ஆரியர்கள் தத்துவவாதத்திலும் சிறந்து விளங்கினார்கள். இப்படிப் பலவித நாகரிகங்கள் இந்தியாவில் இணைந் தன. அறிஞர்கள் இன்னும் சற்றுச் சிரத்தையோடு ஆராய்ந்தால் புராணக் கதைகள், நாடோடிக் கதைகள் இவைகளைப்பற்றிப் பல அதிசயத் தகவல்கள் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆப்பிரிக்க ஜாதியாரில் பலர் பரம்பொருள் ஒன்றே என்று நம்புகிறார்கள்; பித்ருக்களை வழிபடுகிறார்கள். ஹிந்து மதத்தில் இருப்பது போலவே இப்படிச் சில கொள்கைகளை அங்கே காணலாம். ஒன்று, இவை அந்த நாட்டிலேயே தோன்றியிருக்கவேண்டும்; அல்லது, இந்துக்களிடமிருந்து அறிந்துகொண்டதாக இருக்க வேண்டும். ஏனென்றால், இந்தியாவைத் தவிர வேறெந்த நாடும் அந்தக் காலத்தில் நாகரிகம் சிறந்து விளங்கவில்லை; (கிறிஸ்தவ) ஐரோப்பிய நாகரிகம் தலையெடுக்காத சமயம் அது. ஆதி எகிப்து முதலிய கிழக்கத்தி நாடுகளில் பரம்பொருள் ஒன்றே என்ற கொள்கை இருந்ததாகத் தெரியவில்லை. இஸ்லாமே தோன்றாத சமயம் அது. சீன நாகரிகம் பரவியிருக்கலாம் என்றால், அதற்கும் இடமில்லை; சீனா இந்தியாவைவிட வெகு தொலைவில் இருக்கும் நாடு. பஸிபிக் பகுதியில் வாழ்ந்த ஆஸ்திரிக் இனத்தாருக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருந்திருக்கலாம் என்றால், ஆஸ்திரிக் இனத்தாருக்குப் பரம்பொருள் ஒன்று என்ற கொள்கையே தெரியாது. ஆகையால், ஹிந்து-பௌத்த நாகரிகந்தான் இதற்குக் காரணமாக இருந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ரெவரண்டு ஸ்மித் என்பவர் எழுதிய 'இலா மொழி பேசும் மக்கள்' என்ற நூலில் 'மகனை இழந்த தாயைப்'பற்றி ஒரு கதை வருகிறது. அது கௌதம புத்தரின் வாழ்க்கையில் சேர்ந்த ஒரு வரலாறு மாதிரியே இருக்கிறது.

சிருஷ்டிகர்த்தா ஒருவர் உண்டென்றும் ஆதியில் ஆண் பெண் இருவரை அவர் சிருஷ்டித்ததாகவும் பண்டுஜாதியார் நம்புகிறார்கள். அவர்கள் தொழும் 'இமானன்' என்ற தெய்வத்தைப்பற்றிய வருணனையைக் கவனித்தால் நம் இந்திரனை வேதத்தில் பாராட்டுவதுபோலவே இருக்கிறது. நஜோங்கோ, குவான்யமா என்ற ஆப்பிரிக்க ஜாதியார், உப-தெய்வங்கள் பல இருந்தாலும் எல்லாவற்றுக்கும் மேலான ஒரு தெய்வம் இருப்பதாக நம்புகிறார்கள். பகண்டா, கிண்டு, பாஹிமா முதலிய ஜாதியார், அதோடு 'மரண தேவன்' என்று ஒரு தெய்வம் உண்டென்றும் நம்புகிறார்கள். அபுந்து என்ற ஜாதியார், பேய்களுக்செல்லாம் தலைமை தாங்கும் ஒரு தெய்வம் உண்டென்றும் அதன் பெயர் காலுங்கன் (காலன்-யமன்) என்றும் சொல்லுகிறார்கள். சோண்டே என்ற ஜாதியார், நம் காளி போன்ற 'கியாலா' என்ற தெய்வத்தை வழிபடுகிறார்கள்.

காடு, மலை, ஆறு இவைகளுக்குரிய சில குட்டித் தெய்வங்கள்

உண்டு என்று ஆப்பிரிக்க ஜாதியாரில் பலர் நம்புகிறார்கள். பண்டுக்களும் சூடானியர்களும் ஆத்மா என்று ஒன்று உண்டென்றும், அது கூடுவிட்டுக் கூடு பாயும் என்றும் நம்புகிறார்கள். மனிதனே கழுதைப் புலி, சிங்கம், ஓநாய் இப்படியெல்லாம் மாற முடியும் என்று ஆப்பிரிக்க மக்களெல்லாருமே பொதுவாக நம்புகிறார்கள். மந்திரவாதி-மருத்துவர்களின் சக்தி அபாரமானது, பல நோய்நொடிகளை அவர்களால் போக்கமுடியும் என்று நெக்ரிடோக்கள் அவர்களிடம் பயபக்தியுடன் நடந்து கொள்கிறார்கள். நம் நாட்டில் முன்னெல்லாம் இந்து-பௌத்த தாந்திரிகர்கள் செய்ததுபோலவே இங்கேயும் இந்த மந்திரவாதி-மருத்துவர்கள் இராவேளையில் பல ரகசியச் சடங்குகள் செய்கிறார்கள். இவர்கள் வழிபடும் துஷ்ட தேவதைக்கு 'ஜூஜூ' என்று பெயர். நைஜீரியா பிரதேசத்தில் ஆரோ-சுகு ஜூஜூ என்றொரு தேவதையை வழிபடுகிறார்கள். இதைக் கேட்டுப் பூசாரிகள் குறி சொல்வது வழக்கம். அப்போது ரத்தத்தைப் பலியாகக் கொடுப்பார்களாம்.

ஜூலு என்ற ஜாதியாரின் பழங் கதைகளில் ராட்சசர்களைப்பற்றி அநேக இடங்களில் காணலாம். இவர்கள் எப்படி வேண்டுமானாலும் உருவத்தை மாற்றிக்கொள்வார்களாம். இவற்றைக் கவனிக்கும்போது பண்டுக்களும் சூடானியர்களும் மற்ற நாட்டாருக்கு அப்படி ஒன்றும் குறைந்துவிடவில்லை என்று தெரியும். இங்கே வழங்கும் மிருகங்கள், பட்சிகளைப்பற்றிய கதைகள் நம் நாட்டுப் 'பஞ்ச தந்திரம்', 'ஹிதோபதேசம்' இவைகளில் வரும் கதைகளைப் போலவே இருக்கின்றன. இதிலிருந்து ஐரோப்பா, ஆப்பிரிக்கா, தென்மேற்கு ஆசியா முதலிய பல இடங்களில் நம் நாட்டுக் கதைகள் பரவியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஈசாப்புக் கதைகளே நம் நாட்டிலிருந்து ஆப்பிரிக்காவில் பரவி அங்கிருந்து எதியோப்பியர் மூலம் ஐரோப்பாவிலும் பரவியிருக்க வேண்டும். 'எதியோப்' என்ற கிரேக்கச் சொல் 'ஈசாப்பு' என்று மருவி வழங்குகிறது. இந்த ஈசாப்பு ஒரு நீக்ரோ அடிமையாக இருந்திருக்க வேண்டும். பண்டுக்களிடைப் 'புஷ்மென்' என்ற ஜாதியாரிடையே தெய்வங்களின் திருவிளையாடல் சம்பந்தமாகப் பல கதைகள் வழங்குகின்றன.

பிற்காலத்தில் அராபியரும் ஐரோப்பியரும் அடிமை வியாபாரம், தந்த வியாபாரம் இவைகளில் ஈடுபட்டு ஆப்பிரிக்க மக்களைப் பலவிதமாக இம்சித்தார்கள். ஆனால் லிவிங்ஸ்டன், ஸ்டான்லி முதலிய பாதிரிகளும் விஞ்ஞானிகளும் மற்றும் பல அறிஞர்களும் இந்த அடிமை முறையை ஒழித்தார்கள். ஆப்பிரிக்க மக்களிடையே விழிப்பு ஏற்பட்டது. ஆயினும் ஐரோப்பிய நாடுகள், தங்கள் சொந்த நன்மையை உத்தேசித்து ஆப்பிரிக்க மக்களுக்கு இன்னும் இடையூறு விளைவித்துக்கொண்டு தான் இருக்கின்றன. ஆகவே, இனி இந்தியா முன்வந்து ஆப்பிரிக்க மக்கள் கலாசாரம், அரசியல் முதலிய துறைகளில் ஓங்கி விளங்கும்படி உதவ வேண்டியது அவசியமாகும்.

கொடுத்ததை மறப்பதும் பெற்றதை நினைப்பதுமே நட்புக்கு அழகு.

— மோஸ் நியக்கர்

உலகத்திலே எத்தனை இன முஸ்லிம்கள் உண்டு என்பதை அந்த இடத்திலே காணலாம்.

மெக்கா யாத்திரை

கெரால்டு டி. காரி

உலகின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான முஸ்லிம் யாத்திரிகர்கள் ஒவ்வொரு வருஷமும் அராபியாவில் உள்ள மெக்காவில் வந்து கூடுகிறார்கள். ஒவ்வொரு முஸ்லிமும் தன் ஆயுளில் ஒரு முறையாவது மெக்காவுக்கு வந்து தொழ வேண்டியது கடமை என்று தீர்க்கதரிசி முகம்மது நபி (கி. பி. 571-632) சொல்லியிருக்கிறார். "ஆண்டவனிடம் நம்பிக்கை இல்லாதவர்கள் அவனிடம் வர வேண்டிய அவசியம் இல்லை. இந்த வருஷத்திலிருந்து விக்கிரக ஆராதனைக்காரர்களும் இங்கே வர வேண்டாம்" என்று அவர் கி. பி. 629-இல் விதித்து விட்டார். அது முதல் முஸ்லிம் அல்லாதவர்கள் எவரையுமே அங்கே வர அனுமதி கொடுப்பதில்லை. முஸ்லிம் அல்லாதவர்கள் மெக்காவுக்குள் நுழைவது ஆபத்து.

ஆயினும், சில கிறிஸ்தவர்கள் மாறுவேஷந் தரித்து மெக்காவுக்குள் சென்றிருக்கிறார்கள். 'ஆயிரத்தோர் இரவு' என்னும் அராபிக் கதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த காப்டன் சர் ரிச்சார்ட் பர்ட்டன், பீல்ட் மார்ஷல் வேவல் என்ற மாஜி வைசிராயின் உறவினரான காப்டன் ஏ. ஜே. பி. வேவல் இந்த இரண்டு பேரும் மெக்காவுக்குச் சென்று பார்த்து எப்படியோ பத்திரமாகத் திரும்பி வந்து விட்டார்கள். இதுவரையில் மெக்காவுக்குச் சென்ற அந்நியர்கள் மிகவும் குறைவு. மெக்காவுக்குள் தந்திரமாகச் சென்ற இரண்டொரு பேர்களைக் கைது செய்து அடிமைகளாக்கி விட்டார்கள். முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மெக்கா ரகசிய இடமாகவும் முஸ்லிம்களுக்குப் புனித ஸ்தலமாகவும் இருந்து வருகிறது.

வருஷந்தோறும் கப்பல் மூலம் 60,000 முஸ்லிம்களும் ஆகாய விமான மூலம் 1,500 முஸ்லிம்களும் மெக்காவுக்கு யாத்திரை செய்கிறார்கள். அராபியாவிலுள்ள ஜெட்டா என்னும் துறைமுகத்தில்தான் இவர்கள் முதலில் வந்து இறங்குகிறார்கள். மெக்காவிலிருந்து 45 மைல் தூரத்தில் செங்கடற் கரையை யொட்டி இருக்கிறது ஜெட்டா. இங்கேயிருந்து மெக்காவுக்குப் பஸ் போக்குவரத்து உண்டு; டாக்ஸி கார்களும் செல்கின்றன.

அராபியப் பீட பூமியில் 3,000 அடி உயரமுள்ள மலைக் குன்றுகளுக்கு நடுவே மெக்கா இருக்கிறது. இதனால் இங்கே காற்று எப்போதும் வறட்சியாகவே இருக்கும். மெக்காவில் சுமார் 50,000 ஜனங்

மூலம்: எவ்வரிபடிஸ் வீக்லி (ஆங்கிலம்), லண்டன்.

கள் வரையில் வசிக்கிறார்கள். இவர்களில் பலர் வெளி நாட்டில் பிறந்தவர்கள்; ஆனால் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலோர் இந்தியர் அல்லது இந்தோனேஷியர். யாத்திரையாக வந்த இவர்கள் புனித மெக்காவிடம் பிரேமை கொண்டு பல வருஷ காலம் இங்கேயே தங்கி விடுகிறார்கள். சிலர் சாகும்வரை கூட இங்கேயே இருந்துவிடுகிறார்கள்.

மெக்காவில் குறுகிய உயரமான வீடுகள் ஏராளமாக இருக்கின்றன. இதனால் நகரத்தில் போதுமான காற்றோட்டம் இருப்பதில்லை. ஒருவருக்குக் கொஞ்சம் பணம் சேர்ந்துவிட்டால் அவர் உடனே அடுத்த வீட்டு மாடியைவிட இன்னும் ஒரு படி உயரமாகத் தம் வீட்டு மாடியைக் கட்டத் தொடங்கி விடுகிறார். இப்படி உயர்ந்தோங்கிய பல கட்டிடங்களுக்கு நடுவே, உயரமில்லாத 24 வாசல்கள் கொண்ட பெரிய மண்டபம் ஒன்று இருக்கிறது. இதுதான் மெக்கா ஆலயம்.

மண்டபத்தின் ஒரு பக்கத்தில் சிறு கட்டிடம் ஒன்று இருக்கிறது. அராபிய சரித்திரத்தில் வரும் ஆபிரகாம் என்பவரின் மனைவிக்குச் சொந்தமான ஸெம் ஸெம் என்னும் புனிதமான கிணறு இதில்தான் இருக்கிறது. மண்டபத்தின் மத்தியில் ஒரு பிரசங்க மேடை இருக்கிறது. இதற்குப் பக்கத்தில் 30 அடி அகலம் 36 அடி நீளம் 45 அடி உயரம் உள்ள கனவடிவம் ஒன்று இருக்கிறது. இதைக் கன்னங்கறேல் என்றிருக்கும் மிக மெல்லிய துணி போட்டுப் போர்த்திருக்கிறார்கள்.

இந்தக் கன வடிவத்துக்கு ஒரு கதவு உண்டு. தரை மட்டத்திலிருந்து பல அடிகள் உயரத்தில் அதன் வாயிலை அமைத்திருக்கிறார்கள். வெள்ளம் வந்தால், நீரில் மூழ்காதிருப்பதற்காகவே இப்படி அமைத்திருக்கிறார்கள். போர்த்திருக்கும் கறுப்புத் துணியில் தங்க ஜரிகைக் கரையுடன் பூ வேலைகளும் ஜிகினா வேலைகளும் செய்திருக்கும். கனவடிவத்தின் முக்கால் பாகத்தை அந்தத் துணி மூடி மறைத்திருக்கும். இதன் ஒரு மூலையில் வெளிப் புறத்துச் சுவரில் வெள்ளிச் சட்டம் போட்ட முட்டை வடிவக் கல் ஒன்று இருக்கிறது. இதை முஸ்லிம்கள் 'கறுப்புக் கல்' என்று குறிப்பிடுகிறார்கள்.

கனவடிவம் மட்டும் உட்புறம் குடைந்த சூனியமாயிருக்கிறது. "பூமியிலே ஆண்டவன் இருக்குமிடம் இதுதான்" என்று முஸ்லிம்கள் சொல்லுகிறார்கள். காபா என்று முஸ்லிம்கள் குறிப்பிடுவது இதைத்தான். ஆபிரகாமே இதைக் கட்டினாராம். புனிதமான இடம் என்று முஸ்லிம்கள் கருதுவது இதையே. ஒவ்வொரு முஸ்லிமும், தான் இறப்பதற்குமுன் இதைத் தரிசிக்க விரும்புகிறான்.

முகம்மது பிறப்பதற்கு 600 வருஷங்களுக்கு முன்பே தெய்வபக்தர்களின் மெக்கா யாத்திரை வழக்கத்தில் இருந்தது. ஆனால் ஆபிரகாம் காலத்தில் நூற்றுக்கணக்கான தெய்வங்கள் இங்கே இருந்தன. அந்தக் காலத்தில் இந்தக் காபாவின் எல்லைக்குள் வரும் எவரும் தங்கள் ஆடைகளைக் களைந்துவிடுவார்கள்; தங்கள் அங்கிகளைக் காபாவின்மீது வைத்துவிட்டு, இதைச் சுற்றுவார்கள். அந்தக் காலத்தில் இதன் அருகே யாரும் வீடு கட்ட மாட்டார்கள்; பக்கத்தில் உள்ள எந்த மரத்தையும் வெட்டமாட்டார்கள்;

இறந்தவர்களை இதற்குச் சமீபத்தில் புதைக்க மாட்டார்கள். காபாவைச் சுற்றியிருக்கும் மரப்படிகளைச் சுற்றுவார்கள். பின்பு கறுப்புக் கல்லை முத்தமிடுவார்கள். பிறகு, ஆலயத்துக்கு வெளியே உள்ள மார்வா, சாபா என்னும் இரண்டு குன்றுகளுக்கு இடையே ஓடுவார்கள். கடைசியில் மிருகங்களைப் பலியிடுவார்கள். ஓடுவது, ஆடுவது, கைகளைத் தட்டுவது, சீட்டி அடிப்பது இந்த மாதிரியெல்லாம் செய்யும் வழக்கத்தை முகம்மது நபி கண்டித்தார். சாதாரணமாய்ப் பிரார்த்தனை செய்தால் போதும் என்று விதித்தார். முற்றும் உடைகளைக் களையாமல் நான்கு முழத்துண்டு ஒன்றை உடுத்துக் காபாவின் அருகே செல்லலாம் என்று அவர் சொன்னார்.

மெக்காவுக்குக் கால்நடையாகச் செல்பவர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு வந்ததும், தங்கள் ஆடைகளைக் களைந்துவிட்டு நான்கு முழத்துண்டு உடுத்துகிறார்கள். கப்பலில் வருகிறவர்கள் ஜெட்டா துறைமுகத்திலும், விமானத்தில் வருகிறவர்கள் விமான நிலையத்திலும் இறங்கியவுடன் இந்தச் சடங்கைச் செய்துவிடுகிறார்கள். அப்போது உடுத்தும் நாலு முழத்துண்டை ஒரு முடிச்சுப் போட்டே கட்டிக்கொள்ளவேண்டும். வேறு விதமாய்க் கட்டிக்கொள்ளக் கூடாது. வேறு துணி ஒன்றும் அணிய விரும்பினால் அதை இடது தோளில் போட்டுக்கொள்ள வேண்டும்; வலது தோளும் மார்பும் ஒன்றும் அணியாமல் திறந்தே யிருக்க வேண்டும். இப்போது இதற்கெல்லாம் ஐரோப்பாவில் தயாராகும் சிறிய 'பாத் ரூம் டவலை'த்தான் யாத்திரிகர்கள் உபயோகிக்கிறார்கள். வேண்டுமானால் ஒரு குடையும் கையில் இருக்கலாம். கோடைக் காலத்தில் வருகிறவர் குடை வைத்திருப்பது நல்லது.

பெண் யாத்திரிகர்கள் இதற்கெல்லாம் நேர்மாறான விதிகளை அநுஷ்டிக்கவேண்டும். அவர்கள் தலை முதல் கால் வரைக்கும் உடல் முழுவதையும் போர்த்து மறைத்துக்கொள்வார்கள். கண்களும் வாயும் மூக்கும் சிறிதளவே தெரியும். மணிக்கட்டுக்குக்கீழ் விரல்கள் தெரியும்; அவ்வளவே. மற்றப்படி ஒன்றுமே வெளியில் தெரியாது. எல்லாச் சடங்குகளிலும் பெண்கள் ஆண்களுடனேயே இருப்பார்கள். ஆனால், காபா முன்னிலையில் பிரார்த்திக்கும்போது, தனியே செல்வார்கள்.

முஸ்லிம் முறைப்படி முதலில் நீரால் கழுவித் தங்களைச் சுத்தப்படுத்திக்கொள்வார்கள். பிறகு ஆலயத்துக்குள்ளே செல்வார்கள். கறுப்புக் கல்லை முத்தமிடுவார்கள். 'இதோ உன் ஆக்ஞையின்கீழ் இருக்கிறேன்' என்ற பொருளுடைய 'லப்பைக்கா' என்ற வார்த்தையை உரத்த குரலில் கூவி வணங்குவார்கள். பிறகு காபாவை ஏழு தடவை சுற்றுவார்கள். இதில் மூன்று முறை மிக வேகமாக ஓடுவார்கள்; மற்ற நான்கு தடவைகளிலும் மிக மெதுவாகவே செல்வார்கள். யாத்திரிகர்களுக்கு வழி காட்டுகிறவன் சில விசேஷப் பிரார்த்தனைகளைச் சொல்லுவான்; யாத்திரிகர்கள் அவைகளைத் திருப்பிச் சொல்லுவார்கள். கறுப்புக் கல்லுக்குப் பின்னால் செய்வதற்குரிய சில பிரார்த்தனைகள் உண்டு. இங்கேதான் ஆபிரகாம் நின்று பிரார்த்தனைகள் செய்தார் என்று சொல்கிறார்கள்.

ஸெம்ஸெம் கிணற்றிலிருந்து யாத்திரிகர்கள் சிறிது தண்ணீரை எடுத்துக் குடிப்பார்கள். தங்கள் மேலும் அந்த நீரைத் தெளித்துக்கொள்வார்கள். பிறகு மீண்டும் கறுப்புக் கல்லை முத்தமிடுவார்கள். அப்புறம் வெளியே வந்து 493 தப்படி நீளம் உள்ள இரண்டு மேடைகளில் ஏழு முறை ஓடுவார்கள்.

யாத்திரை செய்யும் மாதத்தின் எட்டாம் நாளன்று நாலு முழ உடையுடனேயே அராபத் மலைக்குச் சென்று இரவை அங்கே கழிப்பார்கள். காபி தயாரித்துத் தருபவர்களும் அங்காடிக் கூடைக்காரர்களும் மெக்காவிலிருந்து இந்த மலைக்கு வந்து இவர்களுடனேயே இரவு முழுவதும் சுற்றிக் கொண்டிருப்பார்கள். அடுத்த நாள் அராபத் மலைமேல் நின்றுகொண்டு யாத்திரிகர்கள் பிரார்த்தனை செய்வார்கள். 'லப்பைக்கா' என்று உரத்த குரலில் கூவிவிட்டுக் குரானை ஓதுவார்கள். சூரியன் மறையும் வரையில் இவ்விதமே பிரார்த்தனையில் இருப்பார்கள். பிறகு மெக்காவுக்குச் செல்லும் வழியில் உள்ள முஸடலிபா என்னும் மசூதியில் இரவைக் கழிப்பார்கள். அடுத்த நாள் காலையில் எழுந்திருந்து அருகில் உள்ள மூனு என்ற கிராமத்துக்குச்செல்வார்கள். அங்கே உள்ள சில கல் தூண்களின் மேல் சிறு கற்களை விட்டெறிவார்கள். அந்தத் தூண்களைப் பேய்கள் என்று குறிப்பிடுகிருர்கள். பேய்த் தூண்களுக்குமுன் ஓர் ஆட்டைப் பலியிட்டுப் பிறகு அதை உண்பார்கள்.

இதற்குப் பின்பு மறுபடியும் மெக்காவுக்குச் செல்வார்கள். கடைசியாக ஒரு முறை காபாவைத் தரிசித்ததும் மெக்கா யாத்திரை முடிந்துவிடும். பிறகு விருந்து ஆரம்பமாகும். யாத்திரிகாகள் க்ஷவரம் செய்துகொளவார்கள்; அல்லது க்ஷவரம் செய்துகொண்ட அடையாளமாக ஒரு மயிரைக் களைந்துவிடுவார்கள். வழக்கமாக உடுக்கும் ஆடைகளை அணிந்து கொள்வார்கள்.

மெக்காவுக்கு வரும் யாத்திரிகர்களில் பெரும்பான்மையோர் சுமார் முப்பதினுயிரம் பேர்வரை அரபு நாடுகளிலிருந்தே வருகிருர்கள். ஒட்டகம், கழுதை இவைகளின் மேல் சவாரி செய்தும் நடந்தும் இவர்கள் மெக்காவுக்கு வருகிருர்கள். யாத்திரை மாதத்தில் சுமார் லட்சம் பேர் வரை மெக்காவில் கூடுகிருர்கள். சாதாரணக் காலங்களில் மெக்காவில் உள்ள ஜனத்தொகையைப் போல இது இரண்டு மடங்கு. இந்தியா, எகிப்து போன்ற பக்கத்து நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் மெக்காவுக்கு யாத்திரை வந்து திரும்ப வேண்டுமானல் 75 பவுன் செலவாகும். பிரயாணச் செலவு, வழிகாட்டிகளுக்குச் சம்மானம், வரி, சாப்பாட்டுச் செலவு ஆகிய எல்லாம் இந்தத் தொகையிலேயே அடங்கிவிடும்.

மெக்காவைத் தரிசித்த பிறகு வசதியுள்ளவர்கள் வடமேற்கே 250 மைல் தூரத்தில் உள்ள மெடினுவுக்குச் செல்வார்கள். அங்கேதான் தீர்க்கதரிசி முகம்மது நபியின் சமாதியும் மசூதியும் இருக்கின்றன. மெடினுவுக்குச் செல்ல இயலாதவர்கள், மெக்காவோடு நின்றுவிடுவார்கள். அங்கே யாத்திரையின் ஞாபகார்த்தமாகச் சில போட்டோ புத்தகங்களை வாங்கிக் கொள்வார்கள்; ஸெம் ஸெம் என்ற புனிதமான கிணற்றிலிருந்து சிறிது தண்ணீர் எடுத்துக்கொள்வார்கள்;

காபாவின்மேல் சுற்றியிருக்கும் துணியின் சிறு துண்டுகளை வாங்கிக் கொள்வார்கள்.

வருஷந்தோறும் யாத்திரை மாதங்களில் புதிய துணி எகிப்திலிருந்து மெக்காவுக்கு வருகிறது. இதுவும் ஒரு பெரிய சடங்காகவே நடைபெறுகிறது. இந்தத் துணிக்குக் 'கிஸ்வா' என்று பெயர். இதைத் தாங்கிக்கொண்டு ராணுவப் பாதுகாப்புடன் செல்லும் ஒட்டக வரிசைக்கு 'மஹ்மல்' என்று பெயர். பழைய கிஸ்வாவின் எஞ்சிய பகுதிகளை முக்கியமான யாத்திரிகர்களுக்கு அளிப்பார்கள்; அல்லது மற்றவர்களுக்கு விற்றுவிடுவார்கள். இதிலிருந்து கிடைக்கும் தொகை மெக்கா ஆலய காரியங்களுக்குப் பயன்படும்.

மெக்காவுக்கு வந்து செல்லும் யாத்திரிகர்களை ஹஜ் அல்லது ஹாஜி என்று மற்றவர் கௌரவமாய் அழைப்பார்கள். மெக்காவுக்கு வந்து சென்றவர்களில் சிலர் தங்கள் தலையைச் சுற்றிச் சிவப்புப் பட்டையொன்றை எப்போதும் அணிந்துகொள்வார்கள். மத்தியக் கிழக்கு நாடுகளில் இந்தப் பட்டை மஞ்சள் அல்லது பொன்னிறப் பூவேலைகளுடன் பழுப்பு நிறத்தில் இருக்கும். ஆப்பிரிக்காவில் இது பச்சை நிறமாகவும் மற்ற நாடுகளில் வேறு விதமாகவும் இருக்கும். யாத்திரிகர் மெக்கா யாத்திரை தொடங்குவதற்கு முன்பே அவர்களுக்கு வேண்டிய தகவல்கள், நாணய மாற்று வசதிகளை எல்லாம் சாதி அராபிய சர்க்கார் செய்து தருகிறது. முஸ்லிம் நாடுகளிலெல்லாம் அங்கங்கே யாத்திரிகர்களுக்கு வசதி செய்ய ஏஜெண்டுகள் இருக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் உள்ள முஸ்லிம்கள் மெக்காவுக்கு யாத்திரை செய்ய விரும்பினால் அந்த அந்த நாடுகளில் உள்ள ஸ்தானிகர் காரியாலயங்களின் மூலம் வசதி பெறலாம். ஒவ்வொரு முஸ்லிம் யாத்திரிகருக்கும் வேண்டிய சௌகரியங்களை அவை செய்து தருகின்றன.

மெக்காவில் வருஷந்தோறும் நடைபெறும் இந்த மதசம்பந்தமான கூட்டத்தில், எஸ்கிமோ, சிவப்பு இந்தியர் இந்த இரண்டு இனத்தவரையும் தவிர, உலகிலுள்ள மற்ற எல்லா இனங்களைச் சேர்ந்த மக்களும் இருக்கிறார்கள். மலேயாக்காரர்கள், சுத்தமான ஜாவாக்காரர்கள், மங்கோலியர்கள், சீனர்கள், ஆப்கானியர், பர் தொப்பியும் கால் பூட்ஸும் அணிந்த ருஷியர்கள், புன் சிரிப்பு நிறைந்த நீக்ரோக்கள், சிரியர்கள், அராபியாவைச் சேர்ந்த பூர்விக மக்கள், இந்தியர்கள் முதலிய பல ரக மக்களையும் இந்தக் கூட்டத்தில் காணலாம். ஒவ்வோர் இனத்தவரும் விதம் விதமான தலைப்பாகைகளும் உடைகளும் நீண்ட சட்டைகளும் கவுன்களும் அணிந்திருப்பார்கள். எகிப்தியர்கள் மேல்நாட்டு உடையில் இருப்பார்கள். ஈராக் முஸ்லிம்கள் தாடி வளர்த்திருப்பார்கள். முகம்மது நபியின் வம்சத்தில் வந்த பாரசீக சையதுகள் பச்சைத்தலைப் பட்டை அணிந்திருப்பார்கள். அட்லாண்டிக் கடற்கரையை ஒட்டிய பிரதேசத்தில் வாழும் மொராக்கியர்கள், பாரசீக வளைகுடாவில் முத்தெடுப்பவர்கள், ஈரான் எண்ணெய்த் தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள், தென் அமெரிக்க முஸ்லிம்கள் ஆகிய எல்லாரும் மெக்கா யாத்திரையில் கலந்திருப்பார்கள்.

பொருள்களைப் பாதுகாப்பதற்கு எத்தனையோ தொல்லைகள்; அவைகளுள் ஒன்று கறையான் தொல்லை.

கறையானுடன் போர்

★

வீட்டில் கறையான் பிடிக்க ஆரம்பித்துவிட்டதென்றால் யாருக்குமே திகிலாகத்தான் இருக்கும். புத்தகங்கள், உத்திரங்கள், உடைகள், தோல், வேலிகள், மேஜை நாற்காலிகள் போன்ற பல சாமான்களையும் கறையான் ருசி பார்த்துவிடுகிறது. மரங்கள் உளுத்து விடுகின்றன. ஒவ்வொரு வருஷமும் கறையான் அரிப்பதால் பெருத்த அளவில் சேதம் ஏற்படுகிறது.

கறையான்களில் சுமார் 1,900 இன வகைகள் இருந்தபோதிலும், கறையான்களை முக்கியமாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று பூமியில் வாழும் கறையான் வகை. இவை உயிருடன் இருக்க வேண்டுமானால், தரையுடன் சதா தொடர்பு கொண்டிருக்க வேண்டும். இவை தரை மட்டத்துக்கு மேலும் பரவும். ஆனால் அந்த இடங்களிலெல்லாம் தொடர்ந்து மண் கோடிட்டது போல் போயிருக்கும். இந்த மண் கோட்டை உடைத்துவிட்டால் கறையான்கள் தாமாகச் செத்துவிடும்.

மற்றது மரத்தில் வாழும் கறையான் வகை. இவை தரையுடன் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

தரையில் வாழும் கறையான்கள்தான் உலகில் முக்கால்வாசிச் சேதத்துக்குக் காரணம். மேற்கு இந்தியத் தீவுகள் போன்ற சில பிரதேசங்களில் மரத்தில் வாழும் கறையான்களாலும் அதிக நஷ்டம் ஏற்படுகிறது.

உணவு விஷயத்தில் கறையான்களைப்போலச் சிக்கனமாக இருக்கும் பிராணியைக் காணவே முடியாது. எதையும் அவை சிறிதும் வீணாக்குவதில்லை. அவற்றின் உடலிலிருந்து சுரக்கும் நீரையும் மற்றக் கறையான்கள் நக்கிவிடுகின்றன. இப்படி அவை நக்கும் பழக்கம் ஆபத்தாக முடிகிறது; நீர் சுரக்கும் கறையான்கள் செத்தே போகின்றன. இவ்விதம் செத்த கறையான்களையும் மற்றக் கறையான்கள் புசித்துவிடுகின்றன. இந்தப் பழக்கத்தை நமக்குச் சாதகமாகவும் அவைகளுக்குப் பாதகமாகவும் உபயோகிக்கலாம். ஒரு ரசாயன பாஷாணத்தைக் கறையான்களின் புற்றில் தூவிவிட்டால், கறையான்களின் மேல் விழும் பாஷாணத்தை இதரக் கறையான்கள் சுத்தமாக நக்கி இறந்துவிடும். இறந்த கறையான்களை மற்றக் கறையான்கள் தின்று சாகும். இதே போல் புற்றிலுள்ள எல்லாம் அழிந்துவிடும்.

பல வேறு பரிசோதனைகளின் மூலம் கறையான்களைக் கொல்லும் பாஷாணங்கள் எவை என்று தெரிந்திருக்கிறது. உதாரணமாக ஆர்ஸெ

மூலம்: திருவாங்கூர் - கொச்சிச் செய்தி (தமிழ்: 1-11-'51), திருவனந்தபுரம்.

னிக், பாராடைக்லோரோபென்ஸின் என்பவை கறையான்களை அழித்துவிடும். அதேபோல 'கம்வாக்ஸைன்' என்ற பண்டத்தையும் கறையான்களை ஒழித்துக் கட்ட உபயோகிக்கலாம்.

கட்டிடங்களைக் கறையான் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க இரண்டு வழி உண்டு. ஒன்று, கறையான்கள் நில மட்டத்துக்குமேல் மண்கோடு கட்டாதபடி புது முறைகளில் வீட்டைக் கட்டுவது; தவறிக் கறையான் கோடு அமைத்தாலும், அது நம் கண்ணில் படும்படி இருந்தால் பரவாயில்லை. இந்த மண் கோட்டை உடைத்துவிட்டால் நிலத்தில் வாழும் இந்தக் கறையான் செத்துவிடும்.

வேறொரு வழி: கறையான் அரிப்புக்கு இலக்காகாதிருக்கும் மரப்பலகைகளை உபயோகிப்பது. ஆராய்ச்சிகள் மூலம், மிருது மரங்களைவிடக் கடினமான மரங்கள், கறையான்களை எதிர்க்கும் சக்திவாய்ந்தவை என்று தெரிகிறது. இதற்குக் காரணம் கடின மரங்களில் இயற்கையாகவே சில ரசாயனப் பொருள்கள் இருப்பதுதான்.

கோல்-டார் கிரியஸோட், ஜிங்க் குளோரைட், காப்பர் ஸல்பேட் போன்ற ரசாயனப் பண்டங்களை மரப் பலகைகளுக்குமேல் பூசினால் (மரத்தினுள் 1 அங்குலம் பதிய வேண்டும்) கறையான் கிட்ட நெருங்காது.

குரல் கொடுத்த பூனை

ஒரு பெண்மணிக்குப் பூனை, நாய் முதலிய பிராணிகளிடம் மிகுந்த அன்பு. ஒரு நாள் இரவு ஒரு பூனை 'மியா' என்று கத்தியது. இவளுக்கு அது எங்கிருக்கிறது என்று தெரியவில்லை. பதிலுக்கு இவளும் 'மியா' என்று கத்தினாள். அதுவும் 'மியா' என்று பதில் கொடுத்தது. இவள் 'மியா' என்பதும் அது 'மியா' என்பதுமாகப் பல முறை இப்படி நடந்தது. கடைசியில் இவள் தன் கணவனைப் பார்த்து, "ஐயோ பாவம்! எவ்வளவு அறிவுள்ள பூனை!" என்று பெருமையோடு சொன்னாள்.

அடுத்த நாள் காலை இவள் கணவனின் நண்பர் ஒருவர் வந்து பேசிக்கொண்டிருக்கும்போது, "நேற்றிரவு ஒரு வேடிக்கை அல்லவா நடந்தது. நான் நகரத்துக்குக் குதிரை சவாரி செய்துகொண்டு போனேன். தமாஷாகப் பூனை மாதிரி 'மியா' என்று கத்தினேன். உடனே ஒரு பூனை 'மியா' என்று பதிலளித்தது. பிறகு நானும் அதுவும் மாறி மாறி 'மியா' என்று இருபது நிமிஷம் கத்தினோம். அது எங்கேயிருந்து கத்தியதோ தெரியவில்லை" என்றார்.

பெண்மணியின் முகத்தில் ஈ யாடவில்லை.

—மாட் வின்ஸ்டாக்

கார்ட்டூன் கதம்பம்



தேர்தலுக்கு நிற்கும் ராஜா.

—'போரம்'



படை குறைப்புக்கு—

'ப்ரீ இந்தியா'

காத்திருக்கும் போது



—'சங்கர்ஸ் வீக்லி'

பாலைவனத்தைப் பூந்தோட்டமாக்கிய தெய்வம்—

வனசங்கரி

ஸ்ரீ மல்ஹார பட்டர்

★



வனசங்கரியின் பெயரைக் கேட்காதவர்கள் கர்நாடகத்திலேயே இல்லை. புராணம், இதிகாசம் இரண்டின் காலத்திலும் பிரசித்திபெற்ற இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தின் பெயர் திலகவனம். புராணப் பிரசித்தி பெற்ற வாதாபி என்னும் ஊரிலிருந்து திலகவனம் மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது. தென் மராட்டா ரெயில்வே (ஹூப்ளி - ஷோலாப்பூர்) மார்க்கத்தில் இருக்கும் பாதாமி ஸ்டேஷனிலிருந்து இது ஆறு மைல் பிரயாணத்தில் இருக்கிறது. தினந்தோறும் தேவியைத் தரிசிக்க யாத்திரிகர்கள் வந்து போய்க்கொண்டிருப்பதால், டாக்ஸி, டாங்கா முதலிய வாகனங்கள் எப்போதும் இங்கே கிடைக்கின்றன. சாதாரணமர்க எந்த மதத்தவரும் தேவியிடம் பக்தி பூண்டு ஒவ்வொரு வருஷமும் ரதோற்சவ காலத்தில் வந்து தேவியைத் தரிசித்துக் காணிக்கை செலுத்துவார்கள். சேணியர் குலத்தினர் வெளியூர்களில் எங்கே குடியேறியிருந்தாலும் சரி, அவர்களுக்கு வனசங்கரியே குலதெய்வம் வனசங்கரி கோயிலைச் சுற்றிலும் இந்தக் குலத்தவர் அமைத்த தர்ம சத்திரங்கள் இந்த விஷயத்தைத் தெளிவாக்குகின்றன. இந்தத் தேவாங்கர்கள் (சேணியர்) தாம் குடியேறிய இடங்களில் எல்லாம் வனசங்கரியைப் பிரதிஷ்டை செய்து பூஜிக்கிறார்கள்.

பிரசித்திபெற்ற வனசங்கரி தேவஸ்தான நித்திய நியம பூஜைகளுக்காக ஆயிரம் ஏக்கர் இனாம் பூமி இருக்கிறது. கோயிலின் எல்லைகளில் அமைந்த பம்பாய், மைசூர், ராமகிரி சம்ஸ்தானம் இவற்றிலிருந்து சர்க்கார், தேவி பூஜைக்காகத் தவறாமல் பணம் அனுப்புகிறார்கள். மைசூர் மகாராஜா சமீப காலத்தில்கூட வனசங்கரியைத் தரிசித்துக் காணிக்கை சமர்ப்பித்தார்.

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்: 7-1-'52), ஹூப்ளி.

சுக்ல யஜுர்வேதிகளில் கண்வ சாகையர் என்னும் பிராம்மணர்களே இங்கே அர்ச்சகர்கள். இவர்கள் ஆறு குடும்பத்தார்; தங்கள் முறைப்படி மாறி மாறிப் பூஜை செய்கிறார்கள். தேவஸ்தானத்தின் சகல உரிமைகளும் இவர்களைச் சார்ந்தனவே என்று சமீபத்தில் கோர்ட்டுமூலம் தீர்ப்புக் கிடைத்திருக்கிறது. அர்ச்சகர் சங்கம் ஒன்று அமைத்து, உற்சவம் முதலிய விசேஷங்களை இவர்கள் நடத்துகிறார்கள். கோயிலுக்கு ஒரு மைல் தூரத்தில் இருக்கும் ஒரு மலையில் அர்ச்சகர்கள் குடியிருக்கிறார்கள். விடிய ஜாமத்துக்கு எழுந்திருந்து கோயிலுக்கு வந்து இரவு வரையில் இருந்து பூஜைகளை முறைப்படி செய்துவிட்டுப் படுக்கும்போது வீட்டுக்குத் திரும்புகிறார்கள். உற்சவ காலத்தில் மட்டும் அர்ச்சகர்களும் பக்தர்களும் கோயிலில் தங்குகிறார்கள். பூணூல், கல்யாணம் முதலியவற்றை இங்கே நடத்தும்போதும் அர்ச்சகர்களும் யாத்திரிகர்களும் கோயிலில் தங்குகிறார்கள். மற்ற நாட்களில் யாரும் இங்கே இரவு நேரங்களில் தங்குவதில்லை. யந்திரத்தில் அரைப்பது, உரலில் இடிப்பது இந்த வேலைகளைக் கோவிலுக்குள் செய்யக் கூடாதென்ற தடை இருக்கிறது. ஸ்ரீரங்கம் கோயில்போல், இது இந்தக் கோயிலின் சிறப்புக்களில் ஒன்று.

ஆவணி மாதத்தில் 11 நாட்களில் மகாருத்திராபிஷேகமும் லட்சம் வில்வார்ச்சனையும் நடக்கும். நவராத்திரியில் சண்டிஹோமமும், தை மாதம் சுக்ல அஷ்டமி முதல் துவிதியை முடியத் தினந்தோறும் விசேஷ பூஜையும் வாகனப் புறப்பாடும் நடத்துகிறார்கள். அப்போது வரும் பௌர்ணமியை 'வன பூர்ணிமா' என்கிறார்கள். அன்று ரதோற்சவம் நடக்கிறது. அப்போது சுற்றுவட்டாரங்களிலிருந்து சுமார் ஒரு லட்சம் ஜனங்கள் திருவிழாவுக்குக் கூடுகிறார்கள்.

பம்பாய் சர்க்கார் தை மாத உற்சவத்தைப் பெரிய திருவிழா என்று மதித்து இந்தச் சமயத்தில் வரும் யாத்திரிகர்களுக்குத் தலைவரி வசூலிக்கிறார்கள். கோயிலின் சுற்றுப் புறங்களைச் சுத்தம் செய்விக்கிறார்கள். காலரா முதலிய தொற்று நோய்கள் வராமல் கவனித்துக்கொள்ளுகிறார்கள். இங்கே கூடும் லட்சக்கணக்கான ஜனங்களுக்கு அவசியமான ஹோட்டல்களும் சிற்றுண்டிச்சாலைகளும் பிற திருவிழாக் கடைகளும் ஏராளமாக வருகின்றன. கடைகளின் வாடகை அர்ச்சகர்களையே சேரும். இப்படி வந்த பெருந்தொகையை அவர்கள் ரதோற்சவத்தில் செலவு செய்துவிடுகிறார்கள். உணவுப் பங்கீடு வரும் முன்பு கோயிலில் உற்சவத்தின்போது ஆயிரம் பேருக்குச் சாப்பாடு போடுவது வழக்கம். இப்போது கோயில் சிப்பந்திகளுக்கு மட்டுமே சாப்பாடு இங்கே கிடைக்கிறது. வரும் யாத்திரிகர்கள் எல்லாரும் தங்கப் போதிய கட்டிடங்கள் இல்லாததால் திருவிழாச் காலத்தில் கூடாரங்கள் அமைக்கிறார்கள். ரதோற்சவம் ஆன அன்றிரவு படுக்காமல் சினிமா, நாடகம் இவற்றைப் பார்த்தும், அங்கும் இங்குமாகச் சுற்றிவிட்டும் இரவைக் கழித்துவிட்டு விடியற் காலையில் ஊருக்குக் கிளம்புவோரும் உண்டு. மற்ற நாட்களில் எப்படி இருந்தாலும் திருவிழாக் காலங்

களில் அர்ச்சகர்கள் பரிபூரணமாக ஒத்துழைத்து விழாவைச் சிறக்கச் செய்வார்கள்.

இந்தக் கோயிலை எப்போது நிருமித்தார்கள் என்பதை வரையறுத்துச் சொல்லத் தகுந்த ஆதாரங்கள் இல்லை. ஆனால் சாலிவாகனசகம் 603-ஆம் ஆண்டிலும், கி. பி. 1019-ஆம் ஆண்டிலும், ராஷ்டிரகூடர் காலத்திலும், கல்யாண சாளுக்கியன் - ஜகதேக மல்லன் காலத்திலும் எழும்பிய பல சிலா சாஸனங்கள் இங்கே தென்படுகின்றன. எல்லாவற்றையும் பார்த்தால் இந்தக் கோயில் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று நூற்றாண்டுகளாக இருந்து வருவதாக அறிகிறோம்.

இங்கே கோயில் கொண்ட வனசங்கரி, பாலை நிலத்தில் அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறாள். பாத்ம புராணம், பாரதத்தில் வனபர்வம், தேவீ பாகவதம், மார்க்கண்டேய புராணம் இவற்றிலெல்லாம் இந்தத் தேவியின் பெருமை விவரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இந்தப் புராணங்களில் சொல்லியபடியே 'ஹரித்ரா' முதலிய பன்னிரண்டு தீர்த்தங்களும், பத்து மைல் எல்லைக்குள் மகாகூடம் என்னும் சிவலிங்க ஸ்தானமும், ரங்கநாதர் கோயிலும் அமைந்திருக்கின்றன. ஹரித்ரா தீர்த்தத்தின் மூலம் 40 ஏக்கருக்கும், சரஸ்வதி நதியின் மூலம் 8 ஏக்கருக்கும் நீர்ப்பாசன வசதி இருக்கிறது. சாதாரணமாக ஒவ்வொரு வருஷமும் மழை இல்லாமல் காயும் பாதாமி தாலுகாவில், ஹரித்ரா தீர்த்தத்துக்கும் சரஸ்வதி நதிக்கும் தண்ணீர்ப் பஞ்சம் இல்லை. அதனால் இந்தப் பிராந்தியத்தில் தோட்ட விவசாயம் நல்ல மகசூல் தருகிறது. தென்னை, வாழை, வெற்றிலை, கரும்பு ஆகியவை பயிராகின்றன.

ஸ்காந்த புராணத்தில் பதினைந்து அத்தியாயங்கள் வனசங்கரியின் விஷயங்களையே சொல்லுகின்றன. கண்களை மூடி விஷ்ணுவைத் தியானித்திருந்த சத்யும்னன் என்னும் அரசன் தம்மைக் கௌரவித்து வரவேற்கவில்லை என்பதற்காக அகஸ்தியர் அவனை யானையாகும்படி சபித்துவிட்டார். தம் பக்தனைச் சபித்ததால் அகஸ்தியர் மீது மகா விஷ்ணுவுக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் நாரதரை அழைத்து, "காசியைப் போன்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் அகஸ்தியரைப் போன்ற முன்கோபிகள் இருக்கக் கூடாது. அவருக்குப் புத்தி கற்பிக்க வேண்டும். அவரை அங்கிருந்து கிளப்பவேண்டும்" என்று உத்தரவிட்டார். நாரதர் உபாயம் ஒன்று கண்டுபிடித்தார். விந்திய மலையிடம் சென்று அது மேருவை விட உயரவேண்டுமென்ற ஆசையைக் கிளப்பிவிட்டார். விந்திய மலை மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போய், சூரிய சந்திரர்களின் போக்கையும் பாதிக்கத் தொடங்கியது. தேவர்கள் பயந்து அகஸ்தியரிடம் முறையிட்டார்கள். அவர் தெற்கே பிரயாணமானார். வழியில் நிமிர்ந்து நின்ற விந்திய மலை அவரை வணங்கி அடங்கியது. தாம் திரும்பி வரும்வரைக்கும் அப்படியே இருக்கும்படி விந்திய மலைக்கு உத்தரவிட்ட அகஸ்தியர் கொல்ஹாபுரம் (கரவீரம்) என்ற க்ஷேத்திரத்துக்கு மனைவி லோபாமுத்திரையுடன் வந்தார். இதைத் தக்ஷிண காசி என்பார்கள். இங்கே குடிகொண்ட லட்சுமி, வனசங்கரியின் மகிமையைச் சொல்லி அகஸ்திய முனிவரைத் திலகவனத்

துக்கு அனுப்பினுள். அவர் வழியில் மகாகூடம் (வனசங்கரியின் கோயிலுக்கு ஐந்து மைல்) என்னும் இடத்தில் வாதாபி, இல்வலன் என்ற அசுரர்களை அடக்கித் தம் பெயரால் ஒரு தீர்த்தத்தை நிருமித்தார். பாதாமியில் இன்றும் இந்தத் தீர்த்தத்தைக் காணலாம். (வாதாபிதான் பாதாமியென்று மருவியதோ ஒரு வேளை!) அங்கிருந்து அகஸ்தியர் திலகவனத்துக்கு வந்தார்.

அகஸ்தியர் வனசங்கரியைப் பற்றியும் சுற்றிலும் உள்ள தீர்த்தங்களின் மகிமையைப்பற்றியும் லோபாமுத்திரைக்குப் பின்கண்டபடி சொன்னுர்: "ஒரு காலத்தில் நூறு வருஷங்கள் மழை இல்லாததால் பஞ்சம் வந்து புல் பூண்டுகூட அழிந்தவிட்டது. தேவர்கள் திலகவனத்துக்கு வந்து லலிதா தேவியைத் தியானித்தார்கள். மகாகாளி, மகாலட்சுமி, மகாசரஸ்வதி இவர்களின் ஒருருவமாகிய வனசங்கரி தன் உடலிலிருந்து காய் கனிகளைச் சிருஷ்டித்து எல்லாருக்கும் வழங்கிப் பசியைத் தீர்த்தாள். சாகம், அதாவது காய் கனிகளால் பசியைப் போக்கியதால் தேவி அன்று முதல் 'சாகம்பரி' என்ற பெயர் பெற்ருள். ஹரித்ரா தீர்த்தத்தின் மூலமாகப் பாதாளத்திலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து வாய்க்கால்களின் மூலம் தோட்டங்களுக்குப் பாய்ச்சிப் பயிர்களைக் காத்தாள். காய் கனி கிழங்குகள் குறைவின்றிப் பயிராயின. இதைக் கண்டு அரக்கர்கள் இங்கே குடியேறித் தாமே எல்லாவற்றையும் சுவீகரித்துக் கொண்டு அட்டகாசம் செய்தார்கள். அதனுல் சிங்கவாகினியாக வந்து அவளே அவர்களைச் சங்காரம் செய்தாள். தேவர்கள் மகிழ்ந்து அங்கேயே தேவிக்கு ஒரு கோயிலை எழுப்பினுர்கள். தேவி அங்கேயே நிலைத்துவிட்டாள். தேவர்கள் ஹரித்ரா தீர்த்தத்தைப் பாதுகாக்க அஷ்டபைரவர்களை நியமித்திருந்தார்கள். அவர்களுள் ஒருவராகிய சண்ட பைரவருடைய தவத்துக்கு மெச்சிய வனசங்கரி அந்தத் தீர்த்தக்கரைமேல் சண்ட பைரவலிங்கம் ஒன்று ஸ்தாபித்து, தன்னைத் தரிசித்த பலனை அடைய வேண்டுமென்ருல் அந்தலிங்கத்தையும் தரிசிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தாள்."

வனசங்கரியைத் தரிசித்துத் தைல தீர்த்தத்தை அடைந்த அகஸ்தியர் லோபாமுத்திரைக்குப் பின் வரும் வரலாற்றைச் சொன்னுர்."சும்பாசுரனை ஒழிக்க நினைத்த பிரம்மதேவர் தைல தீர்த்தக் கரையில் யாகம் செய்தார். பின்பு ரித்விக்குகளுடன், மலப்பிரபா, சரஸ்வதி, குளகும்பி என்னும் (திரிவேணி சங்கமத்துக்குச் சமமான) நதிகளின் கூடுதுறைக்குப் போனுர். அவருடன் இருந்த அப்ஸரஸ்களைக் கண்டு மோகித்த துர்க்கமாசுரன் அவர்களைத் துரத்தினுன். அவனை வனசங்கரி அழித்து அவன் விருப்பப்படி, சரஸ்வதி நதிக்கரையில் ருத்திரேசலிங்கத்தை ஸ்தாபித்தாள். இது செளராஷ்டிர சோமநாதம் போன்ற 15 சித்தலிங்கங்களில் ஒன்ருக விளங்குகிறது. வனசங்கரியைச்சுற்றிப் பத்து மைல் தூரத்துக்குப் பன்னிரண்டு தீர்த்தங்கள் அமைந்திருக்கின்றன. அவை, கண்ட மாத்திரத்தில் பாபத்தைப் போக்குபவை. அவை மலப்பிரபா நதி, சரஸ்வதி நதி, ஹரித்ரா தீர்த்தம், பத்ம தீர்த்தம், தைல தீர்த்தம், ரங்கநாத தீர்த்தம்,

அகஸ்திய தீர்த்தம், அசுவத்த தீர்த்தம், பாஸ்கர தீர்த்தம், கோடி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், நாகேச தீர்த்தம் என்பவை. வன சங்கரி கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்து பத்ம தீர்த்தம் வெட்டிய பத்ம ராஜனுக்குத தேவி நல்ல புத்திரனை அநுக்கரகித்தாள். சும்பாசுரனுடைய சகாக்களான கோடி அசுரர்களைக் கோடி தீர்த்தத்தில் அழித்தாள்; அசுவத்த தீர்த்தத்தை நிருமித்தவர் அசுவத்தாமா. தன்னைப்போல் படித்தவன் இல்லை என்ற கர்வத்தால் பிராம்மணர்களை அவமதித்த கௌடப் பிராம்மணன் ஒருவன் பிரம்மராக்ஷஸாக மாறிவிட்டான். அசுவத்தாமா தம் கமண்டல தீர்த்தத்தைத் தெளித்து அவனைச் சாபத்திலிருந்து விடுவித்தார். பாறு என்ற ஏழைக் குருட்டுப் பிராம்மணர் ஒருவர் வனசங்கரியின் கட்டளைப்படி, சூரியனை ஆராதித்துப் பாறு தீர்த்தத்தில் முழுகிக் கண்களையும் ஐசுவரியத்தையும் பெற்றார். அதில் முழுகினால் குஷ்டம் போன்ற நோய்களும் தீருமாம். கரவீரம் (கொல்ஹாபுரம்), விருபாக்ஷம், ஸ்ரீசைலம், பண்டரீபுரம், திலகவனம் (வன சங்கரி கோயில் கொண்ட இடம்), சேது ஆகியவை இகபர சுகத்தைக் கொடுப்பவை என்று திருமாலே நாரதரிடம் சொல்லியிருக்கிறார்.''

வனங்களுக்கு க்ஷேமத்தை உண்டாக்கிய வனசங்கரியின் ரதோற்சவம் தைப் பௌர்ணமியன்று நடக்கிறது. சதுர்த்தசியன்று 'காய்கறிப் பண்டிகை' ஒன்று கொண்டாடுகிறார்கள். அன்று எல்லாவகைக் காய்களும் சமைத்துத் தேவிக்கு நிவேதனம் செய்வார்கள். நவராத்திரியின்போது திலகவன வாசிகள், வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்களுடன் வனசங்கரி உற்சவம் கொண்டாடி வணங்குகிறார்கள்.

பாடத் தெரியுமா?

'என்னை முத்தமிடு, கேட்' என்ற படத்தில் ஜாக் டயமண்ட் என்பவர் நடித்திருக்கிறார். அதில் நடிப்பதற்கு அவர் மனுப் போட்டபோது, கோல் போர்ட்டர் என்ற டைரக்டரைப் பேட்டி கண்டார். "உனக்குப் பாடத் தெரியுமா?" என்று கேட்டார் டைரக்டர்.

"தெரியும்; பாடிக் காட்டுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை: என் பாட்டு உங்களுக்குப் பிடித்தால், ஒன்றும் சொல்லக் கூடாது; எழுந்து நின்றால் போதும்'' என்றார் டயமண்டு.

டோர்ட்டர் சம்மதித்தார்.

'நட்சத்திரப் புள்ளிகள் போட்ட கொடியே' என்ற அமெரிக்கத் தேசிய கீதத்தை டயமண்ட் பாடினார்.

குறிப்பு: அவருக்கு நடிகர் உத்தியோகம் கிடைத்து விட்டது.

—ஜோயி பே

மக்களின் மனங்கவரும் இந்த முறையைக்
கடைப்பிடிக்கிறது அந்தச் சர்க்கார்.

புதிய சீனுவில் சம்பளம்

சுரேஷ் ராமாபாய்

சமீபத்தில் சீனமக்கள் குடியரசின் இரண்டாம் ஆண்டு விழாவின்போது, பண்டித சுந்தரலாலின் தலைமையில் இந்திய நல்லெண்ணத் தூதுக் கோஷ்டி ஒன்று சீனுவுக்குப் போயிருந்தது. புதிய சீனுவைப்பற்றி அவர் சில ரசமான விஷயங்களைப் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்:

"சீனுவில் இப்போது உணவுத் தானியமாகவே சம்பளத்தைக் கொடுக்கிறார்கள்; காகித நோட்டுக்களை வழங்குவதில்லை. நாங்கள் சில ஆலைகளைப் பார்க்கப் போனேம். அவைகளில் மானேஜர் அல்லது டைரக்டருக்குச் சம்பளம் என்ன தெரியுமா? வேலையில் தேர்ச்சி பெறாத சாதாரணத் தொழிலாளி பெறுவதைப் போல் சுமார் மூன்று மடங்குதான். பிஸ்கோத்து ஆலை ஒன்றில் சாதாரணத் தொழிலாளி ஒருத்திக்கு மாதச்சம்பளம் 250 யூனிட். ஒரு யூனிட் என்றால் சுமார் ரூ. 1-2-0. டைரக்டருக்கோ 350 யூனிட்தான். சர்க்கார் இலாகாக்களில் குறைந்தபட்சச் சம்பளம் 150 யூனிட்; அதிகப்பட்சம் 350 யூனிட். சர்வகலாசாலைகளில் சாதாரண பியூனுக்கும் உப அத்தியட்சகருக்குக்கூட இதே ரீதியில்தான் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆலைகளில் மானேஜருக்கும் தொழிலாளிக்குமோ, சர்வகலாசாலைகளில் உப அத்தியட்சகருக்கும் பியூனுக்குமோ உடையில் எந்த விதமான வித்தியாசமும் காண முடியவில்லை."

அவரோடு போயிருந்த மற்ற அங்கத்தினர்களும் இப்படியேதான் சொன்னார்கள். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், சர்க்கார் ஊழியர்களுக்கு உணவு, உடை, வைத்தியம், குடியிருப்பு, குடும்பம், குழந்தைகளின் படிப்பு இவைகளுக்கான வசதிகளை அளித்துக் கைசெலவுக்கு மாதம் சுமார் பத்து முதல் இருபது ரூபாய் வரை கொடுக்கிறார்கள்; இதுதான் சம்பளம். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாருமே இந்த ரீதியில்தான் வாங்குகிறார்கள். ராணுவத்திலும் பெரும்பாலும் இப்படியேதான் நடக்கிறது. ராணுவத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் ஒரு நாளுக்கு ஏழு மணி நேரம் விவசாயமோ அது சம்பந்தமான வேறு ஏதாவது தொழிலோ செய்யவேண்டியிருப்பதால் சர்க்காருக்கும் அவர்களைப் போஷிக்க அதிகச் செலவு ஆவதில்லை. ரெயில்வேயிலும் நிலக்கரிச் சுரங்கத்திலும் உழைக்கும் சாதாரணத் தொழிலாளிக்குச் சராசரி 400 கட்டி உணவுத் தானியம் சம்பளமாகக் கொடுக்கிறார்கள். நெசவாலைகளில் அதே மாதிரி ஒருவனுக்கு 500

மூலம்: ஹரிஜன் (ஆங்கிலம்), அகமதாபாது.

அகஸ்திய தீர்த்தம், அசுவத்த தீர்த்தம், பாஸ்கர தீர்த்தம், கோடி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், நாகேச தீர்த்தம் என்பவை. வன சங்கரி கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்து பத்ம தீர்த்தம் வெட்டிய பத்ம ராஜனுக்குத தேவி நல்ல புத்திரனை அநுக்ரகித்தாள். கும்பாசுரனுடைய சகாக்களான கோடி அசுரர்களைக் கோடி தீர்த்தத்தில் அழித்தாள்; அசுவத்த தீர்த்தத்தை நிருமித்தவர் அசுவத்தாமா. தன்னைப்போல் படித்தவன் இல்லை என்ற கர்வத்தால் பிராம்மணர்களை அவமதித்த கௌடப் பிராம்மணன் ஒருவன் பிரம்மரக்ஷஸாக மாறிவிட்டான். அசுவத்தாமா தம் கமண்டல தீர்த்தத்தைத் தெளித்து அவனைச் சாபத்திலிருந்து விடுவித்தார். பாறு என்ற ஏழைக் குருட்டுப் பிராம்மணர் ஒருவர் வனசங்கரியின் கட்டளைப்படி, சூரியனை ஆராதித்துப் பாறு தீர்த்தத்தில் முழுகிக் கண்களையும் ஐசுவரியத்தையும் பெற்ருர். அதில் முழுகினால் குஷ்டம் போன்ற நோய்களும் தீருமாம். கரவீரம் (கொல்ஹாபுரம்), விருபாக்ஷம், ஸ்ரீசைலம், பண்டரீபுரம், திலகவனம் (வனசங்கரி கோயில் கொண்ட இடம்), சேது ஆகியவை இகபர சுகத்தைக் கொடுப்பவை என்று திருமாலே நாரதரிடம் சொல்லியிருக்கிருர்."

வனங்களுக்கு க்ஷேமத்தை உண்டாக்கிய வனசங்கரியின் ரதோற்சவம் தைப் பௌர்ணமியன்று நடக்கிறது. சதுர்த்தசியன்று 'காய்கறிப் பண்டிகை' ஒன்று கொண்டாடுகிருர்கள். அன்று எல்லாவகைக் காய்களும் சமைத்துத் தேவிக்கு நிவேதனம் செய்வார்கள். நவராத்திரியின்போது திலகவன வாசிகள், வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்களுடன் வனசங்கரி உற்சவம் கொண்டாடி வணங்குகிருர்கள்.

பாடத் தெரியுமா?

'என்னை முத்தமிடு, கேட்' என்ற படத்தில் ஜாக் டயமண்ட் என்பவர் நடித்திருக்கிருர். அதில் நடிப்பதற்கு அவர் மனுப் போட்டபோது, கோல் போர்ட்டர் என்ற டைரக்டரைப் பேட்டி கண்டார். "உனக்குப் பாடத் தெரியுமா?" என்று கேட்டார் டைரக்டர்.

"தெரியும்; பாடிக் காட்டுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை: என் பாட்டு உங்களுக்குப் பிடித்தால், ஒன்றும் சொல்லக் கூடாது; எழுந்து நின்ருல் போதும்" என்ருர் டயமண்டு.

போர்ட்டர் சம்மதித்தார்.

'நட்சத்திரப் புள்ளிகள் போட்ட கொடியே' என்ற அமெரிக்கத் தேசிய கீதத்தை டயமண்ட் பாடினுர்.

குறிப்பு: அவருக்கு நடிகர் உத்தியோகம் கிடைத்து விட்டது.

—ஜோயி பே

மக்களின் மனங்கவரும் இந்த முறையைக் கடைப்பிடிக்கிறது அந்தச் சர்க்கார்.

புதிய சீனாவில் சம்பளம்

சுரேஷ் ரமாபாய்

சமீபத்தில் சீனமக்கள் குடியரசின் இரண்டாம் ஆண்டு விழாவின்போது, பண்டித சுந்தரலாலின் தலைமையில் இந்திய நல்லெண்ணத் தூதுக் கோஷ்டி ஒன்று சீனாவுக்குப் போயிருந்தது. புதிய சீனாவைப்பற்றி அவர் சில ரசமான விஷயங்களைப் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்:

“சீனாவில் இப்போது உணவுத் தானியமாகவே சம்பளத்தைக் கொடுக்கிறார்கள்; காகித நோட்டுக்களை வழங்குவதில்லை. நாங்கள் சில ஆலைகளைப் பார்க்கப் போனோம். அவைகளில் மானேஜர் அல்லது டைரக்டருக்குச் சம்பளம் என்ன தெரியுமா? வேலையில் தேர்ச்சி பெறாத சாதாரணத் தொழிலாளி பெறுவதைப் போல் சுமார் மூன்று மடங்குதான். பிஸ்கோத்து ஆலை ஒன்றில் சாதாரணத் தொழிலாளி ஒருத்திக்கு மாதச்சம்பளம் 250 யூனிட். ஒரு யூனிட் என்றால் சுமார் ரூ. 1-2-0. டைரக்டருக்கோ 350 யூனிட்தான். சர்க்கார் இலாகாக்களில் குறைந்தபட்சச் சம்பளம் 150 யூனிட்; அதிகபட்சம் 350 யூனிட். சாவகலாசாலைகளில் சாதாரண பியூனுக்கும் உப அத்தியட்சகருக்குங்கூட இதே ரீதியில்தான் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆலைகளில் மானேஜருக்கும் தொழிலாளிக்குமோ, சர்வகலாசாலைகளில் உப அத்தியட்சகருக்கும் பியூனுக்குமோ உடையில் எந்த விதமான வித்தியாசமும் காண முடியவில்லை.”

அவரோடு போயிருந்த மற்ற அங்கத்தினர்களும் இப்படியேதான் சொன்னார்கள். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், சர்க்கார் ஊழியர்களுக்கு உணவு, உடை, வைத்தியம், குடியிருப்பு, குடும்பம், குழந்தைகளின் படிப்பு இவைகளுக்கான வசதிகளை அளித்துக் கைசெலவுக்கு மாதம் சுமார் பத்து முதல் இருபது ரூபாய் வரை கொடுக்கிறார்கள்; இதுதான் சம்பளம். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாருமே இந்த ரீதியில்தான் வாங்குகிறார்கள். ராணுவத்திலும் பெரும்பாலும் இப்படியேதான் நடக்கிறது. ராணுவத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் ஒரு நாளுக்கு ஏழு மணி நேரம் விவசாயமோ அது சம்பந்தமான வேறு எதாவது தொழிலோ செய்யவேண்டியிருப்பதால் சர்க்காருக்கும் அவர்களைப் போஷிக்க அதிகச் செலவு ஆவதில்லை. ரெயில்வேயிலும் நிலக்கரிச் சுரங்கத்திலும் உழைக்கும் சாதாரணத் தொழிலாளிக்குச் சராசரி 400 கட்டி உணவுத் தானியம் சம்பளமாகக் கொடுக்கிறார்கள். நெசவாலைகளில் அதே மாதிரி ஒருவனுக்கு 500

மூலம்: ஹரிஜன் (ஆங்கிலம்), அகமதாபாது.

கட்டியும், தந்தி இலாகா ஊழியனுக்கு 600 கட்டியும் கொடுக்கிறார்கள். ஒரு கட்டி என்றால் சுமார் 1.3 ராத்தல்.

நம் நாட்டுச் செலாவணி முறைப்படி பார்த்தால் 400 கட்டி என்பது சுமார் ரூ. 85 ஆகும். ஆகவே, சாதாரணத் தொழிலாளி ஒருவனுக்குச் சீன சர்க்கார் நிர்ணயித்திருக்கும் குறைந்தபட்சச் சம்பளம் இரண்டு பேர் குடித்தனம் நடத்துவதற்குப் போதும். திறமையுள்ள தொழிலாளிக்குச் சராசரி 700 கட்டி உணவுத் தானியமும் (சுமார் ரூ. 150), எஞ்சினீர் போன்ற நிபுணர்களுக்கு 1700 கட்டியும் (சுமார் ரூ. 350) மாதச்சம்பளம். இதைத் தவிர இலவச வைத்திய வசதி, குறைந்த விலைக்கு உணவுத் தானியம் முதலிய வசதிகளும் தொழிலாளருக்கு உண்டு. இவை மேலதிகாரிகளுக்குக் கிடையாது. புதிய சீனாவிலுள்ள சர்வகலாசாலைகளில் ஒரு புரொபஸரின் மாதச் சம்பளம் 1000 முதல் 1500 கட்டி —அதாவது, ரூ. 225 முதல் ரூ. 325-க்குள் இருக்கும். வெவ்வேறு மாகாணத்து ஹைகோர்ட் நீதிபதிகளுக்கும் சுமார் ரூ. 350; சுப்ரீம் கோர்ட் நீதிபதிக்குச் சுமார் ரூ. 400; தலைவர் மா சே துங்குக்குச் சுமார் ரூ. 600 மாதச் சம்பளம்.

இந்திய ஜனாதிபதி வாங்கும் சம்பளத்தில் வீசம் பங்குதான் மா சே துங் வாங்குகிறார் என்றால் சீனத் தலைவர்கள் சுயநலங் கருதாமல் எவ்வளவு தியாக உணர்ச்சியோடு ஊழியம் புரிகிறார்கள் என்பது புரியும். ஆகவே, சீனாவில் குறைந்தபட்சச் சம்பளம் என்றால் அதிகப்பட்சச் சம்பளத்தில் ஐந்தில் ஒரு பங்குதான் என்று சொல்ல வேண்டும். இதனால் சர்க்கார் செலவும், அதிகாரி, ஊழியன் இவர்களுக்குள்ள வித்தியாசமும் எவ்வளவு குறைந்துவிடும் தெரியுமா? இதற்கும் நம் நாட்டுக்கும் எவ்வளவு வேறுபாடு!

இத்தனை நாள் பிச்சை எடுத்து வந்த சீனாவைப் புதிய சர்க்கார் மூன்றே வருஷத்தில் பிறருக்கு உணவு வழங்கும் நாடாக மாற்றி விட்டது என்றால் பாருங்கள்!

ஆனால் நம் துரதிருஷ்டம், நம் தேசீயத் திட்டக் கமிஷன் இதையெல்லாம் கவனித்ததாகவே தெரியவில்லை.

குலப் பெருமை

உன் தாத்தா எவ்வளவு உயரமாயிருந்தாலும் உனக்குப் பயனில்லை. நீ உயர நீதான் வளரவேண்டும்.

—ஆங்கிலத்திலிருந்து.

ஸயின்ஸ் விளக்கம்

'ஏன்?' என்ற கேள்விக்கு இயற்கை பதிலளிப்பதில்லை. 'எப்படி?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கிறது. இந்தக் கேள்வியைக் கேட்பதே ஸயின்ஸ்.

—டொனால்டு கல்ராஸ் பியாட்டி

நாடி ஜோஸ்யம்

ராள்ளபள்ளி கோபாலகிருஷ்ணமாசார்யுலு

நாடி ஜோஸ்யத்தைப்பற்றி இவர் கூறும் விவரம் மிக்க ஆச்சரியமாயிருக்கிறது. அதில் பற்றுடையவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றி இவர் சொல்லும் யோசனையும் கவனிக்கத் தக்கது.

நம் நாட்டில் ஜோஸ்ய நூல்கள் பல இருக்கின்றன. அவைகளில் நாடி ஜோஸ்ய நூல்கள் அருமையானவை; ஆச்சரியமானவை. இவை அதிகமாகத் தமிழிலோ, வடமொழியிலோ காணப்படுகின்றன. சில நூல்கள் செய்யுள் வடிவில் இருக்கின்றன. சில, வினாவிடை முறையில் அமைந்திருக்கின்றன. வசிஷ்ட விசுவாமித்திர சம்வாதமாகவோ, நாரதர் பார்வதிக்கு உபதேசித்தது போலவோ இருக்கின்றன. இவற்றில் பிருகு நாடி, சுக்கிர நாடி, புத நாடி, சந்திர நாடி, நந்தி நாடி, துருவ நாடி, குமார நாடி, கௌசிக நாடி, நாரத நாடி என்பவை சில.

நாடி நூல்கள் பிருகத் ஜாதகம், பராசரஹோரை, ஜைமினி சூத்திரம், சாராவளி போன்ற ஜோஸ்ய நூல்களிலிருந்து மாறுபட்டவை. ஒரு நாடி நூலிலேயே கணக்கற்ற தனி மனிதர்களின் ஜாதகங்கள் இருக்கின்றன. ஆகையால் இவை வெகு காலத்துக்கு முன் எழுதப் பெற்ற ஜாதகப் புத்தகங்களே.

ஜாதகங்கள் எல்லாம் ஓலைச் சுவடிகளிலேயே காணப்படுகின்றன. வம்ச பரம்பரையாகவோ, தானம் பெற்றோ, சொந்தச் சாமர்த்தியத்தாலோ இவைகளைச் சம்பாதித்துக் கொண்ட புண்ணியவான்கள் இவைகளைப் புதையலைக் காப்பதுபோல் காக்கிறார்கள். புராதன மகரிஷிகள் தம் ஜாதகத்தைப்பற்றி என்னெழுதி வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்பி வந்தவர்களிடம், இந்த உரிமையாளர்கள் இடத்துக்குத் தகுந்தாற்போல் ரூ. 25 அல்லது ரூ. 100 பெற்றுக் கொள்ளுகிறார்கள். ஜாதகருடைய கைரேகையையோ, ஜாதகத்தையோ ஆதாரமாக வைத்துக் கொண்டு அதற்கு ஒத்துவரும் நாடி ஜாதகத்தைத் தேடி எடுத்துப் படிப்பார்கள். அதை ஜாதகர் எழுதிக்கொள்ளுவது வழக்கம். ஒவ்வொரு நாடி ஜாதகத்திலும் கேட்பவருடைய சொந்த ஊர், பெற்றோர் பெயர்கள், அண்ணன் தம்பிகள், சகோதரிகள் இவர்களைப் பற்றிய செய்திகள், இவர்களில் இறந்தவர்களுடைய கணக்கு, கேள்வி கேட்ட நாள் வரையில்

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.

குடும்பத்தில் நடந்த நன்மை தீமைகள் இந்த எல்லா விவரமும் தெளிவாக, மிக ஆச்சரியப்படத்தக்க முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. இதனாலேயே ஜனங்களுக்கு நாடி ஜாதகங்களின்மேல் அபார நம்பிக்கை விழுகிறது.

சில ஜாதகங்களில், ஜாதகருடைய பூர்வஜன்ம விருத்தாந்தம், மறு ஜன்மச் செய்திகள், இத்தனை பிறப்புக்களுக்குப் பின் முக்தி என்பவை போன்ற விசித்திர அம்சங்கள் கூடச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தப் பிறப்பில் ஜாதகம் ஒத்து வந்துவிட்டால் ஜன்மாந்தரங்களின் கதைகளையும் நம்பத்தானே வேண்டும்!

நாடி ஜாதகங்களில் ஒரு விசித்திரம் காணப்படுகிறது. ஜாதகங்களைப் படித்து எழுதிக்கொள்ளும் நிமிஷம் வரையில் நடந்த பலன்களைச் சொல்லுவது முழுக்கச் சரியாக அமைந்து விடுகிறது. அதற்குப் பின்பு நடப்பவைகள் பலனுக்கு ஒவ்வாமல் தாறுமாறாக நடந்துவிடுவதே பலருடைய அநுபவமாக இருக்கிறது. 'மகரிஷிகள் வாக்குப் பொய்த்துவிடுவது கலிகால மகிமை' என்று நினைக்கும் சிலர் திருப்தி அடைகிறார்கள். சிலர் இதென்ன மாயமோ, கண்கட்டு வித்தையோ என்று மயங்குகிறார்கள். வருங்காலத்தைப் பற்றிச் சொல்லும்போது, 'பூர்வ ஜன்மத்துப் பாவம் நசித்தால் இது நடக்கும், அது நடக்கும்' என்னும் வாக்கியம் இடையிடையே நாடி ஜாதகங்களில் வருவது சர்வ சாதாரணம். நம் பாவம் நம்மை இன்னும் விடவில்லை என்று சிலர் சமாதானம் அடைகிறார்கள். மொத்தத்தில் நாடி நூல்கள் நமக்கு விளங்காத புதிராகவே இருக்கின்றன.

இந்த நூல்களை எழுதியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் உண்மையில் மகாநுபாவர்களே. அவர்களுடைய சக்தியைச் சாமானிய மனிதர்கள் ஊகிக்கவே முடியாது.

நாடி ஜாதகங்கள் பலன் சொல்லும் முறை அதியாச்சரியம். ஜோஸ்ய முறையைக் கொண்டு ஜாதகரின் ஊர், பெயர், பெற்றோர், பந்துக்கள்பற்றிய செய்திகளையெல்லாம் சொல்ல முடியாது. ஆனால் நாடி ஜாதகங்களில் எந்த எந்தக் கிரக நிலையையும் சம்பந்தத்தையும் கொண்டு இத்தனை செய்திகளையும் சொல்லியிருக்கிறார்கள் என்பதைமட்டும் கண்டு பிடிக்க முடியவில்லை.

என் நண்பன் ஒருவன் இருக்கிறான். அவனுக்குப் பதினெட்டு வயதில் தந்தை இறந்துவிட்டார். 31 வயதில் மனைவி இறந்தாள்; குழந்தைகளும் இல்லை. மறு விவாகம் செய்துகொள்ள அவனுக்குப் பயம். பிற்கால வாழ்க்கையாவது துக்கமாக முடியாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை. நண்பர்களின் தூண்டுதலால் தமிழில் எழுதியிருந்த நாரத நாடியை நாடினான். தன் ஜாதகத்துக்குக் களத்திர பாவத்தை மாத்திரம் எழுதிக்கொண்டான். அவனுடைய ஜாதகத்தின் சுருக்கம்:

நாரதர்: பார்வதீ! பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், ஜனலோகம், தபோலோகம், மகோலோகம், சத்தியலோகம் என்னும் உலகங்களிலும் அவற்றிற்குமேல் உள்ள உலகங்களிலும் ஒவ்வொரு கணமும் சஞ்சரிப்பேன். தேவர்களின் குறையைத் தீர்ப்பேன். தெய்வபக்தியுள்ள மானிடர்களின் சந்தேகத்தைத் தீர்ப்பேன். பக்தி

இல்லாதவர்களுக்கு ஒன்றும் சொல்லமாட்டேன். அரக்கர்களுக்கும் சொல்லமாட்டேன். தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் உபகாரம் செய்வேன். நான் சொல்வதில் தவறு இருக்காத. இந்த ஜாதகன் கன்யாலக்னத்தில் பிறந்தவன். அதில் சுகமாகக் கேது இருக்கிறார். குரு நாலில், குஜனும புதனும் ஆறில், ரவியும் ராகுவும் ஏழில், சுக்கிர சந்திரர்கள் எட்டில், சனி ஒன்பதில் இருக்கும்போது பிறந்த பாலகனுடைய ஜாதக பலனைச் சொல்லுகிறேன்:

ரவி ராகு	சுக் சந்	சனி	
குஜன் புதன்	ராசி நாரத நாடி		
குரு			ல கே

இவன் ஆந்திர நகரத்தில் பிறந்தாலும் கீர்த்தியுள்ளவன். பெயர் சின்னகிருஷ்ணன் என்று சொல்லலாம். இவனுடைய தந்தையின் பெயர் நான் எப்போதம் பூஜிக்கும் வைகுண்டவாசனுடைய ஒரு பெயர். தாயின் பெயர் ராமனுடைய மனைவியான சீதையின் பெயர். இவனுக்குப் பாண்டவ சகாயனான கிருஷ்ணனுடைய பெயர்களில் ஒன்று. இவனுடைய தம்பியின் பெயரும் விஷ்ணுவின் மற்றொரு பெயர். பூர்விகச் சொத்து அழிந்துவிட்டது. சகோதரர்கள் மூன்று பேரும் சொந்த ஊரை விட்டு வேறு இடங்களில் போய் வசிக்கிறார்கள். இந்த ஜாதகன் யோகவான்.

பார்வதி: நாரதா, எப்படி?

நாரதர்: கேள். சிறிய சகோதரனுக்குப் பிதிரார்ஜிதம் ஒன்றும் கிடைக்காது. அவன் தத்துப் போய்விடுவான். அங்கேயும் பணமும் இல்லை; சுகமும் இல்லை. அவனுக்கு யோகம் குறைவு. உத்தியோகப் படிப்பும் இல்லை. இந்த ஜாதகன் அதிருஷ்டசாலி. இவனுடைய தமையன் பிறரை அதட்டி உருட்டித் தன் செல்வாக்கை நடத்திக்கொள்வான். இந்த ஜாதகனே அண்ணனையும் தம்பியையும்விட யோகசாலி. கல்யாணத்துக்குப் பின் மனைவியால் யோகம். அவள் மகாலட்சுமி போன்றவள். சில வருஷங்களே குடித்தனம் செய்தாள். பின்பு இவனுக்குத் தாரதிருஷ்டம் மூண்டு அவள் இறந்தாள். இழுப்பு இருமல் வந்து காப்பம் சிதைந்துவிட்டது. அவள் சொந்த பந்து அல்ல. மறுமனைவி இன்னும் தூரத்துப் பந்து. என்ன மருந்து கொடுத்தும் குணமாகாமல் முதல் மனைவி இறந்துவிட்டாள்.

பார்வதி: நாரதா, இரண்டாவது மனைவி யார்?

நாரதர்: நல்ல ஒழுக்கம் உள்ளவள். லட்சுமியைப் போன்றவள்.

பார்வதி: அவள் பெயரென்ன, நாரதா? சரியாகச் சொல். எந்தத் தெய்வத்தின் பெயர்?

நாரதர்: லட்சுமி போன்ற அழகிதான். ஆனால் லட்சுமி எனறோ சரஸ்வதி என்றோ பெயர் இல்லை. சாதாரணமான கலியுகத்துப் பெயர். இரண்டாவது மனைவியைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால், ஜாதகன் பதினொன்றும் பாவத்தைச் சவிஸ்தாரமாகச் சேட்கவேண்டும்.

பார்வதி: மனைவிகள் இரண்டு பேரா, மூன்று பேரா? ஏழாம்

பாவாதிபதி குரு ஸ்வக்ஷேத்திரத்தில். இருந்தும், சந்திர சுக்கிர சம்பந்தம் இருந்தும் ஏன் மனைவி இறந்தாள்? இரண்டாம் மனைவியும் இறந்துவிடுவாளா? என் சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்.

நாரதர்: தாயே, ஏழில் ரவி ராகுக்கள் இருப்பதால் மனைவி இறந்துவிட்டாள். கர்ப்ப லக்கினத்தைப் பார்த்துக் களத்திரம் இரண்டா, மூன்றா என்பதைச் சொல்லவேண்டும். ஏழாம் பாவத்தில் சந்தேகம் தீராது.

இந்த நாரதர் பலே ஆசாமியாக இருக்கிறார். ஜகன்மாதாவாகிய பார்வதி துளைத்துத் துளைத்துக் கேட்டும் அசைந்து கொடுக்கவில்லை. ஏழாம் பாவத்தில் சொல்ல வேண்டிய பலனைப் பதினோராம் பாவத்துக்கு ஓட்டுவானேன்?

என் நண்பனுக்கு நாரதருடைய ஜோஸ்யம் குழப்பத்தைக் கொடுத்தது. தன் களத்திர தோஷம் பலமாய் இருந்தால் மறுபடியும் ஒரு பெண்ணை மணந்து அவளையும் விதிக்குப் பலியாக்குவது தகாதென்று தீர்மானித்தான். இப்படிச் சில மாதங்கள் விரக்தியில் சென்றன. என்ன இருந்தாலும் சிறுவயது. நிறையப் பணம் கொடுத்துப் பிற பாவங்களையும் பரிசீலனை செய்ததில், நாரத முனிவர் நல்ல வாக்குச் சொன்னார். மறு கல்யாணம், பிறக்கப்போகும் இரண்டு ஆண் மக்களுடைய ஜாதகம், நாமகரணம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார். ஜாதகனுக்குத் தீர்க்காயுள், பொருள் சேர்க்கை, உயர் பதவி, காரில் போகும் அந்தஸ்து, களத்திர சுகம் எல்லாம் குறைவில்லாமல் இருப்பதாகச் சொன்னார். அதனால் நண்பனுக்கு மனம் குளிர்ந்தது.

ஜாதகம் சொல்லிய வருஷம தாண்டியும் கல்யாணம் நடக்கவில்லை. அவன் சும்மா இருந்தாலும் வேண்டிய மனிதர்கள் சும்மா விடுவார்களா? ரஜாக்கர் தொல்லையிலிருந்து இந்திய யூனியன் படைகள் ஹைதராபாதைக் காத்த காலம். பலருடைய உத்தியோகம் தலைகீழாக மாறியது. சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் ஒரு நாடி ஜாதகக்காரர் அங்கே கடை பரப்பினார். இவர் கௌசிக நாடி வைத்திருந்தார். பலர் வந்து கூடினார்கள். என் நண்பனும் அங்கே போய்த் தன் ஜாதக பலனை எழுதிக்கொண்டான். ஜாதகத்தில் புதன் மாத்திரம் ஆறிலிருந்து ஏழுக்கு மாறிவிட்டான். மற்றக் கிரகமெல்லாம் அப்படியே இருந்தன.

மொத்தத்தில் நாரதரைவிட வசிஷ்டர் மேல். பதினோராம் காண்டத்தையோ, பன்னிரண்டாம் காண்டத்தையோ பார் என்று சொல்லவில்லை. பூர்வ ஜன்மப் பாவம் நிவர்த்தியானால் இரண்டாம் கல்யாணம் நடக்கும் என்று சொல்லிவிட்டார். இந்த இரண்டு நாடி நூல்களும் ராசியில் ஒரு கிரகத்தை வித்தியாசமாகக் காட்டியதால் பலன் சற்று மாறியிருக்கலாம். ஆனால் குலம், கோத்திரம், பெயர், பந்துக்களின் செய்தி எல்லாம் இரண்டிலும் ஒரே மாதிரி காணப்படுகின்றன. இதற்கு என்ன காரணமோ?

நாடி ஜாதகப் பலன்கள் பொய் என்று சொல்வது என் உத்தேசம் அல்ல. சந்தேகம் இல்லாமல் அவை அபூர்வமான நூல்களே. அவைகளின் பலனும் உண்மையாகவே நடக்கலாம். என் நண்பனுடைய ஜாதகத்தில் சொல்லியிருக்கும் பலனை அதே பெயருள்ள

வேறு மனிதன் அநுபவித்திருக்கலாம். இப்போது நாடி ஜாதகங்களில் பலனை உள்ளபடி அறிய முடியாமல் போனதற்கு ஒரே காரணந்தான் உண்டு. இன்ன ஜாதகம் இன்னாருடையதென்று சொல்லும் பொறுப்பு, சாஸ்திரக்ஞனுடையது அல்ல; ஜாதகத்தை வைத்துக்கொண்டிருப்பவன் அறிஞனென்று நினைப்பது நம் பிசகு. சிறிது சிறிது மட்டும் வித்தியாச பலன்கள் உள்ள ஜாதகங்களைப் படிக்கச் செய்து நம் அநுபவத்துக்குப் பொருத்தமான ஜாதகத்தை நாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

நான் சொல்ல வந்தது என்னவென்றால், நாரத நாடியில் சொன்ன பலனை அநுபவித்த மனிதன் வேறு; கௌசிக நாடிப் பலனை அநுபவித்தவன் வேறு. இந்த இரண்டு ஜாதகங்களில் எதுவும் என் நண்பனுடையதல்ல.

கௌசிக நாடி ஜாதகம் எழுதிக்கொண்ட மற்றொரு நண்பன் எனக்கு இருக்கிறான். பல ஜாதகங்களைப் படிக்கச் சொல்லித் தன் அநுபவத்துக்கு ஒத்த ஜாதகத்தைச் சிரத்தையாகப் பொறுக்கி எடுத்திருக்கிறான். இவன் பொறுக்கியதைப் போலவே வேறொரு ஜாதகம் இருந்ததாம். அதில் ஏகபத்தினி என்று கண்டிருந்ததால் அதை விட்டு மூன்று மனைவி உண்டு என்ற ஜாதகத்தைப் பொறுக்கி எடுத்திருக்கிறான். தற்சமயம் மூன்றும் மனைவியுடன் குடித்தனமும் நடத்துகிறான். ஒரு சிறு மாறுதல் மட்டும் இதில் காணப்படுகிறது. ஜாதகன் தன் தந்தையை 12 வயதில் இழந்திருக்கவேண்டும் என்று ஜாதகம் சொல்லுகிறது. ஆனால் அவர் போனது 5½ வயதிலேயே. இன்னும் சிரமப்பட்டுத் தேடியிருந்தால் அதைக் குறித்த ஜாதகம் கூடக் கிடைத்திருக்கலாம்.

சுருங்கச் சொன்னால், வருங்காலத்தைச் சொல்லும் பலன்கள் நாடி ஜாதகப்படி துல்லியமாக நடக்காததற்குக் காரணம் கேட்பவர்களின் அவசரமோ, அசிரத்தையோ தான் என்பது என் தீர்மானம்.

எப்படி இருந்தாலும் நாடி நூல்கள் புராதன ஜோஸ்ய சாஸ்திர அறிஞர்கள் நமக்கு வைத்துவிட்டுப் போன விலை மதிப்பற்ற புதையல்களே. இப்போது சில சுயநலமிகளின் கையில் அகப்பட்டுக்கொண்டு அக்கறை உள்ளவர்களுக்கு இவை கிடைப்பதில்லை. அதோடு நில்லாமல் சிலருக்கு வீண் ஆசைகளை எழுப்பிப் பழிக்கு இடமாகின்றன. இதனால் சாஸ்திர விருத்தியும் தடைப்படுவது வருந்தத் தக்கது. இவை மட்கி அழிந்தும் வருகின்றன. இருப்பவையும் அரைகுறை. லாபத்தை விரும்பும் சிலர், நூலின் சில ஏடுகளை விற்பனையும் செய்துவிடுகிறார்கள். அமெரிக்காவிலோ, ஜெர்மனியிலோ இவை போன்ற நூல்கள் இருந்திருந்தால், வெகு காலத்துக்கு முன்பே அரசாங்கப் பாதுகாப்பில் தேசீய நூல் நிலையத்தில் சேர்க்கப்பட்டிருக்கும். நம் அரசாங்கத்தாருக்கு இந்தச் சாஸ்திரத்தில் அபிமானம் இல்லை. இருந்தால் முன்னமேயே இவைகளைச் சம்பாதித்திருக்கலாம். சர்வகலாசாலையாராவது இந்த நூல்களைச் சேகரித்து ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைக்கச் செய்தால், உலகத்துக்கே நன்மை செய்ததாகும்; இந்தியப் புராதன விஞ்ஞானமும் உலகப் புகழ் பெறும்.

கருத்தடையில் புதுமுறை

★

ஜனத்தொகை மிதமிஞ்சிப் பெருகிக்கொண்டிருப்பதே பல தொல்லைகளுக்குக் காரணம் என்பது சில பொருளாதார நிபுணர்களின் கருத்து. அது எப்படியானாலும் சரி; பல ஏழைக் குடும்பங்களில் விரும்பாதபோது குழந்தைகள் பிறந்து அல்லல் விளைவிப்பது உண்மை. இதற்காகச் செயற்கையான கருத்தடை முறைகளை அநுஷ்டிப்போர் உண்டு. 'செயற்கைக் கருத்தடை முறைகள் சரியல்ல; புலனடக்கமே சரி' என்று மகாத்மா காந்தி வாதித்தார். முழுப் புலனடக்கம் சாத்தியமில்லாதவர் என்ன செய்வது? அவர்களும் இயற்கையை ஒட்டிய கருத்தடை யுக்தி ஒன்றை அநுஷ்டிக்கலாம் அதை விளக்கும் இந்தக் கட்டுரைக்கு ஆதாரங்கள்: (1)'காரனெட்'; (2) 'காஸ்மபாலிட்டன்'.

ஒருத்தி தனக்கு வேண்டிய எண்ணிக்கைக்கு மேல் குழந்தை பிறக்காதிருக்கக் கருத்தடை செய்துகொள்வதில் புதிய முறை ஒன்றை 1930 - முதல் ஐக்கியஅமெரிக்காவில்பத்துக்கு ஒரு பெண் அநுஷ்டித்து வருகிறாள். இதற்கு 'லயக் கொள்கை' (ரிதிம் தியரி) என்று பெயர். இந்த முறை இயற்கைக்கு விரோதமானது அல்ல. மதம், ஒழுக்கம், நாகரிகம் ஆகிய எதன் பெயராலும் இதை ஆட்சேபிப்பதற்கில்லை. கரு உற்பத்தி சம்பந்தமான சில இயற்கை விதிகளைக் கவனித்து, ஆண்-பெண் சேர்க்கையில் எச்சரிக்கை எடுத்துக்கொண்டால் கரு உற்பத்தி நேராமல் தடுக்கலாம். இதுதான் இந்த முறை.

கரு உற்பத்திபற்றி வைத்திய நிபுணர்கள் எல்லாரும் மூன்று விஷயங்களை ஒப்புக்கொள்கிறார்கள்.

(1) கரு உற்பத்தியாகக் கூடிய இயல்பு (கரு வளம் - Fertility) ஒரு பெண்ணுக்கு எல்லா நாளிலும் இல்லை. ஒரு மாதவிடாய்க்கும் அடுத்ததற்கும் இடையில் சிலநாள் கரு வளம் இருக்கும்; சிலநாள் இராது.

''இந்த விஷயம் புதிதல்ல. 2000 வருஷத்துக்கு முன்பே ஹிந்து வைத்தியர்கள் இதை ஊகித்துவிட்டார்கள். ஆனால் சமீபகாலம் வரைக்கும் இதை யாரும் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கவில்லை. சென்ற சில வருஷங்களில் விலங்குகளையும் மனிதர்களையும் விரிவாக ஆராய்ந்ததில், ஹிந்துக்களின் புராதனமான நம்பிக்கை சரியே என்று ஊர்ஜிதமாயிற்று'' என்று ஆமி ஸெல்வின் என்பவர் 'காரொனெட்' பத்திரிகையில் குறிப்பிடுகிறார்.

(2) அண்டம் அல்லது கரு மூலம் (Ovum) ஒன்றே ஒன்றைத்தான் இரண்டு மாதவிடாய்களுக்கு இடையிலே பெண்ணின் கருப்பை (Ovary) உற்பத்தி

செய்கிறது. பெரும்பாலான பெண்களைக் கவனித்ததில், பொதுவாக அடுத்த மாதவிடாய் நேர்வதற்கு முந்திய பதினுன்காவது நாளிலேயே இந்த அண்ட உற்பத்தி ஏற்படுகிறது. இப்படி உற்பத்தியான அண்டம் 24 மணி நேரத்துக்கு மேல் உயிர் வாழாது.

(3) ஆண்களின் விந்தணு (Sperm) பெண்களின் கருப்பையில் சேர்ந்தால், அப்படிச் சேர்ந்த 24 முதல் 48-மணி நேரம் வரைக்குந்தான் உயிர் வாழ்ந்திருக்கும்.

இந்த மூன்று விஷயங்களையும் சேர்த்துக் கவனிக்கும்போது ஓர் உண்மை புலனுகிறது. உயிருள்ள அண்டத்தை உயிருள்ள விந்தணு சேர்ந்தால்தான், கரு உற்பத்தி (Fertilisation) ஏற்படும். பெண்ணின் கருப்பையில் அண்டம் உற்பத்தியாகி இருக்கும் (Ovulation) நாளில் ஆண்-பெண் சேர்க்கை நிகழ்ந்தால்தான் இது சாத்தியம். குழந்தை வேண்டாமென்று நினைக்கும் தம்பதிகள் இந்த நாளில் மட்டும் சேராது விலகியிருக்க வேண்டும். மீதி நாள் எதில் சேர்ந்தாலும் குழந்தை பிறக்காது.

தங்கள் மாதவிடாய் நாள் கணக்கை ஒழுங்காக ஒரு டயரியில் குறித்து வரும்படி 1000 பெண்களுக்கு அமெரிக்க டாக்டர் ஒருவர் யோசனை சொன்னுர். அதிலிருந்து அந்தப் பெணகள் ஒவ்வொருவருக்கும் அண்டம் உற்பத்தியாகும் நாள் எது என்று நிர்ணயித்தார். பிறகு அந்த நாளில் கணவருடன் சேராதிருக்கும்படி அவர்களுக்குச் சொன்னுர். இந்த முறையை 18 மாத காலம் அந்த 1000 பெண்களும் அநுஷ்டித்துப் பார்த்ததில் இரண்டே இரண்டு பேர்தான் கர்ப்பம் தரித்தார்கள். மற்ளெரு டாக்டர் இன்னும் சில பெண்களை இதை அநுஷ்டிக்கும்படி சொல்லிக் கவனித்ததில், நூற்றுக்கு 95 பேர் விஷயத்தில் இது பலித்தது.

பெண்கள் அத்தனை பேருக்கும் அடுத்த மாதவிடாய்க்கு முந்திய 14-ஆவது நாளில்தான் அண்டம் உற்பத்தியாகிறது என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது என்று சில டாக்டர்கள் ஆட்சேபிக்கிருர்கள். ஆகவே, எல்லாப் பெண்களுமே இந்த முறையை அநுஷ்டிக்கப் பத்திரமான வழி எது? அதைக் 'காஸ்மபாலிட்டன்' என்ற பத்திரிகையில் டாக்டர் மாரிஸ் ஃபிஷ்பீன் என்பவர் விளக்கியிருக்கிருர். இவர் அமெரிக்க வைத்திய சங்கத்தின் பத்திரிகைக்கு எத்தனவே ஆசிரியராக இருந்தவர்.

இந்த வழியை அநுஷ்டிக்க விரும்பும் பெண், ஒவ்வொரு நாள் காலையிலும் எழுந்தவுடனே தெர்மாமீட்டர் என்ற கருவியைக் கொண்டு தன் உடல் உஷ்ணத்தை அளந்து கொள்ளவேண்டும். இப்படி அளந்து கொள்வதற்கு முன் குளிக்கக் கூடாது; தண்ணீரோ, புகையோ குடிக்கக் கூடாது. ஆண்களின் உஷ்ணம் எல்லா நாளிலும் காலையில் ஒரே விதமாயிருக்கும். பெண்களின் உடல் உஷ்ணமோ அப்படி இராது. பெண்களின் உடல் உஷ்ணம் அண்ட உற்பத்தியால் அதிகரிக்கிறது.

ஒரு மாதவிடாய் ஆரம்பிப்பதற்கு 24 முதல் 36 மணி நேரத்துக்கு முன்பு பெண்களின் உடல் உஷ்ணம் மிகக் குறைவான நிலையை அடைகிறது. மாத மத்தியில் இந்த உஷ்ணம் சட்டென்று இன்னும் குறையும். அப்போதுதான் அண்டம் உற்பத்தியாகிறது.

அதன் பிறகு உடல் உஷ்ணம் முன்பு இருந்ததைவிட அதிகமாக ஏறும். இப்படி உஷ்ணம் அதிகரித்த நிலே அடுத்த மாதவிடாய்க்கு ஒன்றிரண்டு நாளைக்கு முன் வரையில் தொடர்ந்து அப்படியே இருந்து வரும். இப்படி இரண்டு மூன்று மாதம் வரைக்கும் உடல் உஷ்ணத்தைக் கணக்கெடுத்துப் பார்த்துவிட்டால், தன் கருப்பையில் இரண்டு மாதவிடாய்களுக்கிடையில் அண்ட உற்பத்தி நேரும் நாளை ஒரு பெண் நிர்ணயித்துக் கொள்ளலாம்.

ஒரு பிரசவம் நேர்ந்த பிறகு மூன்று மாதம் சென்ருல்தான், உடல் உஷ்ணம் பழைய நிதானத்துக்கு வரும். அது வரைக்கும் இந்த முறை பயன்படாது.

வருத்தம், ஆத்திரம் முதலிய உணர்ச்சிகள், தொற்றுநோய், தள்ளாமை, அதிகச் சாப்பாடு, ஜல தோஷம் இவைகளால் உடல் உஷ்ணம் மாறும். ஆகவே, இந்தக் கோளாறுகள் நேர்ந்திருக்கும் போதும் இந்த முறை பயனில்லை.

பொதுவாக ஒரு மாதவிடாய் நேர்ந்த நாளிலிருந்து பத்து நாள் வரைக்கும் கணவனுடன் சேரலாம். அதன் பிறகு சேராது விலகியிருக்க வேண்டும். உடல் உஷ்ணம் அதிகரிக்கத் தொடங்கியதிலிருந்து 48 முதல் 72 மணி நேரம் வரைக்கும் கண்டிப்பாய்க் கணவனுடன் சேரக்கூடாது. பிறகு சேரலாம்.

இந்த முறையை அநுஷ்டித்துப் பழக்கப்பட்ட பெண், மூன்றே மூன்று நாள் கணவனைச் சேராமல் விலகியிருந்தால் போதும். மற்றப் பெண்களெல்லாம் இன்னும் சில நாள் அதிகமாகவே விலகியிருப்பது தான் நல்லது.

வெகு ஜாக்கிரதையாக இப்படி உடல் உஷ்ணக் கணக்கை எடுத்து வரும் பெண், தனக்குக் கருத்தரித்தால் உடனே அதையும் இந்தக் கணக்கைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். அண்ட உற்பத்திக்குப் பிறகு ஏறும் உஷ்ணம், வழக்கமான அளவு குறையாமலே இருந்து வருமானல் பெண் கருத்தரித்துவிட்டாள் என்று நிச்சயிக்கலாம். அடுத்த மாதவிடாய் நேர வேண்டிய காலத்தில் நேராமலும் அதற்குப் பிறகு ஒரு வாரம் வரைக்கும் உடல் உஷ்ணம் குறையாமலும் இருக்குமானல் கர்ப்பம் ஏற்பட்டிருப்பது நிச்சயமென்றே நம்பலாம்.

இவ்விதம் தேக உஷ்ணத்தைக் கொண்டு, அண்ட உற்பத்தி நாளை நிர்ணயித்துக்கொள்ளும் வழியைச் சொன்னவர் டாக்டர் எம். டேவிஸ் என்பவர்தான். அவரையும் வேறு சில டாக்டர்களையும் கலந்து கொண்டே இந்த விவரங்களையெல்லாம் டாக்டர் ஃபிஷ்பீன் எழுதியிருக்கிருர்.

மேதைக்கும் தடை உண்டோ?

ஜான் கிரிம்ஷா வில்கின்ஸன் என்பவர் தாவர ஆராய்ச்சியில் நிபுணர். அவருக்கு இருபத்துமூன்று வயதில் கண் பார்வை போய்விட்டது. குருடானபோதும் அவர் ஆராய்ச்சியை விடவில்லை. ஒரு பூவை நாக்கு நுனியால் தொட்டுப் பார்த்தே அது என்ன பூ என்று சொல்லிவிடக் கற்ருர். இப்படி 5,000 தினுசுப் பூக்களை அவர் சொல்ல முடியும்!

—'அமெரிகன் ஜர்னல் அவ் ஸயின்ஸ்'

அங்க அபிநயங்கள்

★

உள்ளத்திலுறும் எண்ணங்களை, அங்க சேஷ்டைகள் காண்பித்துவிடுகின்றன என்பது பொதுவாக எல்லாருக்கும் தெரியும். அது எவ்வளவு தூரம் உண்மை, சில சேஷ்டைகளின் பொருள் என்ன என்ற விவரங்களடங்கிய இந்தக் கட்டுரைக்கு ஆதாரங்கள்: (1) ‘புவர் லைப்’, (2) ‘இன்பர்மேடிவ் க்விஸ்’

அங்க அபிநயங்களிலிருந்து மனித சுபாவத்தைச் சாதாரணமாக அறிய முடியும். மனத்தில் இருக்கும் உணாச்சிகள், சில முக்கியமான அங்க அபிநயங்களின் மூலம் உடனே தெரிந்துவிடும். இதை ஜாக்கிரதையாகக் கவனித்து வந்தால், வியாபாரிகளும் வக்கீல்களும் அரசியல்வாதிகளும் தங்கள் தொழிலில் எவ்வளவோ வெற்றி பெறலாம். இது சம்பந்தமாக ஆராய்ந்த வில்லியம் பி. ஜிப் என்பவரின் அநுபவத்தைக் கீழே காணலாம்:

“மனித சுபாவத்தை எப்படி அறிந்துகொள்வது என்ற பொருள் பற்றி ஒரு சமயம் டாக்டர்களின் கூட்டம் ஒன்றில் பிரசங்கம் செய்துகொண்டிருந்தேன். அவர்சளில் ஒருவர் சற்றுத் தாட்டியான ஆசாமி. அவர் மட்டும் காலில் கையை ஊன்றியபடி முன் பக்கம் தலையை நீட்டிக் கவனித்துக்கொண்டிருந்தார். ‘மற்றவர்களெல்லாரும் சகஜமாகக் கேட்டுக்கொண்டிருக்கும்போத, இவர் மட்டும் இப்படி ஏன் அதிக அக்கறையாகக் கவனிக்க வேண்டும்?’ என்று எண்ணினேன். ஏதோ தோன்றவே, ‘இந்த விஷயத்தைப்பற்றி இங்கே ஒருவருக்கு விசேஷ அநுபவம் உண்டு என்று தெரிகிறது. நான் சொல்லும் விஷயத்தை அவரும் ஆமோதிக்கிறார் என்று நினைக்கிறேன். இல்லையா, டாக்டர்?’ என்றேன் அவரைப் பார்த்து. அவர் சிரித்துக்கொண்டே, ‘வாஸ்தவந்தான்’ என்றார்.”

கோர்ட்டில் குற்றத்தை எளிதில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள், சில குற்றவாளிகள். குறுக்கு விசாரணையில் தேர்ந்த வக்கீல்கள் இப்படிப்பட்டவர்களின் கால் அசைகிறதா, இவர்கள் வேறு எதாவது செய்கிறார்களா என்று கவனித்துக்கொண்டேயிருப்பார்கள்.

இரண்டு கையையும் ஆட்டி ஆட்டிப் பேசுகிறவர்களைத் தீர யோசித்துப் பார்ப்பவர்கள் என்று சொல்வதற்கில்லை. உணர்ச்சிவசப்பட்டுத்தான் அப்படிப் பேசுகிறார்கள். யாராவது மிரள மிரள விழித்துக்கொண்டிருந்தால், ஆசாமி ஏதோ தப்புத் தண்டா செய்துவிட்டுத்தான் இப்படி விழிக்கிறான் என்று நம்மில் அநேகம் பேர் நினைக்கிறோம். இது சரியல்ல. பல தடவை குற்றம் செய்து கரடு பாய்ந்தவர்கள் இப்படி விழிக்காமல்



பெரிய மனிதரைப்போல் பாசாங்கு



கொண்ட கொள்கையில் உறுதி

வெகு ஜாக்கிரதையாக நடந்துகொள்கிறார்கள். சிலபேர் ஆகாசத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். இந்த மாதிரி ஆசாமிகள் கலைஞர்களாக இருப்பார்கள்; எந்த விஷயத்திலும் அவ்வளவாக உறுதியோடு நடந்துகொள்ள மாட்டார்கள். சிலர் கீழே தரையையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். இவர்களோடு பேசிக்கொண்டிருந்தால் காரியம் நடக்காது; இவர்கள் வேறு ஏதோ நினைவாகவே யிருப்பார்கள்.

சில பிரசங்கிகள் முழங்கையை மேஜைமேல் ஊன்றிக்கொண்டு பேசுவார்கள். இவர்கள் தாங்கள் பேசும் விஷயத்தில் அநுபவமும் உறுதியும் உள்ளவர்கள் என்று சொல்லலாம். மேஜையின் இரு கோடிகளையும் அழுசதிப் பிடித்துக்கொண்டு பேசும் ஆசாமிகள் என்னதான் உறுதி உள்ளவர்களாக இருந்தாலும் தம் அபிப்பிராயம் எடுபடுமோ என்று தயங்குவார்கள்; அதனால் இவர்கள் பேச்சில் விஷயத்தைவிட வார்த்தைகள்தான் அதிகமாக இருக்கும். தோள் மட்டத்தக்குக் கையைத் தூக்கி அகல விரித்துப் பேசும் பிரசங்கிகள் எளிதில் ஜனக்கூட்டத்தைக் கவர்ந்துவிடுவார்கள். ஹிட்லர், முஸோலினி முதலியவர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

கை குலுக்குவதில் பல தினுசு உண்டு. அதிலிருந்து அவரவர் சுபாவத்தைத் தெரிந்துகொள்ளலாம். சட்டென்று அழுத்திப் பிழிவதுபோல் பிடித்தால் வெளிப்பகட்டு என்றுதான் கொள்ள வேண்டும். சூதுவாது இல்லாதவர்கள் கையைக் கெட்டியாகப் பிடித்து உலுச்கு உலுக்கென்று உலுக்குவார்கள். அவசர அவசரமாகக் குலுக்கிப் பின்பு விட்டுவிடுகிறவர்கள் சுயநலப் பேர்வழிகளாக இருப்பார்கள். கை குலுக்கும்போதே தோளைத் தொட்டுப் பேசுபவர்கள் அந்தரங்க அன்பும் ஆதரவும் உள்ளவர்களாக இருப்பார்கள்.

இந்த மாதிரி இன்னும் பல விவரங்களை ஜூடித் சர்ச்சில் என்ற பெண்மணியும் ஒரு நூலில் வெளியிட்டிருக்கிறார். அங்க அபிநயங்கள் பற்றிப் பொதுவாக இருந்து வரும் சில அபிப்பிராயங்களையும்

ஆசாமி மகா அழுத்தம்



மனம் விட்டுப் பழகுவோன்

அவை சரியா தவறா என்ற விவரங்களையும் அவர் எழுதியிருக்கிறார்:

இடுப்பை ஆட்டுகிறவர்கள் சுக போகத்தை விரும்புவார்கள்.

உண்மைதான். பெண்களில் சிலர் இடுப்பை முன்னுக்கும் பின்னுக்குமாக ஆட்டிக்கொண்டே நடப்பார்கள். இவர்கள் சோம்பேறிகள். யார் வீட்டுக்காவது வந்து சேர்ந்ததும், 'அப்பாடா!' என்று சோபாவிலோ சாய்வு நாற்காலியிலோ சாய்ந்துவிடுவார்கள். சில பெண்கள் இடுப்பை வலமும் இடமும் குலுக்கிக் குலுக்கி நடப்பார்கள். இது ஒய்யார நடை; இது ஆண்களின் கவனத்தைக் கவர்வதற்காகத்தான்.

பெண்கள் தங்கள் மாலையில் உள்ள பவழம், படிகம் இவைகளைக் கடித்தால், அவர்களுக்கு எதிலும் கவனம் இராது எனலாம்.



வயசான கவலை

உண்மையே. இந்த மாதிரி பெண்கள் பகற்கனாக் கண்டுகொண்டிருப்பவர்கள். எந்த வயசாக இருந்தாலும் இப்படி இருப்பது நல்லதல்ல என்று மனத்தத்துவ நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

கைக் கட்டைவிரலை மற்ற விரல்களுக்குள் மூடி வைத்துக்கொண்டிருப்பது பலவீனத்துக்கு அடையாளம்.

உண்மையே. கட்டை விரல் உறுதியாகவோ திறந்தோ இருந்தால் மனோதிடமும், யோசித்து ஒரு காரியத்தைச் செய்யும் சக்தியும் இருக்கும். கைப்பிடிக்குள் இருந்தால் பிறர் தயவுக்கு அடங்கிக் கைக்குழந்தைபோல் இருப்பார்கள் என்று சொல்லலாம். பைத்தியக்

பேச்சிலே நேர்மை



பொறுமை இழந்தவன்

காரர்கள், பாரிச வாயு கண்டிருப்பவர்கள், காக்கை வலிப்புக்காரர்கள் இவர்களெல்லாரும் இந்த வகையைச் சேர்ந்தவர்கள். நோயாகக் கிடந்து சாகும்போது குழந்தை போல் இப்படிக் கைவிரல் தானுகவே மூடிக்கொள்ளும் என்பது சகல டாக்டர்களும் அறிந்த விஷயம்.

பெரிய மனிதரைப்போல் பாசாங்கு செய்பவர்கள்தான் இதில் முதல் படம்மாதிரி எந்தப் பொருளையும் கையில் பிடித்துக்கொண்டிருப்பார்கள்.

உண்மையே. பிரபுக்களின் அறிகுறி இது என்று யாராவது சொன்னால் அதை நம்பாதீர்கள். 'நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் பெரிய மனிதர்களுக்குச் சமமாகத் தாங்களும் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் செய்வார்கள். அவர்களின் மனசுக்குள் பெரிய மனிதர்கள் இப்படி வாழ்வதாக அபிப்பிராயம்; அவ்வளவுதான்' என்கிறார்கள் மனத்தத்துவ நிபுணர்கள்.

தலைமயிரைத் திருகிக்கொண்டே இருப்பது பெருங்கவலைக்கு அறிகுறி.

உண்மையே. பெண்களுக்கு இது பெரும்பாலும் பொருந்தும். ஆண்கள் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் தலையைச் சொறிவார்கள்.

கைகளைக் கட்டிக்கொண்டிருந்தால் ஆசாமி மகா அழுத்தம் என்று சொல்லவேண்டும்.

உண்மையே. அதோடு இன்னும் சில விஷயங்களையும் கவனிக்க வேண்டும். தோள் கூனிக் கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தால் அவநம்பிக்கை, எதிர்ப்பு இவைகளுக்கு அறிகுறி.

விரலைச் சுட்டிக் காட்டிப் பேசுகிறவர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி ஓர் அபிப்பிராயங்கொண்டால் அதில் உறுதியாக இருப்பார்கள்.

உண்மையே. தெளிவாக யோசித்து ஒரு காரியம் செய்பவர்களாக இருந்தால் இந்த மாதிரி சுட்டும்போது உள்ளங்கை சற்றுக் குவிந்திருக்கும்.

கையை விரித்தபடி பேசுகிறவர்கள் மனம் விட்டுப் பழகுவார்கள்.

உண்மையே. இந்த மாதிரி ஆசாமிகளைக் கண்டால், வியாபாரிகள் பாடு கொண்டாட்டம். இவர்களிடம் தாங்கள் ஏதாவது சொன்னால் காது கொடுத்துக் கேட்பார்கள், வியாபாரமும் ஆகும் என்று வியாபாரிகள் எதிர்பார்க்க இடமுண்டு.

தம்மை அறியாமலே கையை அபிநயித்துக்கொண்டு ஒருவர் பேசும்போது, அவருடைய நேர்மையைக் கண்டுகொள்ளலாம்.

உண்மையே. இந்தமாதிரி யாரிடமாவது அவநம்பிக்கை ஏற்பட்டால், அவருடைய கையைக் கவனியுங்கள். குறுக்கும் நெடுக்குமாகக் கையை ஆட்டிக்கொண்டே வாயால், 'சரி' என்று அவர் சொன்னால், அதற்கு நேர்மாருகப் பொருள் கொள்ள வேண்டும். மேலுங்கீழுமாக ஆட்டிக்கொண்டே அவர் அப்படிச் சொன்னால் மனப்பூர்வமாகவே சொல்கிறார் என்று கொள்ளலாம்.

பெண்களின் சில அங்க அபிநயங்கள், அவர்கள் தங்களுக்கு வயசாகிவிட்டதே என்று கவலைப்படுவதைக் காட்டும்.

உண்மைதான். கழுத்தை நிமிண்டி இழுத்து விட்டுக்கொண்டும், மோவாயைத் தடவிக்கொண்டும், முகத்தைத் தொட்டுக்கொண்டும், கண்ணுக்குக் கீழ்ச் சுருக்கம் விழுந்திருந்தால் அதைத் தேய்த்துக்கொண்டும் இருக்கும் ஒருத்தியைக் கண்டால், வயதுக் கவலை

ஜீஸ் கண்ணாடி தயாரித்த நிபுணர்

★

உயர்தரமான எந்தக் காமிராவை எடுத்தாலும் அநேகமாக 'ஜீஸ்' கண்ணாடியே போட்டிருக்கும். இந்தக் கண்ணாடியைத் தயாரித்தவர் ஒரு ஜெர்மானியர். அவருடைய உத்தம வாழ்க்கை எவரும் போற்றிப் புகழத் தக்கது. இந்த வரலாற்றுச் சுருக்கம் வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றில் வந்த விஷயத்தை ஆதாரமாகக் கொண்டது.

காமிராக்களில் உபயோகமாகும் 'லென்ஸ்' என்ற கண்ணாடிகள் சிறந்த ரகத்தைச் சேர்ந்தவைகளாக இருந்தால், பிடிக்கும் உருவமும் ஒழுங்காக இருக்கும். இந்தமாதிரி சிறந்த கண்ணாடிகளைத் தயாரிப்பதில் 'ஜீஸ்' கம்பெனியார் பேர்போனவர்கள். ஆனால் 'ஜீஸ்' இவ்வளவு பிரசித்தி பெற்றதற்கு எர்னஸ்ட் ஆபீ என்ற விஞ்ஞான நிபுணர்தான் காரணம். அவர் வெகு அடக்கமானவர். பெயருக்காகவோ கீர்த்திக்காகவோ பாராமல் தன்னலமற்று உழைத்த உத்தமர். அணுதரிசினி என்னும் மைக்ராஸ்கோப்பில் ஒளிக்கதிர்கள் ஊடுருவிச் செல்வது சம்பந்தமாகச் சில விதிகளைத் திட்டமாக வரையறுத்த கணித மேதை அவர். இதனால்தான் லூயி பாஸ்டேர் போன்ற நிபுணர்கள் கிருமி அணுக்களைப்பற்றிப் பல அரிய ஆராய்ச்சிகள் செய்ய முடிந்தது. தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அவசியமான பத்துவிதக் கண்ணாடிக் கருவிகளை இவர் கண்டுபிடித்தார். ஜீஸ் கம்பெனிக்காக உழைத்து வேறு யாருமே போட்டியிட முடியாதபடி அவ்வளவு அருமையான 'லென்ஸ்'களைத் தயாரித்துக் கொடுத்தார். அந்தக் காலத்திலேயே மிகவும் புரட்சிகரமான ஒரு திட்டம் வகுத்துக் கம்பெனி நிர்வாகத்தைப் பலப்படுத்தினார். தம்முடன்கூட உழைத்த கார்ல் ஜீஸ் என்பவரின் பெயராலேயே கம்பெனியை நடத்தி வந்தார்.

ஜெர்மனியில் அந்த நாளில் பிரசித்திபெற்றிருந்த ஜீனா என்ற இடத்தில் உள்ள யூனிவர்ஸிடியின் சோதனைச் சாலையில் இருந்த கருவிகளைப் பழுதுபார்த்துக் கொடுத்துவந்தார் ஜீஸ். அவர் இந்த மாதிரி நுணுக்கமான விஷயங்களில் தேர்ச்சி பெற்றவர். 1846-இல் அவர் ஒரு தொழிற்சாலையை நிறுவி மைக்ராஸ்கோப் தயாரித்துவந்தார். அப்போது ஆபீ, ஜீனாவுக்கு வந்து பௌதிகம், வானசாஸ்திரம் இவைகளைப் போதித்து வந்தார். பல நாளாகவே ஜீஸுக்கு இன்னும் உயர்ந்த ரகமான 'லென்ஸ்' தயாரிக்க வேண்டுமென்று ஓர் ஆவல். ஆபீயுடன் பழகும்போது அவர் சிறந்த அறிவாளி என்று ஜீஸுக்குத் தெரிந்தது. "இந்தக் கம்பெனியின் முழுப்பொறுப்பையும் உங்களிடமே

விட்டுவிடுகிறேன். நீங்களே இதற்கு இனி அதிகாரி. எப்படியாவது நல்ல மைக்ராஸ்கோப் ஒன்று தயார் செய்துகொடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

மண்டையை உடைத்துக்கொண்டு எவ்வளவோ கணக்கெல்லாம் போட்டு நாலு வருஷம் கழித்து ஆபீ இப்படி ஓர் அற்புதமான மைக்ராஸ்கோப் செய்வதற்கு வேண்டிய விதிகளைக் கண்டறிந்தார். ஆனால் அதற்கான கண்ணாடி தான் கிடைக்கவில்லை. அந்த நாளில் ஆட்டோ ஸ்காட் என்று ஒருவர் இருந்தார்; அவர் கண்ணாடி செய்வதில் தேர்ந்தவர். அவரை ஜீனாவுக்கு வந்து தமக்குத் துணையாக இருக்கும்படி ஆபீ கேட்டுக் கொண்டார். பிறகு இருவரும் சேர்ந்து புதுவிதமான ஒரு கண்ணாடி தயாரித்தார்கள். பிறகு கார்ல் ஜீஸ், அவருடைய மகன் இவர்களோடு சேர்ந்து ஆபீ இருதமாதிரி மைக்ராஸ்கோப் கண்ணாடிகளைத் தயாரிக்க ஆரம்பித்தார். 1876 முதல் 1888 வரையில் இப்படி ஏராளமான கண்ணாடிகள் செய்து குவித்தார்கள் ஜீஸ் கம்பெனியார். இந்த 12 வருஷத்தில் கம்பெனி ஊழியர்களின் தொகை 42-லிருந்து 300 ஆகப் பெருகிவிட்டது. 1938-இல் ஜீஸ் தொழிற்சாலையில் வேலை செய்து வந்தவர்களின் தொகை 10,000. அப்போது அதன் விஸ்தீரணம் 25 ஏக்கர். இங்கே பிரதி வருஷமும் புதுப் புதுக் கருவிகளைக் கண்டு பிடித்துக்கொண்டே யிருந்தார்கள்; உலகம் முழுவதற்கும் பைனாகுலர்களும் காமிரா லென்ஸ்களும் வானசாஸ்திரத்துக்குரிய கண்ணாடிக் கருவிகளும் அனுப்பிவந்தார்கள். மகாயுத்தத்துக்கு முன் ஜெர்மனியிலேயே இதுதான் பெரிய ஸ்தாபனம். ஜீனாவில் வசித்து வந்த ஒவ்வொரு குடும்பத்தாரும் இந்தத் தொழிற்சாலையில் வேலை பார்த்துவந்தார்கள். இது அபிவிருத்தி அடைந்து வருவாய் அதிகமாகக் கிடைக்க ஆரம்பித்தது. ஆபீக்குத் தாம்மட்டும் பணக்காரராகும்போது தம் நண்பர்கள் பலர் இப்படி ஏழைகளாகவே இருப்பதைக் காண மனம் பொறுக்கவில்லை. அவர்களுக்கும் அதில் ஏன் பங்கு தரக்கூடாது என்று தோன்றியது.

1888-இல் கார்ல் ஜீஸ் இறந்ததும் ஆபீ அவருடைய மகனிடமிருந்து தொழிற்சாலையைத் தாமே விலைக்கு வாங்கிக்கொண்டார். பிறகு தம் உரிமையை யெல்லாம் விட்டு அதை ஒரு பொது ஸ்தாபனமாக்கி ஜீஸின் பெயரையே அதற்கு வைத்தார். அதில் ஏற்கனவே வேலை பார்த்து வந்தவர்கள், ஜீனா யூனிவர்ஸிடியின் தொழில், விஞ்ஞானம் முதலிய துறைகளில் அது சம்பந்தமாக உழைத்தவர்கள் எல்லாருக்கும் லாபத்தில் பங்கு கிடைக்கும்படி ஏற்பாடு செய்தார். ஜீனா யூனிவர்ஸிடியை நிர்வகித்து வந்த கல்வி இலாகாவே இதையும் கவனித்துக்கொள்ளவேண்டுமென்று ஏற்பாடு. இரண்டு வருஷங்கள் ஆராய்ந்து இதற்கென்று தனி விதிகள் அமைத்து இதே ரீதியில் ஸ்தாபனம் நடக்கும்படி திட்டம் வகுத்தார். அந்த நாளிலேயே விடுமுறையிலும் சம்பளம், நோய் தீர வைத்திய உதவி, நாள் ஒன்றுக்கு எட்டுமணி நேர வேலை, உடல் நலம் கெட்டவர்களுக்கும் வயதானவர்களுக்கும் உபகாரச் சம்பளம், நிர்வாகத்தில் பங்கு - இப்படிப் பல வசதி

அவளுக்கு வந்துவிட்டது என்று நீங்கள் தீர்மானித்துவிடலாம்.

எதையாவது விரலால் தட்டித் தாளம் போடடுக்கொண் டிருப்பது பொறுமை இழப்பதற்கு அறிகுறி.

உண்மைதான். இந்த மாதிரி செய்யும் ஆசாமிகளை அதிக நேரம் காக்கவைக்காமல் உடனே விஷயத்தை விசாரிக்கவேண்டும்.

தூங்கும்போதும் நாம் அபிநயங்கள் செய்கிறோம்.

உண்மையே. ஆனால், விழித்திருக்கும்போது செய்யும் அபிநயங்களைவிடக் குறைவே. அபிநயங்களுக்கும் கனவுகளுக்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை. நீங்கள் தூங்கும்போது காணும் கனவுகள் மட்டும் உங்களுக்கே சொந்தம்; நீங்கள் சொன்னாலொழிய, யாராலும் அவைகளை எந்த விதமான வழியாலும் கண்டுகொள்ளவே முடியாது.

அவருக்குத் தெரியும் அவர் வீட்டு விஷயம்

ஒரு வியாபாரி தம் வீட்டுக்குப் போன் செய்து மனைவியை அழைத்தார். "கண்ணே, இன்றிரவு சில சிநேகிதர்களை நம் வீட்டுக்குச் சாப்பிட அழைத்துவரலாமா?" என்று கேட்டார்.

"ஆஹா! தாராளமாய் அழைத்து வாருங்கள். சந்தோஷமாய்ச் சமைத்துப்போடுகிறேன்."

உடனே வியாபாரி, "அடடா; மன்னிக்கவேண்டும், அம்மா. தப்பு நம்பரை அழைத்துவிட்டேன்போல் இருக்கிறது" என்று போனைப் பட்டென்று வைத்துவிட்டார்.

—'கலிபோர்னியா பார்மர்'

வீடு வேட்டை

நகரத்தில் ஒரு வாலிபப் பெண்ணுக்குப் புதிதாக உத்தியோகம் கிடைத்தது. அங்கே ஜாகை பிடிப்பதற்காக ஊரெங்கும் அலைந்தாள். எங்கும் காலியில்லை. ஓரிடத்தில் 'அறை குடிக்கூலிக்கு விடப்படும்' என்ற போர்டு தொங்கியது. அந்த வீட்டு வாசலுக்கு ஓடினாள். அங்கே இவளைப்போலவே ஜாகை தேடிக்கொண்டு ஒரு வாலிபனும் வந்து நின்றான். வீட்டுக்காரி இவர்களைக் கண்டதும், "மணமான தம்பதிகளுக்கு இங்கே இடமில்லை" என்று சொல்லிக் கதவைச் சாத்திக் கொண்டு போய்விட்டாள்.

வாலிபனைத் திரும்பிப் பார்த்து நாணத்துடன் புன் சிரிப்புச் சிரித்தாள் அந்தப் பெண். மறுபடியும் கதவு மணியை அடித்தாள். வீட்டுக்காரி கதவைத் திறந்ததும், "இல்லை, நீங்கள் நினைப்பது தவறு. இவரை நான் மணக்கவில்லை" என்றாள் பெண்.

இந்தத் தடவை வீட்டுக்காரி ஒன்றுமே பேசாமல், வாலிபப் பெண்ணை முறைத்துப் பார்த்துவிட்டு, படீரென்று கதவைச் சாத்தி உட்புறம் தாழிட்டுக்கொண்டாள்.

—'மக்லீன்ஸ் மகஸீன்'

களை அளித்தார் என்றால் பாருங்கள். தொழிலாளரின் வீடடுவசதிக்காகத் தன்னால் ஆன உதவி புரிந்து வந்தது இந்த ஸ்தாபனம். மதம், இனம், அரசியல், வாழ்க்கைமுறை இவை காரணமாக ஒருவருக்கொருவர் வேற்றுமை பாராட்டக்கூடாது என்று ஒரு முக்கியமான விதியை ஏற்படுத்தியிருந்தார் ஆபீ. நாஜி ஆட்சி முறையில் இதை மாற்றியமைக்க வேண்டுமென்று உத்தரவாயிற்று. இருந்தாலும் நடைமுறையில் பழையபடி நேர்மையாகவே எல்லாரும் நடந்துவந்தார்கள். சமூக நன்மைக்காக ஆபீ உழைத்துவந்ததைப் பாராட்டி ஜீனு யூனிவர்ஸிடியார் அவருக்கு டாக்டர் என்ற பட்டம் வழங்கினுர்கள். 1905-இல் ஆபீ இறந்தார். தம்மைப் புதைக்கும்போது குடும்பத்தாரைத் தவிர வேறு யாரும் கூட இருக்கக் கூடாது, எந்தவிதமான பிரசங்கமும் கூடாது என்று உயில் எழுதிவிட்டுப் போயிருந்தார். அவரிடம் அன்பு செலுத்தி வந்த எல்லா ஊழியர்களும் அதை மீருமல் கல்லறை மைதானத்துக்கு வெளியிலேயே மௌனமாக நின்று அந்த மகானுக்குரிய மரியாதையைச் செலுத்திவிட்டுப் போனுர்கள்.

அபூர்வ சஞ்சீவி

அபூர்வ சஞ்சீவி என்ற ஒரு மருந்தைப்பற்றி, பல வருஷ காலத்துக்குப் பிறகு ஒரே ஒரு புகார் வந்தது. அந்த மருந்தைச் சாப்பிட்ட ஒருத்தி செத்தது இதுதான் முதல் தடவையாம்.

“அவள் 92 வயதுக் கிழவி. அநேக வருஷங்களாகத் தொடர்ந்து அபூர்வ சஞ்சீவியைச் சாப்பிட்டு வந்தும் இப்போது இறந்துவிட்டாள்” என்பது ஒரு வியாபாரி சொன்ன புகார்.

அபூர்வ சஞ்சீவியைத் தயாரித்து விற்கும் கம்பெனியார் இதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்துவிட்டார்கள். புகார் சொன்ன வியாபாரி உடனே, “ஆனுல், ஒன்று: அவள் பிரசவித்த குழந்தையைக் காப்பாற்றிவிட்டோம்” என்று ஆறுதல் சொன்னுர்.

—லியொனுர்ட் லயான்ஸ்

மதிப்பறியும் யுக்தி

“நீ எப்போதும் பழைய கார்களையே வாங்கி உபயோகிக்கிருய். அதில் ஒன்றும் மோசடி ஏற்படுவதில்லையே. உனக்கோ கார்களைப்பற்றி ஒன்றுமே தெரியாதிருந்தும், இந்தக் காரியத்தில் இவ்வளவு சாமர்த்தியம் காட்டுவதெப்படி?” என்ருன் நண்பன்.

மற்றவன், “உண்மைதான். ஆனுல், நான் என்ன செய்வேன், தெரியுமா? ஒரு வியாபாரியிடமிருந்து பழைய கார் ஒன்றை ஓட்டிப் பார்த்துப் பிடித்தால் பிறகு வாங்கிக்கொள்வதாய்ச் சொல்லி எடுத்துவருவேன். இன்னொரு வியாபாரியிடம் கொண்டு சென்று, நான் அதை விற்க விரும்புவதாய்ச் சொல்லுவேன். தட்சணமே அதில் உள்ள சகல குறைகளையும் அந்த வியாபாரி எனக்குச் சொல்லிவிடுவான். இதுதான் சூட்சுமம்” என்ருன்.

—‘ஃப்யூச்சர்’

[இதோ சில கேள்விகள்: எங்கே, உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 72-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

(1) சீனா, பின்லந்து, துருக்கி, ஜெக்கோஸ்லாவாகியா, போலந்து, மங்கோலியா, ஈரான், ருமேனியா இந்த நாடுகளின் படங்களையெல்லாம் கிரமப்படி நிரல் படுத்தி வையுங்கள். அப்போது உங்களுக்குக் கிடைப்பதென்ன?

(2) ஒரு சுவர்மாட்டிக் கடிகாரம் மணி நேரத்தை மட்டும் மணியடித்துக் காட்டுகிறது. 'டிங்' என்றால் ஒரு மணி; 'டிங், டிங்' என்றால் இரண்டு மணி. இப்படியே ஒரு நாளில் அது எத்தனை 'டிங்' சத்தம் கொடுக்கும்?

(3) உலகத்து மொத்த மக்களில் 20 பேருக்கு ஒருவர் விகிதம் ஓர் இடத்தில் வசிக்கிறார்கள்; மீதி 19 பேரும் மற்றோரிடத்தில் வசிக்கிறார்கள். இந்த இரண்டு இடங்களும் எவை என்று நீங்கள் தெரிவிக்கமுடியுமா?

(4) கனமாயிராத பொருள் எதையாவது பார்த்தால், 'காற்றைப் போல் லேசானது' என்று சொல்கிறோம். உங்கள் பிரிட்ஜ் மேஜை மீது உள்ள காற்றின் நிறை (அ) 100 பவுண்டு; (ஆ) 1,250 பவுண்டு; (இ) $6\frac{1}{2}$ டன்-இந்த மூன்றில் எது?

(5) ஒரு பெரிய பஸ் போகும்போது, சுலபமாக ஒரு பாலத்துக்குள் நுழைந்துவிட்டது. திரும்பி வரும்போது பாலத்தை அதன் உச்சி முட்டியதால் அப்படி நுழைய முடியவில்லை. உச்சியின் மீது புதிதாக எந்தச் சாமானும் ஏற்றி வைக்காதிருந்தும் இப்படி நேர்ந்தது. காரணத்தை உங்களால் ஊகிக்க முடியுமா?



(6) மேலேயுள்ள படத்தில் 'வா' என்று குறித்துள்ள சதுரத்தில் இருக்கும் வாத்தைப் பிடிக்க 'ந' என்று குறித்துள்ள சதுரத்தில் இருக்கும் நரி முயல்கிறது. ஒன்று ஒரு சதுரத்துக்கு நகர்ந்தால் மற்றது ஒரு சதுரத்துக்கு நகரும். ஒன்று மாற்றி ஒன்று முறைப்படியே நகரும். முதல் முதல் நரி நகர்ந்தால் அது வெகு சுலபமாக வாத்தைப் பிடித்துவிடலாம். அப்படிக்கின்றி வாத்து முதல் முதல் நகர்ந்தால், அதை நரி எப்படிப் பிடிப்பது?



ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்ம ஞானத்துக்குமுன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

ஆத்மானந்தம் : 1896-ஆம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் வேங்கடரமணருக்கு உடம்பெல்லாம் திடீரென்று ஒரு வகை எரிச்சல் உண்டாயிற்று. இறந்துவிடுவோம் என்ற நினைவு ஏற்பட்டது. மதுரையில் தம்முடைய சிறிய தகப்பனார் வீட்டின் முதல் மாடியில் தனியே இவர் அமர்ந்திருந்தார். உடம்பில் ஒரு நோயும் இல்லை. எப்போதும் உள்ள பலம் இருந்துகொண்டுதான் இருந்தது. ஆயினும் நாம் இறந்துவிடுவோம் என்ற பயம் மிகமிகத் தீவிரமாக எழுந்தது.

மற்றவர்களாக இருந்தால் கூ கூ என்று கத்திக்கொண்டு வைத்தியரைத் தேடிக்கொண்டு போவார்கள். இல்லையானால் மந்திரவாதியிடம் சரணடைவார்கள். இந்த இளைஞர் அப்படி ஒன்றும் செய்யவில்லை. வேறு யாருக்கும் இதைச் சொல்லவும் இல்லை. மரண பயம் என்னவோ உண்டாகிவிட்டது. அதை எப்படித் தீர்ப்பது? பயம் அதிகமாகவே இருந்தது. அதனிடத்திலிருந்து மீளவேண்டுமென்ற வேகமும் இருந்தது.

இவருடைய புறநோக்கம் அப்போது நின்றது. புறஉலகில் யாராலும் இந்தப் பயத்தைத் தீர்க்கவொண்ணாது என்று அவர் எண்ணக்கூட இல்லை. எப்படியோ அவர் ஆராய்ச்சி உள்முகமாகச் சென்றது. அவர் சிந்தனை அகக் கண்ணை விழிக்கச் செய்தது. ‘இதோ மரணம் வந்துவிட்டது. மரணத்தினின்றும் மீளமுடியாது. மரணம் என்பது என்ன? இறக்கும் வஸ்து எது? இந்த உடம்புதானே இறக்கப்போகிறது? அது எப்படி இறக்கும்?’—இப்படி எண்ணங்கள் ஒன்றின்மேல் ஒன்றாக எழுந்தபோது அந்த மரணத்தை நேருக்கு நேர் காணவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. மரணம் வ்ந்துவிட்டதாகவே பாவனை செய்யத் தொடங்கினார்.

கைகால்களை நீட்டிக்கொண்டார். உடம்பை அசையாமல் கிடத்தினார். அதோடு மூச்சையும் விடாமல் அடக்கிக்கொண்டார். மூச்சு இருந்தால் உயிர் இருக்கிறது என்றுதானே சொல்வார்கள்? மூச்சுப் போவதுதானே மரணத்துக்கு முக்கியமான அடையாளம்? ஆகையால் இவர் மூச்சையும் அடக்கினார். வாயை இறுக மூடிக்கொண்டார். உண்மைப்பிணம் எப்படிக் கிடக்குமோ அப்படிக் கிடந்தார்.

அந்த நிலையில் ஏதோ ஓர் உணர்ச்சி இவரிடம் இருந்தது.

இந்த உடம்பு வேறு, ஆத்மா வேறு என்பது அநுபவத்தில் தெளிவாயிற்று. 'இப்போது உடம்பு செயலற்றுப் பிணமாகிவிட்டது. இதனைக் கொண்டுபோய்ச் சுட்டு எரித்துவிடுவார்கள். ஆனால் இவற்றைப் பார்த்துக்கொண்டு நாம் இருக்கிறோம். நான் இருக்கிறேன். அந்த நான் உடம்பல்ல. ஆத்மாவே நான். உடம்புதான் மரணத்தை அடையுமே ஒழிய, ஆத்மா மரணம் அடைவதில்லை. நான் ஆத்மாவாக இருப்பதனால் மரணம் எனக்கு இல்லை. மரணம் எப்போது எனக்கு இல்லையோ அப்போது அதனால் வரும் மரண பயமும் எனக்கு இல்லை.—இப்படி ஓர் உணர்ச்சி இந்த இளைஞரிடம் ஏற்பட்டது. அது பகற்கனவல்ல; நினைவுக் கோவையல்ல; வெறும் பாவனையும் அல்ல. உண்மையான அநுபவமாக அமைந்தது. இன்னதென்று சொல்லமுடியாத இன்ப அநுபவமாக இருந்தது. அந்த அநுபவம் மரணபயத்தை அடியோடு போக்கிவிட்டது.

அந்தக் கணம் முதல் வேங்கட ரமணர் ஆத்மசாக்ஷாத்காரத்தை அடைந்தவராகிவிட்டார். நிர்விகல்ப சமாதி இவருக்குக் கைகூடி விட்டது. பூர்வஜன்மத்தில் விட்ட குறை இந்தப் பிறவியில் நிறைவேறியது. ஆத்மா வேறு, உடம்பு வேறு என்ற உணர்ச்சியும், தேக நினைவு அடியோடு கழன்று ஆத்மா தன்னிலே தான் லயிக்கும் இன்பமும் இவருக்கு ஏற்பட்டன. இது முதல் இவர் புதிய மனிதராகிவிட்டார். எல்லாப் பையன்களுடனும் கூடிக் குதித்து விளையாடும் இயல்புள்ள இவர் தனிமையை நாடலானார். தனிமையிலே இருந்து கண்மூடி நிஷ்டை கூடி இன்புறத் தொடங்கினார். ருசி கண்ட பூனை உறியை எட்டி எட்டித் தாவும் என்பார்கள் அல்லவா? இவர் தாம் பெற்ற சமாதியின்பத்தை மீண்டும் மீண்டும் அடைய முயன்றார். மதுரைத் திருக்கோயில் அறுபத்து மூவருக்கு முன்பும் வெள்ளியம்பலவாணர் சந்நிதியிலும் இவர் இவ்வாறு நிஷ்டை கூடுவார். ஆனந்தக் கண்ணீர் வார, மதோன்மத்தராக நிற்பார். உலகம் இயங்குவதை மறந்து, காலம் ஓடுவதை மறந்து, இன்ப துன்ப வேறுபாடுகள் ஒழிந்து, சரீரம், மனம் என்ற பிராக்தியங்களையெல்லாம் கடந்த ஆத்மானந்தத்திலே ஒன்றிவிடுவார்.

புதிதாகத் தன் கணவனுடன் இன்புற்ற மங்கை நல்லாள் அந்த இன்ப நினைவிலே பூரித்து நிற்பதும், தருணம் நேர்ந்தபோதெல்லாம் மீட்டும் மீட்டும் அந்த இன்பத்தைப் பெற முயல்வதும் இயற்கை. சிற்றின்ப விஷயத்திலேயே இத்தனை ஆர்வமும் வேகமும் இருக்குமானால் பேரின்ப விஷயத்தில் சொல்லவா வேண்டும்? இவ்வாறு ஆறு வாரங்கள் கடந்தன. (வாழ்வு)

ஞானியின் இயல்பு: உலகத்தைப் பார்த்தாலும் ஞானி, அந்த உலகத்துக்கு ஆதாரமாகிய தன்னையே காண்கிறான். உலகத்தைக் கண்டாலும் காணாவிட்டாலும், அஞ்ஞானி இயல்பாக உள்ள தன்னை அறிவதில்லை.

படக் காட்சிகளில் திரையின் மேல் பல படங்களைக் காண்கிறார்கள். படக் காட்சி தொடங்குவதற்கு முன்பு என்ன இருக்கிறது? வெறும் வெண்மையான திரை தான். அந்தத் திரையின்மேல் தான் அத்தனை காட்சிகளும் தோன்றுகின்றன. மலையும் மடுவும்,

மரமும் விலங்கும், ஆணும் பெண்ணும், ஓட்டமும் ஆட்டமும் தோன்றுகின்றன. அத்தனையும் உண்மையாக உலகில் உள்ள பொருள்களைப்போலவும், உலகில் நிகழும் நிகழ்ச்சிகளைப் போலவும் காட்சியளிக்கின்றன. ஆனால் திரைக்கு அருகிலே சென்று தொட்டுப் பார்த்தால் மலையும் மடுவுமா கையில் அகப்படும்? வெறும் திரையைத்தான் தொடலாம். இவ்வளவு காட்சிகளுக்கும் ஆதாரமாக இருக்கும் திரைதான் கைப்படும். ஆட்டம் முடிந்தபிறகு மறுபடியும் திரைதான் எஞ்சி நிற்கிறது. ஆட்டத்தின் முன்பும் ஆட்டத்தின்போதும் ஆட்டத்தின் பின்புமாகிய முக்காலத்திலும் உண்மையில் இருப்பது திரைதான். ஆனால் ஆட்டத்தின்போது படங்கள் தோன்றி மறைகின்றன. நாம் ஆத்மாவையே பற்றிக்கொண்டால் சித்திரங்களின் தோற்றத்தைக் கண்டு ஏமாற மாட்டோம். சித்திரங்கள் தோன்றினாலும் மறைந்தாலும் திரை ஒன்றுதான் உண்மை என்று தெரியவரும். திரையைப் பார்க்காமல் சித்திரங்களை மாத்திரம் பார்த்து மக்கள் பிரமிப்பதுபோல அஞ்ஞானி ஆத்மாவை மறந்து உலகமே மெய்யென்ற பிரமையை அடைகிறான். திரையில்லாவிட்டால் படமும் இல்லை என்ற அறிவு வந்ததுபோல, ஆத்மா இல்லாவிட்டால் உலகம் இல்லை என்ற அறிவு வரவேண்டும். அப்போது பிரமைக்கு இடம் இல்லை. திரையும் சித்திரமும் பார்வையும் ஆத்மாவேயென ஞானி அறிவான். சித்திரங்களோடு சம்பந்தப்படாமல் ஆத்மா அவ்வியக்தமாகவும், சித்திரங்களின் சேர்க்கையால் வியக்தமாகவும் நிற்கிறது. ஆனால் இரண்டு நிலையிலும் ஆத்மாவில் வேறுபாடு இல்லை. ஆத்மாவின் இந்த இரண்டு நிலைகளிலும் ஞானி யாதொரு பேதமும் காண்பதில்லை. அவன் எப்பொழுதும் தன் நிலையிலேயே இருக்கிறான். ஞானி பல துறைகளிலும் சுறுசுறுப்பாக இருப்பது கண்டு விஞ்ஞானி பிரமை அடைகிறான்.

(வாக்கு)

ஓட்டுக் கொடுக்கலாமா?

தேர்தலில் தமக்கு ஓட்டுக் கேட்பதற்காக ஓர் அபேட்சகர் எங்கள் வீட்டுக்கு ஒரு நாள் வந்து ஓட்டுக் கேட்டார். அப்போது என் தம்பி பக்கத்தில் இருந்தான். அபேட்சகர் போன பிறகு என்னிடம் வந்து, "அவர் யார்?, என்னத்துக்கு வந்தார்?" என்று கேட்டான்.

"அவர் தமக்கு ஓட்டுப் போடும்படி கேட்க வந்தார்" என்றேன்.

"என்னத்துக்கு ஓட்டு? அதை வாங்கி என்ன செய்வார்?" என்றான்.

"மந்திரியாக வருவதற்காக ஓட்டுக் கேட்கிறார்" என்று நான் சொல்லி வைத்தேன்.

உடனே அவன் முகத்தைச் சுளித்துக்கொண்டு, "அவருக்கு ஓட்டுக் கொடுக்கக் கூடாது. அந்த ஓட்டை நாமே வச்சுக்கிட்டு நாமே மந்திரியாகணும்" என்றான்.

—ஜி. அப்துல் ரஹீம், வழுத்தூர்.

இந்தியச் சிறுகதை:

மனத்தத்துவ நிபுணர்

அசோக் சட்டர்ஜி

★★

நகைச்சுவை ததும்ப நையாண்டியாகச் சிறுகதைகள் பல எழுதியுள்ளவர் ஆசிரியர். 'மாடர்ன் ரெவ்யூ' ஸ்தாபகரான பிரபல ஆசிரியர் ராமானந்த சட்டர்ஜியின் மகன். இதை வங்க மூலத்திலிருந்து மொழிபெயர்த்திருக்கிறார் ஸ்ரீ தா. நா. சேனாபதி.

★★

அதோ ஒரு வீடு தெரிகிறதே, பௌபஜார் பெரிய ரஸ்தாவில்; அது பிரபல வங்காள மனத்தத்துவ ஆராய்ச்சியாளர் ஹஸந்த சந்திர தரப்தார், 'எம். எஸ்ஸி., பி. எல்., பிஎச். டி., அவர்களின் வீடுதான். ரேடியோ கம்பம், மின்னல் பாதுகாப்புச் சூலம், பருவ நிலை காட்டும் கோழிப் பொம்மை இப்படிப் பல விநோத விபரீதங்களை அந்த மாடியில் காணலாம். மனிதர் ஒல்லியாக இருந்தாலும் இலக்கணத்திலும் மொழி ஆராய்ச்சியிலுங்கூட லேசுப்பட்டவரல்ல.

சிறு வயதில் அவருடைய உறவினர் ஒருவரை வெறி நாய் ஒன்று கடித்துவிட்டது. கசௌலியில் இருந்த பாஸ்ரேர் ஆராய்ச்சிச்சாலையில் சிகிச்சை செய்து தேற்றி அனுப்பினார்கள். 'உடலுக்குள் ஒரேயடியாக விஷம் புகுந்தால் தாங்க முடியாது. ஆனால் கொஞ்சங்கொஞ்சமாக அதை உள்ளுக்குச் செலுத்திவந்தால் நாளடைவில் அவ்வளவு விஷத்தையும் தாங்கக் கூடிய சக்தி ஏற்படும்' என்பது பாஸ்ரேர் சிகிச்சை முறையின் மூலக் கருத்து. இப்படிச் செய்ததில் அந்த உறவினருக்கு வெறிநாய் கடித்ததால் உண்டான 'ஹைட்ரோபோபியா' (நீரைக் கண்டு திகில்) நீங்கியது. 'இதே முறையை அநுஷ்டித்து என் சகல விதமான திகிலையும் போக்கக் கூடாது?' என்று ஹஸந்த சந்திரருக்குத் தோன்றியது. அவருக்கு ஒரு மருமான் இருந்தான். அந்தப் பையனுக்கு இருட்டு என்றால் அபார பயம். ஹஸந்த சந்திரர் அவனை வைத்துக்கொண்டு இந்தப் புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். முதலில் கொஞ்சநாள் 32 காண்டில் சக்தி உள்ள மின்சார விளக்கை ஏற்றி ஓர் அறையில் அவனைப் பூட்டி வைத்தார். பிறகு கொஞ்சங் கொஞ்சமாகக் காண்டில் சக்தியைக் குறைத்துக்கொண்டே வந்து கடைசியில் முழு இருட்டிலும் பயமின்றி அவன் இருக்கும்படி பழக்கிவிட்டார். பிறகு பெண்களுக்குள்ள பயத்தை எப்படி நீக்குவது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டார். "பயம் என்பதை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம்: 1. சரீர பயம்; 2. மானசிக பயம்;

காப்பிரைட்: 'ஆனந்த பாஜார்' (வங்காளிச் சிறுகதைத் தொகுப்பு), வெளியிடுவோர்: ரஞ்சன் பப்ளிஷிங் ஹவுஸ், கல்கத்தா.

3. அத்யாத்மிக பயம். இந்த மூன்றையுமே நீக்கிவிட முடியும்" என்று விளக்கி ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டார். இதற்கென்றே ஓர் ஆராய்ச்சி நிலையம் ஸ்தாபிப்பது என்று முடிவு செய்தார். உடனே சென்னைக்குப் புறப்பட்டுப் போனார். அங்கே உள்ள 'பாரத வீரத்தாய்மார் சங்கம்' அவருக்குப் பிரமாதமான வரவேற்பு அளித்தது. அந்தச் சங்கத்தின் தலைவராகவே அவரை நியமித்துவிட்டார்கள். கல்கத்தாவுக்குத் திரும்பும்போது சுமார் ஏழு அல்லது எட்டாயிரத்துக்கு மேல் பணம் திரட்டிக்கொண்டு வந்துசேர்ந்தார். நாலைந்துமாதம் ஊரெல்லாம் சங்கத்தின் பெயர் அடிபட்டது. "நாடு முன்னேறவேண்டுமானால் ஹஸந்த பாபுவின் தேசியத் திட்டத்தை அப்படியே ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்" என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள்.

மதுபுரத்தில் ஒரு பெரிய பங்களாவைக் குடிக் கூலிக்கு எடுத்துக்கொண்டார் ஹஸந்தபாபு. இளவயதிலேயே தம் பெண்களுக்குப் பயமெல்லாம் தீர்ந்து அவர்கள் தீரம்மிக்க மக்களைப் பெறவேண்டும் என்று விரும்பும் பெற்றோரிடமிருந்து கடிதத்தின்மேல் கடிதமாக வந்து குவிந்துகொண்டேயிருந்தன. இம்பீரியல் பாங்கியில் சங்கத்தின்பேரில் போட்ட தொகை ஏறிக்கொண்டே வந்தது. சங்க அலுவலையும், பயமிகுந்த பெண்களை வீரத்தாய்மார் ஆக்கும் பரிசோதனையையும் தொடங்க வேண்டியதுதான் பாக்கி. பிரபல தினசரி ஒன்றில், 'பெண்களைக் கவனித்துக்கொள்ள நர்ஸிங் முதலியவற்றில் தேர்ச்சியும் நல்ல அநுபவமும் உள்ள வயதான இரண்டு மேட்ரன்கள் தேவை' என்று ஒரு விளம்பரம் கொடுத்தார். அப்படியே இரண்டு கிறிஸ்துவ மாதர் வந்து சேர்ந்தார்கள். விரைவில் பங்களா நிறைய மாணவிகள் குவிந்துவிட்டார்கள். ஹஸந்தபாபு மனத்தத்துவப் பரீட்சையில் முதலாகத் தேறிய தாராபதன் என்ற வாலிபனைத் தமக்குத் துணையாக வைத்துக்கொண்டார். பெண்களின் குலம், வம்சம் சம்பந்தமாகப் பல புள்ளி விவரங்களைத் தொகுத்துப் பலவித பயத்தின் காரணங்களை ஆராயத் தொடங்கினார். தலை, கால், மூக்கு, புருவம், உயரம், நிறம் இப்படி எல்லாவற்றைப் பற்றியும் குறிப்பெழுதி, இதற்கெல்லாம் மும்மூன்று பிரதிகள் எடுத்து வைத்திருந்தார். ஸ்வாமி அச்சுதானந்தர் என்பவர் அவருடைய ஆப்த நண்பர். அவரைக் கலக்காமல் ஹஸந்தபாபு எந்தப் பரிசோதனையும் செய்வதில்லை. ஆகவே, ஒரு நாள் கல்கத்தாவுக்குப் போய் வெகு நேரம் ஸ்வாமிகளோடு கலந்தாலோசித்து இரண்டு பெரிய ஜாதிக்காய் மரப்பெட்டிகளுடன் மதுபுரம் வந்து சேர்ந்தார். அவைகளில் என்ன இருக்கிறது என்று யாருக்குமே தெரியாது. மறுநாள் காலை பிரசங்கக் கூடத்தில் பெண்கள் எல்லாரும் வந்து கூட வேண்டும் என்று சொல்லியிருந்தார் ஹஸந்தபாபு. கூட்டம் கூடுவதற்கு முன்னாலேயே பெட்டிகள் இரண்டையும் கூடத்திலுள்ள மேடையில் கொண்டுவந்து வைத்துவிட்டார்கள். என்ன வேடிக்கை நடக்கிறது பார்க்கலாம் என்று மேட்ரன்கள் இருவரும் ஆவலோடு காத்திருந்தார்கள். கூடத்துக் கதவுகளையெல்லாம் ஆட்கள் தாழிட்டு விட்டார்கள்; ஹஸந்தபாபு உட்கார்ந்திருக்கும் பக்கம் மட்டும் ஒரே ஒரு கதவு பாதி

திறந்துவைத்திருந்தது. முதலில் பெண்கள் எல்லாரும் எழுந்து அவருடைய காரிய தரிசி தாராபதன் கட்டிய 'வீர காரியர்' பாடலைப் பாடத் தொடங்கினார்கள்:

விடுதலை விடுதலை விடுதலை!
வீரத்தமிழ்ப் பெண்களுக்குப்
பயத்தினின்று விடுதலை!
தீரத் தெலுங்கு மாதருக்கும்
விடுதலை விடுதலை!
வங்கதேச முழுதுமுள்ள
பெண்களுக்கும் விடுதலை!
எங்குமுள்ள எல்லா ஜாதிப்
பெண்களுக்கும் விடுதலை!
புருஷன், தந்தை, அண்ணன்,
தம்பி ஆண்களெல்லாம்
அஞ்சிட
அருமையான அச்சமற்ற
மைந்தர்தம்மை நல்குவோம்.
தலைநிமிர்ந்து நின்று நாங்கள்
இந்த மந்திரந்தனை
உலைவிலாமல் ஓதவைத்த
ஹஸந்த பாபு வாழ்கவே!''

இது முடிந்ததும் ஹஸந்த பாபு தம் அங்கவஸ்திரத்தை நன்றாக உடம்பில் போர்த்துக்கொண்டு, "இன்று நாம் ஓர் உயர்ந்த நோக்கத்துக்காக இங்கே கூடியிருக்கிறோம். ஆரம்பத்தில் பிரமாதமாகத் தோன்றாவிட்டாலும் வருங்காலத்துப் பாரத சரித்திரத்திலே இது முக்கிய இடம் பெறுவது திண்ணம். இனி எல்லாரும் சேர்ந்து நம்முடைய உயர்ந்த நோக்கங்களைப்பற்றிச் சற்று நேரம் சிந்தித்துவிட்டு, 'புன்னகை பூத்தெம்பாரத அன்னை' என்ற பாட்டைப் பாடுங்கள்'' என்றார்.

ஸ்வாமி அச்சுதானந்தர் கட்டிய இந்தப் பாடலை எல்லாரும் பாடத் தொடங்கினார்கள்:



புன்னகை பூத்தெம்
பாரத அன்னை!

இன்முகம் காட்டி
எமக்கருள் புரிவாய்.

துன்ப மகன்று
துணிவுடன் நின்றிடப்

பன்முறை கலகல
வென்று நகை!

அதே சமயம் ஹஸந்தபாபு ஒரு தடியால் அந்தப் பெட்டிகள் இரண்டையும் ஓங்கி அடித்தார். பெட்டிகள் முறிந்தன. அவற்றிலிருந்து கிசுகிசுவென்று நாலு திசைகளிலும் சுண்டெலிகள் ஆயிரக்கணக்கில் பெண்கள் கூட்டத்தை நோக்கிப் பாய்ந்தன. சட்டென்று பாட்டு நின்றுவிட்டது. அப்புறம் அந்தக் காட்சியை வாயால் விவரிக்கமுடியாது! பெண்கள், "ஐயையோ!'' என்று கீச்சுக் குரலில் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடலானார்கள். வழிபுரியாமல் சிலர் திண்டாடினார்கள். இரண்டு மூன்று பேர் ஹஸந்தபாபுவின் பின் பக்கமுள்ள

கதவை நோக்கித் தாவினார்கள். அவர் அவர்களைத் தடுத்து நிறுத்த எழுந்தார். உடனே மற்றவர்கள் அவரை கீழே தள்ளி மிதித்துக் கொண்டு வெள்ளம் போல் அந்த வழியாக ஓடத் தலைப்பட்டார்கள்.

சற்று நேரங்கழித்துக் கலவரம் அடங்கி அவர் நிமிர்ந்து பார்த்த போது உடைந்த வளையல்களையும், பலர் கால்பட்டு நசுங்கி ஓடும் சில சுண்டெலிகளையும், மூர்ச்சை யடைந்த ஒரு பெண்மணியையுந் தான் அறையில் கண்டார். அவர் மூக்குக் கண்ணாடி உடைந்துவிட்டது. ஓடும்போது மேட்ரன் அம்மாள் ஒருத்தி அவர் துடைமேல் மிதித்துக்கொண்டு போனாள். அந்த வலி பொறுக்க முடியவில்லை. மெது வாக எழுந்து, "நான் பண்ணினது தப்பு. முதலிலேயே இப்படி எலியை விட்டிருக்கக் கூடாது. அந்தச் சாமியார்ப்பயலின் பேச்சைக் கேட்டிருக்கவே கூடாது. நிலைமை சீர்படக் குறைந்தது இரண்டுவாரமாவது ஆகும். அடுத்த தடவை பல்லியைவிட்டுப் பார்க்க வேண்டும்" என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார் ஹஸந்தபாபு.

க்விஸ் விடை

(1) ஸோவியத் யூனியன்; அதன் சுற்றெல்லை இந்த நாடுகள். (2) 78 அல்ல; 156. சந்தேகம் இருந்தால் எண்ணிப் பாருங்கள். (3) ஒன்று, தென் கோளார்த்தம்; மற்றது, வட கோளார்த்தம். (4) $6\frac{1}{2}$ டன். (5) போகும் போது பஸ் நிறையப் பிரயாணிகள் இருந்ததால், அதன் ஸ்பிரிங் தாழ்ந்து, பஸ்ஸின் உயரம் குறைந்திருந்தது; வரும்போதோ பஸ் காலி. (6) மேலே மூன்று சதுரங்கள் மட்டும் அமைந்திருக்கும் கட்டத்தை நரி சுற்றி வர வேண்டும். அப்போது வாத்தைப் பிடித்துவிடலாம்.

திருத்தம்: டிசம்பர் '51 இதழில் உள்ள 'க்விஸ்' பகுதியில் நேர்ந்துள்ள இரண்டு பிழைகளை எடுத்துக்காட்டிய நண்பர்களுக்கு வந்தனம். முதல் க்விஸ் விடையில் '$6\frac{1}{2}$ மணி' என்றிருப்பதை '$5\frac{1}{2}$ மணி' என்று திருத்திக்கொள்க. இரண்டாவது க்விஸ் கேள்வி உடம்பின் உஷ்ணம் பற்றியது. நாவுக்கடியில் பொதுவாக ஆரோக்கிய நிலையில் சராசரி 98.4 டிகிரிதான் இருக்கவேண்டும். அந்தக் கேள்வியும் பதிலும் சரியாக அமையவில்லை.

வெளிநாட்டுக் கதை :

ஆண் உள்ளம்

ஜியார்ஜெரி காண்ட்ரி

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இத்தாலியில் கியோவானி பொக்காசியோ என்பவர் முதல் முதலாகச் சிறந்த சிறுகதைகள் எழுதத் தொடங்கினார். காமக் களஞ்சியமான சிறுகதைகள் எழுதுகிறவர் என்ற பெயர் இவருக்கு எப்படியோ வந்துவிட்டது. ஆனால், இவர் எழுதியுள்ள கதைகளில் பெரும்பகுதி அப்படி இல்லை. சோகம், ஹாஸ்யம், நீதி இவையெல்லாம் அவற்றில் அடங்கியிருக்கின்றன. பல நூற்றாண்டுகள் இவரே ஐரோப்பாவில் இணையற்ற சிறுகதை மன்னராக விளங்கினார். இவருக்குப் பின் எத்தனையோ சிறுகதை எழுத்தாளர்கள் இத்தாலியில் தோன்றியுள்ளார்கள். இங்கே தந்திருக்கும் சிறுகதையின் ஆசிரியர் சமீபகாலத்தில் எழுதிவந்த ஒருவர்.

ஆண் உள்ளம்

★

கதவு மணி அடித்தது. யாரோ உள்ளே வந்து கூடத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். இதெல்லாம் குக்லீல்மோ காதில் விழுந்தது. என்றாலும் அவன் அசையவில்லை. அது யாராயிருக்கும்? மருந்துக்கடைப் பையனா? ரொட்டிக்கடை ஆளா? அல்லது வேலைக்காரியா? உப்பு சப்பில்லாமல் ஒரே சோட்டில் போய்க்கொண்டிருக்கும் தன் வாழ்க்கையின் சகல விவரங்களும் அவனுக்குக் 'கரதலப் பாடம்.' நெசவாளியின் தறி ஓடும்போது உண்டாகும் தாளகதியைப் போல அவன் வீட்டிலும் ஒரே விதமாய்க் காரியங்கள் நடக்கும். அத்தனையையும் தன் படிப்பறையிலிருந்து அவன் கவனித்திருக்கிறான். வழக்கத்துக்கு மாறாக இன்று நிகழும் நிகழ்ச்சிகளின் சந்தடி கூட, அவனுக்குப் பழக்கமானது போலவே தோன்றியது. இதிலும் அவன் மனம் விசேஷ சிரத்தை கொள்ளவில்லை. வீட்டுக்கு மருந்துக் கடைக்காரன் வருவது புதிசுதான். அதற்காக நகர வேண்டுமோ என்ன? அவனுக்கு ஒன்றும் தெரியாது; நடக்கிறது எதையும் மாற்ற அவனால் ஆகாது. அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்; தனக்குத்தானே எண்ணமிடத் தொடங்கினான்: 'மருத்துவச்சி ஸினாரோ அக்கார்டி இதோ வந்துவிடுவாள். அப்புறம் டாக்டர். பிறகு கதவு மணி திரும்பத்திரும்ப அடிக்கும். ஒன்றிரண்டு மணி நேரத்தில் எல்லாக் காரியமும் முடியும்.'

தன் உள்ள வேதனையை மறப்பதற்காக அவன் மறுபடியும் படிக்கத் தொடங்கினான். வசந்தம் வந்ததால் பச்சைப் பசேல் என்றிருக்கும் தங்கள் சின்னஞ் சிறு தோட்டத்தை ஒரு முறை ஏறெடுத்துப் பார்ப்பதற்குக்கூட அவன் தலை நிமிரவில்லை. வாழ்க்கையைப் போலவே படிப்பிலும் அவனுக்குச் சுவையில்லை. படித்துக்கொண்டே தன் வாழ்க்கையைப்பற்றி அவன் சிந்திக்கத் தொடங்கினான். இருபத்தைந்து வயதில் அவனுக்குக் கல்யாணம் நடந்தது. இப்போது வயது முப்பது. ஐந்து வருஷ காலம் உப்பு சப்பற்ற வாழ்க்கை. விசேஷமான மகிழ்ச்சியுமில்லை; துயரமுமில்லை. அம்மாவுக்குப் பிரமாத மனோராஜ்யம் ஒன்றும் கிடையாது. சாதாரணமாய் ஏதோ அவள் போட்ட திட்டம் நிறைவேறிக் காரியங்கள் வெகு கச்சிதமாய் நடந்துகொண்டிருக்கின்றன. அவனும் அதற்கு உடந்தையாகவே இருந்துவிட்டான். அடித்துப் பேச அவனுக்குத் துணிவில்லை. பெரும்பாலான நடுத்தர வயது ஸ்திரீகள் என்ன ஆசை கொள்வார்களோ அதே ஆசைதான் கொண்டாள் அவன் தாயும். தாங்கள் பெற்றெடுத்த மகனுக்கு வயது வந்துவிட்டால், அன்புள்ள பெற்றோர் அடையும் கவலை அவளுக்கும் உண்டாயிற்று. மிக்க ஜாக்கிரதையோடு அவனிடம் அடிக்கடி, "இதோ பார், நீ ஜரீனை மணந்து கொள். அவள்தான் உனக்கேற்ற

மனைவி; அவளை விட்டால், உனக்கு வேறொருத்தி கிடைக்க மாட்டாள். அவளுக்கு அழகில்லை. அதனால் என்ன? பொறுப்பான பெண். யோக்கியதை உள்ளவள். ஏதோ கொஞ்சம் பணங் காசும் வைத்திருக்கிறாள். அப்படிப் பெரும் பணக்காரி இல்லை. ஆனால், பணத்தையா மணக்கப்போகிறாய்? அவள் உன் குடித்தனத்தை அழகாக நடத்துவாள். இரண்டு குழந்தை குட்டி பிறக்கும். வேறென்ன வேண்டும் உனக்கு? இதை விட்டு வெறும் பகட்டிலெல்லாம் மயங்காதே..." என்று அம்மா சொன்னாள்.

என்றுமே அவனுக்கு வெறும் மயக்கங்கள் இல்லை. அம்மாவைத் திருப்தி செய்ய, ஜீனை மணந்து கொண்டான். அம்மா கொண்ட கருத்துப்படி மகிழ்ச்சியாயிருக்கப் பழகிக்கொண்டான்.

அதென்ன மகிழ்ச்சி! கனவிலே பணிவிடை செய்ய வந்த தாதியைக் கண்ட நோயாளி அடைவது போன்ற சாரமற்ற மகிழ்ச்சி. 'வெறும் பகட்டிலே மயங்காதே' என்று அம்மா சொன்னது ஒருத்தியை மனத்தில் வைத்துக்கொண்டுதான். அத்தை மகள் அன்னாவே அந்த 'வெறும் பகட்டு.' அப்பாவின் தங்கைகளில் ஒருத்தியின் மகள் அவள். நல்ல பணக்கார வியாபாரிக்கு வாழ்க்கைப்பட்டவள் அந்த அத்தை. குக்லீல்மோ சிறுவனாக இருந்தபோது அடிக்கடி அவர்களுடைய வீட்டுக்குப் போயிருக்கிறான். அவன் வளர்ந்து வயதடைந்தபோது, அத்தைக்குச் சந்தேகம் வந்துவிட்டது. அத்தை வீட்டுச் சொத்திலும் தகராறு வந்துவிட்டது. இதனால் அங்கே போவதையே கொஞ்சங் கொஞ்சமாக அவன் நிறுத்திவிட்டான். உயரமும் அழகும் வாய்ந்து, எப்போதும் நன்றாய் உடுத்து, வாசனை பூசியிருக்கும் இந்தப் பெண்தான் 'வெறும் பகட்டு.' இவளை மணக்கக் கூடாதென்றுதான் அம்மா எப்போதும் போராடினாள். "உன்னைப் போன்ற ஒருவனை அவள் மதிப்பாளா? உன்னை மணப்பாளா? நடக்கவே நடக்காது. அவள் பெரிய கை. தளுக்கிக் குலுக்கி எத்தனையோ பயல்களை மயக்கிக்கொண்டிருக்கிறாள். அதிலே அவளுக்கு ஓர் ஆனந்தம். உன்னைப்பற்றிய எண்ணமே அவளுக்கு லவலேசமும் கிடையாது" என்றாள்.

ஓயாமல் செல்லரிப்பது போல இந்த வார்த்தைகள் அவன் கனவை அரித்துக் கரைத்துவிட்டன. எறும்பூரக் கல்லும் தேயாதோ? இப்படியாக அவன் ஜீனை மணந்தான்...சாந்தியும்...

இந்தச் சாரமற்ற மகிழ்ச்சியைப் பல வருஷ காலம் அநுபவித்தாயிற்று. இதோ இப்போது ஜீன் ஒரு மகனைப் பெறப் போகிறாள். முதலில் இதைப்பற்றிக் குக்லீல்மோவுக்கு அப்படி ஒன்றும் பெரிய உற்சாகமில்லை. 'வெறும் பகட்டிலே மயங்காதே' என்று தானும் ஒரு நாள் எச்சரிக்க வேண்டிய ஒருவனைப் பெற்று வளர்க்கத் தருணம் வந்துவிட்டதாக்கும் என்று மட்டும் அவன் எண்ணினான். மாதங்கள் செல்லச் செல்ல, அவன் உள்ளத்திலே - மெல்ல மெல்லப் பரவித் தரையை முழுகடிக்கும் வெள்ளப் பெருக்கைப் போல-ஆனந்தம் பொங்கியது. ஒரு மகன்; சென்ற காலத்தில் அவன் அநுபவித்த துயரம், துறந்த காதல், இழந்த மகிழ்ச்சி இத்தனைக்கும் ஈடு செய்யக்கூடிய ஒரு மகன் பிறக்கப் போகிறான்!

குக்லீல்மோ எழுந்தான். படிப்பறையை விட்டு வெளியேறிக் கூடத்துக்கு வந்தான். கிருமிகளைக் கொல்லும் மருந்தின் பலத்த வாசனை, அவன் மனைவி இருந்த அறையிலிருந்து வந்தது. அவன் கூர்ந்து காது கொடுத்துக் கேட்டிருந்தால், அவள் முக்கி முனகும் முனகல் சத்தமும் அவனுக்குக் கேட்டிருக்கும். ஆனால், அதற்குள் வெளியிலிருந்து யாரோ ஒருவருடைய நிழல் திடீரென்று அவன் முன்பு தோன்றியது. வெகு அமைதியாக மிதந்து வந்த உரத்த குரல் ஒன்று அவன் சிந்தனையைக் கலைத்தது.

"இதோ வந்தேன்; இதோ வந்தேன். என்ன, பயந்து விட்டீர்களோ?"

அது டாக்டர். பழைய பள்ளிக் கூடத் தோழர்; அடிக்கடி வீட்டுக்கு வந்து பழக்கமானவர். சதை விழுந்து, குஷியாக இருப்பவர். சிவந்த முகம். புதிய ஜீவன்களை உலகத்துக்குக் கொண்டு வரும் தொழில் புரிவதால்தானோ என்னவோ, அவர் தேகத்திலே நல்ல வனப்பு ஏறியிருந்தது.

"என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகவே வந்தேன்....எப்படி இருக்கிறாள்? சௌகரியந் தானே? நல்லது. நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள்.. உங்கள் நிலைமையில் நான் இருந்தால், வாசலில் எங்கேயாவது உலாவப் போய்விடுவேன். அதுவே வேண்டாம்: படிப்பறையில் போய் உட்கார்ந்து பேசாமல் படித்துக்கொண்டிருங்களேன். ஒன்றிரண்டு மணி நேரத்தில் வெளியே வந்து நிலைமை எப்படி இருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

அவர் சிரித்துவிட்டுப் படுக்கையறைக்குள் சென்றார். குக்லீல்மோ திரும்பவும் தன் படிப்பறைக்குள் நுழைந்தான். வாசலிலேதான் போய்விடலாமா என்று ஒரு கணம் நினைத்தான். ஆனால், இன்னதென்று சொல்ல முடியாத ஒரு வித பயமும் ஆனந்தமும் கலந்த உணர்ச்சி ஒன்று அவனைத் தடுத்தது. இது ஏதனால் என்று அவனுக்கே புரியவில்லை, அவன் நரம்புகள் பரபரப்புற்றதாலா? அல்லது..

தன் மேஜைக்கு முன் மறுபடியும் அவன் உட்கார்ந்தான். பழைய எண்ணங்களெல்லாம் மீண்டும் தோன்றின. அவனுக்குக் குழந்தை பிறந்து, அவன் வருங்கால வாழ்வைச் சிறப்பிக்க ஆயத்தம் செய்யப்போவது போல் தோன்றிய இந்தக் கணத்திலே, அவன் மனம் விபரீதமாகச் சென்ற காலத்துச் சிந்தனையிலே மேலும் மேலும் ஆழ்ந்து துழாவத் தொடங்கியது.

சென்ற காலம் என்றால், அத்தனையும் அன்னாவுக்குரியதே - அவளும் அவள் பெயருமே நிறைந்த காலம்.

தன் கல்யாணத்துக்குப் பின்பு அநேகம் தடவை அன்னாவை அவன் பார்த்திருக்கிறான். அவள் மணமே செய்துகொள்ளவில்லை. சுயேச்சையாயிருக்கவே அவளுக்குப் பிரியம். இதை அவளே சிரித்துக்கொண்டு பல முறை சொல்லியிருக்கிறாள். இப்போது அவளுக்கு வயது இருபத்தேழு ஆகிவிட்டது. இன்னும் ஏகாங்கியாகவே வாழ்கிறாள். எப்போதும் யாத்திரை; எப்போதும் சுறுசுறுப்பு. என்றும் போலவே கலகலப்பு; என்றும் போலவே வசீகரம். அவன் குடும்பத்தைப் பார்க்கச் சில சமயம் வருவாள். அப்போதெல்லாம் அமைதி

யாகவும் ஜரீனிடம் நேசமாயும் நடந்துகொள்வாள். அவனுடன் அவள் அதிகமாய்ப் பேசுவதில்லை; ஏதோ ஒன்றிரண்டு புன்சிரிப்புச் சிரிப்பாள். அவனோடு கைகுலுக்கு வாள்; ஆனால் சாதாரண சிநேகிதி மாதிரிதான் குலுக்குவாள். அம்மா செய்ததில் பெரிய பிச கொன்றும் இல்லையென்றே அப்போது குக்லீல்மோவுக்குத் தோன் றும். அன்னாவுக்குப் பெரிய மனோ ராஜ்யம் எதுவும் இல்லாதிருக் கலாம்; அவனிடம் அன்புமா காட்டக்கூடாது? அதுவும் இருப்ப தாய்த் தெரியவில்லையே!

கூடத்திலே இன்னும் பலர் வந்து கூடிவிட்டார்கள். எவளோ ஒருத்தி மருத்துவச்சியிடம் சென்று மெல்லிய குரலில் ஏதோ பேசினாள். அந்தக் குரலைக் கேட்டுக் குக்லீல்மோ பரபரப் புற்றான். அடுத்த நிமிஷம் அவன் படிப்பறைக் கதவு திறந்தது. அழகிய முகம் ஒன்று தென்பட்டது.

"நான்தான், குக்லீல்மோ. உள்ளே வரலாமா?"

அசடு வழிய மேஜையைத் தட்டி, 'வா' என்று அவன் ஜாடை காட்டி னான். தன் எண்ணங்களையெல்லாம் மேஜை டிராயருக்குள் வைத்துப் பூட்டுவது போன்ற ஜாடை; கையுங் களவுமாய்ப் பிடிபட்ட திருட னைப் போன்ற ஜாடை. ஆனால், அன்னா எவ்விதத் தயக்கமுமின்றி அமைதியாக உள்ளே வந்தாள்.

"சும்மா விசாரித்துப் போகலாம் என்று வந்தேன். ஜரீன் எப்படி இருக்கிறாள்?"

குக்லீல்மோ எங்கேயோ பராக் குப் பார்த்துக்கொண்டு பேசா திருந்தான்.

அவனை அன்னா அன்போடு நோக்கி, "பாவம்! நீ ரொம்பக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாய், குக்லீல்மோ" என்றாள்.

"இல்லை; டாக்டர் உள்ளே இருக் கிறார்" என்று அவன் முணுமுணுத் தான்.

காதலும் ஜீவனும் சம்பந்தப்பட்ட ஒரு காரியத்தைப்பற்றிச் சிரத்தை யுடன் விசாரிக்க வந்திருக்கிறாள் இந்தப் பெண். இவளைப்பற்றிய நினைப்புத் திடீரென்று அவன் மனத்தை உறுத்திற்று. ஏனென் றால், அவன் ஜாக்கிரதையாக இருப்பவன்; அவன் மனம் சுத்த மானது. அன்னாவின் அழகிய உடம்பைத் தன்னை அறியாமலே ஒரு முறை கண்ணோட்டம் விட் டான். மக்களைப் பெற்றெடுத்து வாழ முற்றும் பக்குவமான உடம்பு.

"உட்காரேன், அன்னா. நீ வந் ததே பெரிசு."

அவன் குரல் ஒரு மாதிரியா யிருந்தது-பாட்டிலே ஸ்வரம் மாறும் போது தோன்றுமே, அந்த மாறுத லைப் போல. அன்னா அவனை வியப் புடன் பார்த்தாள். ஒரு கணம் ஒன்றுமே பேசவில்லை. அப்புறம், "உனக்கு என்னவாவது வேண் டுமா? என்னால் ஆன ஒத்தாசை செய்கிறேன்" என்றாள்.

இப்போது அவன் பேசவில்லை. அவர்களுக்கிடையே நிலவிய மௌனம் ஒரு பெரிய அலைவட்டம் போல விரிந்தது. அதிலே அவர்கள் கரைகாணாமல் முழுகிவிட்டது போல் தோன்றியது. தம்மையே மறந்தவராய் இருவரும் வேறேதோ குரல் ஒன்றைக் கேட் பது போல் மெய்மறந்திருந்தார்கள். என்றோ ஒரு நாள் பேசி இன்று மறந்த வார்த்தைகள், என்றோ ஒரு நாள் கருதி மனத்திலேயே மடிந்த வார்த்தைகள் - இவற்றின் குரல்

தான் அது. திடீரென்று குக்லீல்மோ அந்த மௌனத்தைக் கலைத்து, அதிசயமான ஒரு கேள்வி கேட்டான். பெரிதும் கூச்சமுள்ள அவனே அப்படிக் கேட்டதுதான் இன்னும் அதிசயமாயிருந்தது. தர்ம சங்கடமான ரீதியில் தன்னை அவன் கொஞ்சுவது போல அவள் உள்ளத்தை அது குழையச் செய்தது.

"நீ ரொம்ப நல்லவள், அன்னா! நீ ஏன் மணம் செய்துகொள்ள வில்லை?"

அவள் முகம் சிவந்தது. முகம் மட்டும் அல்ல, ரோமப் பட்டை அணிந்த அவள் கழுத்துங்கூடச் செக்கச் செவேலென்று சிவந்தது. என்றாலும் அவள் புன்சிரிப்புச் சிரிக்க முயன்றாள். அவள் கண்களிலே தோன்றிய கலக்கத்தை மறைக்கவே அந்தப் புன்சிரிப்பு.

"உன் நினைப்பென்ன, குக்லீல்மோ? நான் ஏன் கன்னியாகவே இருக்கிறேன் என்றால், என்னை யாருக்கும் பிடிக்கவில்லை; அதனால்தான்."

"ஓஹோ!"

குக்லீல்மோ பலக்கச் சிரித்தான். "யாருக்குமா பிடிக்கவில்லை? ஊரிலே உள்ள அத்தனை பெண்களையும் சுற்றியவரை விட உன்னை வட்டமிட்ட வாலிபர் அதிகமாவார்களே?"

"உனக்கு யார் அப்படிச் சொன்னது?"

"ஏன், அம்மாதான்."

"உன் அம்மாவுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவள் என்னைத்தைக் கண்டாள், பாவம். அப்படியே இருக்கட்டும்; நான் ஒரு விரதம் பூண்டிருக்கிறேன் என்று தான் வைத்துக்கொள்ளேன்."

அன்னா சிரித்துக்கொண்டே தான் இதைச் சொன்னாள். ஆயினும், அவள் மனம் சங்கடப்பட்டது நன்றாய்ப் புலனாயிற்று.

"விரதமா? ஆனால், நாம் சின்னஞ் சிறுவராயிருந்தபோது, நீ வேறு..."

"பின்னால் விரதம் பூணலாகாதா?"

"எப்போது நீ விரதம் பூண்டாய்?"

"அது எனக்கு ஞாபகம் இல்லை. சுமார் நாலைந்து வருஷங்களுக்கு முன்பு..."

"எனக்கு மணமான போதா?"

அன்னா பேசவில்லை. அவளுக்கு வரவரச் சங்கடமாய்ப் போயிற்று. உதட்டைக் கடித்துக்கொண்டாள். 'என்ன முட்டாள்தனமாய்ப் பேசிவிட்டேன்' என்று நினைத்தாள்.

அவன் மீண்டும், "ஆமாம், ஆமாம். எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. அப்போது நீ உடம்பு சரிப்படாமல் கிடந்தாய்... என்ன விஷயம் என்று யாருக்குமே புரியவில்லை...எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஜரீனுடன் நான் ஸ்விட்ஜர்லாந்தில் இருந்தேன். பின்னால் வந்துதான் அதைக் கேள்விப்பட்டேன்" என்று சொல்லிப் புன்சிரிப்புடன், "அப்போதுதான் தீர்மானம் செய்துகொண்டாயோ?" என்று கேட்டான்.

"நான் போய் வருகிறேன், குக்லீல்மோ" என்று தோளைக் குலுக்கிக்கொண்டே சொன்ன அன்னா, "இப்போது போய்விட்டு, மறுபடியும் வருகிறேன்... டெலிபோன் செய்; நிலைமை எப்படி இருக்கிறது என்று தெரிவி—" என்றாள்.

"ஆஹா, நிச்சயம் டெலிபோன் செய்கிறேன். கை குலுக்காமலே போகிறாயே?"

"இதோ."

அவள் கையை நீட்டினுள். அதைத் தன் கையால் அவன் பிடித்துக்கொண்டு, தன்னை அறியாமலே தயங்கினுன். என்ன விஷயம்? ஏன் அவள் கை அப்படி நடுங்குகிறது? அதை அவன் இறுகப் பிடித்தான். திடீரென்று வெறி பிடித்த ஓர் எண்ணம் அவன் மனத்திலே உதித்தது: 'ஓ! அவள் தனக்கு இணங்கிவிட்டாள்.'

அவள் போன பின்பு, அவன் தனியே நின்ருன். தான் துணிச்சலுடன் சொன்ன சொல்லும் நினைத்த நினைப்பும் அவன் உள்ளத்திலே வியப்பையும் பயத்தையும் எழுப்பின. சத்தியமே வந்து தன் முன்னிலையில் நின்றுகொண்டு, "உனக்கு இன்னும் புரியவில்லையா?" என்று கேட்பது போல அவனுக்குத் தோன்றியது.

இல்லை, அவனுக்குப் புரியவில்லை. அம்மா காட்டிய குருட்டு வழியிலே அவன் சென்றுவிட்டான். படுகுழியின் ஓரத்தை அடைந்து அதில் விழப்போகிற நிலையை எட்டிவிட்டான். இப்போதுதான் அவனுக்குச் சென்ற காலத்தின் உண்மையான சொரூபம் தெரிந்தது. அவன் அடிக்கடி அன்னுவைப் பார்க்கச் சென்ற பல சமயங்களில் அவள் முகம் மலர்ந்து பிரகாசித்தது; அவன் எப்போதோ அபூர்வமாய் அவளைப் பார்க்கச் சென்ற காலத்திலே, அவள் முகம் வாடியிருந்தது. அப்புறம் அவளுக்கு நோய் வந்தது. அத்தனை வருஷ காலம் அவளை அவன் அசட்டை செய்தும் அவள் அவனைத் தவிர வேறு யாருக்கும் வாழ்க்கைப்பட முடியாது என்று பிடிவாதமாய் மறுத்துவிட்டாள். இப்படியெல்லாமிருந்தும், அவள் ஏன் வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லவில்லை? மனம் புண்பட்ட செருக்கா அல்லது அவன் உதறித் தள்ளுவானே என்ற பயமா? இல்லை; அவளுந்தான் அவனை உணர்ந்து கொள்ளவில்லை.

ஆனுல், இப்போது திடீரென்று விஷயம் தெளிவுபட்டுவிட்டது! அவள் முகம் எப்படிச் சிவந்தது! கை எப்படி நடுங்கியது! அன்னுவுக்கு இன்னும் அவனிடம் காதல் தான். "இல்லை. அது சாத்தியமில்லை" என்று அவன் தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். ஆயினும் அவன் இதயம், 'அது உண்மை; உண்மை!' என்று அடித்துக்கொண்டது. அது உண்மையே...

வேதனைப் புலம்பல் ஒன்று அவன் சிந்தனைப் போக்கை முறித்தது. பிரத்தியட்ச உலகத்துக்கு அவன் மனம் திரும்பி வந்தது. அவனுக்கு ஒரு குழந்தை - அவன் சதையோடு சதையாய், வரும் காலத்தில் அவன் குலம் விளங்கச் செய்யப்போகிற ஒரு குழந்தை- இதோ பிறந்துகொண்டிருக்கிறது. புதிய இன்பம் ஒன்று-அவன் மகன்- இதோ பக்கத்திலே வந்து நிற்கும் போது, மறைந்துபோன இன்பத்தைப்பற்றியா அவன் சிந்திப்பது? என்ன செய்தும் அன்னுவின் ஞாபகம் மறக்கமாட்டேன் என்கிறதே! இந்த இரண்டு இன்பங்களுக்குள்ளே ஒன்று அசாத்தியம்; அது செத்து மடிந்தது. மற்றது இந்தக் கணத்திலே பக்கத்தில் வந்து நிற்கிறது; நிச்சயமானது. அப்படி இருந்தும் இந்த இரண்டு இன்பங்களும் ஒன்று சேர்ந்து, பரிபூரணமாகாதா என்ற ஏக்கமொன்று அவனுக்கு உண்டாயிற்று.

"குச்லீல்மோ."

அவன் எதிரே டாக்டர் வந்து நின்ருர். அவர் முகம் வாடிக்

கலங்கியிருந்தது. குக்லீல்மோ துள்ளிநிமிர்ந்து,முணுமுணுத்தான்.

"என்ன விஷயம்? ஏதாவது விசேஷம் உண்டா?"

டாக்டர் வெகு சோர்வோடு, "ஆமாம். அவளுக்கு அபாயம். எதிர்பாராத சிக்கல்கள் ஏற்பட்டு விட்டன. என்றாலும், இன்னும் நம்பிக்கைக்கு இடம் இருக்கிறது. ஆனால், நாம் உடனே சர்ஜனின் உதவியை நாட வேண்டும். இதை உங்களுக்குச் சொல்லி விடுவது நல்லதுதானே..." என்றார்.

குக்லீல்மோவுக்குத் தலை கிறு கிறுத்தது. பாவம், அந்தப் பேதைப் பெண் தன் உயிருக்கே ஆபத்தான வலியிலும் துன்பத்திலும் உழன்று தவிப்பதை எண்ணினான்....

டாக்டர் மீண்டும் தொடர்ந்து, "உங்களை ஒன்று கேட்க வேண்டும். எது நல்லது என்று உங்கள் மனச் சாட்சிக்குத்தான் தெரியும். தாய், குழந்தை இரண்டு பேரிலும் ஒருவரைத்தான் நான் காப்பாற்ற முடியுமென்றால், யாரைக் காப்பாற்றுவது? தாயையா, குழந்தையையா?" என்று கேட்டார்.

செத்த சவம்போல் முகம் வெளிறிட்டவனாய், "என்ன?" என்று கத்தினான் குக்லீல்மோ.

"ஆமாம். நிலைமை அப்படித்தான் இருக்கிறது. மருத்துவ வித்தையால் அவர்கள் இருவரில் ஒருவரைத்தான் காப்பாற்ற முடியும். இதை நான் உங்களுக்கு வாக்களிக்க முடியும். இரண்டு பேரையும் காப்பாற்றுவதென்றால், சாத்தியமாகத் தோன்றவில்லை...சற்று யோசித்துவிட்டுச் சொல்லுங்கள்."

விதியின் சதியால் தனக்கு முன் வந்து நிற்கும் புது வாழ்வின் போக்கு அப்போது பளீர் என்று அவனுக்குப் புலனாயிற்று. ஒரு மகன்; அவன் வாழ்க்கை லட்சியம். அன்னா; இன்பப் பொக்கிஷம். இதன்மேல் எல்லாம் மாறிவிடும்; எல்லாம் புதுமையாகிவிடும். உப்பு சப்பற்ற வாழ்வு விலகி, அவன் அடிக்கடி கனவு கண்ட பிரகாசமான இன்ப வாழ்வு கிட்டிவிடும். வெறுங் கடமை என்பது போய்க் காதல் தோன்றும்; வறட்டு வழக்கம் என்பது போய் ஆசை மிகும்... ஜீன் செத்தால், அன்னாவை அவன் மணக்கலாம்...கையை நீட்டினால் போதும்; அவள் கிட்டுவாள். யார் அவனைக் குறை சொல்ல முடியும்? வாழ்க்கை நியதிகளின்படி, மனித இயல்பின்படி தானே அவன் நடக்கிறான்?

"அட தெய்வமே, தெய்வமே!" என்று புலம்பினான் குக்லீல்மோ.

அவன் இதயம், "உன் மனைவியிடம் உனக்கு ஆசையில்லை. வேண்டாப் பெண்டாட்டியோடு தான் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கப்போகிறாயா? அதுவும் தன்னந்தனியே, குழந்தை குட்டியில்லாமல்...? யோசித்துப் பார்: இரண்டாவது முறையும் மற்றவளை இழந்துவிடப் போகிறாய்...அதுவும் உன் பிசகாலேயே...சொல்; இரண்டே வார்த்தை சொல்... அவற்றைச் சொல்வது என்ன அப்படிப் பெரிய கஷ்டமா? அட முட்டாளே, சொல்: 'குழந்தையையே காப்பாற்றுங்கள்' என்று சொல்" என்றது.

அவன் தலை நிமிர்ந்தான்; வெளிறிட்ட முகத்துடன் இதைச் சொல்லிவிட்டான்: "தாயைக் காப்பாற்றுங்கள்!"

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

அரசியல் நுட்பம்

குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ராஜாங்கம் செய்துகொண்ட சட்டம், கைக்கொண்ட கட்டுப்பாடு இவை சரியா, உசிதமா என்பவைபற்றி மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம்; ஆனால் ஒரே ஓர் ஒழுங்கை மட்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அது கைவிடக் கூடாது. சரித்திர ரீதியான தொடர்ச்சியை மீறாது நடப்பதுதான் அந்த ஒழுங்கு.

புதுமையான எதையும் அரசியல் துறையில் கைக்கொள்வது பத்திரமான செயல் அல்ல. மெதுவாகவும், படிப்படியாகவும், கால நிலைமைகளுக்கேற்றபடி ஜாக்கிரதையாக வளைந்து கொடுத்துக்கொண்டும், நயமான மாறுதல்களைச் செய்துகொண்டும் வளர்ச்சி யடைந்தால்தான், அரசியலில் கணிசமான பலன் காண முடியும். தாண்டிக் குதித்து எதையும் செய்துவிட முடியாது.

அதைவிட முக்கியமான ஒரு விஷயம் இது: ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்கள் சொந்த அநுபவங்களை அநுசரித்தே நடந்துகொள்ளவேண்டும். தனிப்பட்ட மனிதர்கள், எப்படி அநுபவத்தைப் பிறரிடம் கடன் வாங்க முடியாதோ அப்படியேதான் தேசங்களும் அதைக் கடன் வாங்க முடியாது. பிற நாட்டு மக்களின் சரித்திரம் நமக்கு ஒளி கொடுக்கலாம். ஆனால், நாம் செயல் புரிவதற்கான நிலைமைகளை அவை நமக்குப் படைத்துத் தரமாட்டா. ஒவ்வொரு தேசமும் தன் சென்ற கால சரித்திரத்தோடு ஒட்டியே முன்னேறவேண்டும்; குறுக்கு வழியிலே ஓடித் தன் லட்சியத்தை எட்டிப் பிடித்துவிட முடியாது.

—வுட்ரோ வில்ஸன்.

February '52 Regd. No. M. 4975

மஞ்சரி

கர - மாசி

ஊரும் உலகமும் 1
லட்சுமணனின் கோபம் 4
சென்னை டெஸ்ட்: ஆட்டக்காரர் யார் யார்? 9
ஆட்டக்காரர் கையெழுத்துக்கள் 15
இது உங்களுக்குத் தெரியுமா? 16
கிரெம்லின் கைதி 17
நீர்க் குதிரை 22
குழந்தையிடம் அதிகப் பேச்சு .. பேரெண்ட்ஸ் மகஸீன் 25
ஆப்பிரிக்காவில் இந்து நாகரிகம் .. .. மாடர்ன் ரெவ்யூ 29
மெக்கா யாத்திரை 33
கறையானுடன் போர் .. திருவாங்கூர் - கொச்சிச் செய்தி 38
கார்ட்டூன் கதம்பம் (படம்) 40
காத்திருக்கும்போது (படம்) .. .. .. சங்கர்ஸ் வீக்லி 41
வனசங்கரி .. .. கர்மவீர் 42
புதிய சீனாவில் சம்பளம் .. .. ஹரிஜன் 47
நாடி ஜோஸ்யம் .. .. பாரதி 49
கருத்தடையில் புது முறை 54
அங்க அபிநயங்கள் 57
ஜீஸ் கண்ணாடி தயாரித்த நிபுணர் 62
க்விஸ் 65
ரமணர்: வாழ்வும் வாக்கும் 66
மனத்தத்துவ நிபுணர் (சிறு கதை) .. அசோக் சட்டர்ஜி 69
ஆண் உள்ளம் (வெளிநாட்டுக் கதை) ஜியார்ஜெரி காண்ட்ரி 73
அரசியல் நுட்பம் .. .. 3-ஆம் அட்டை